December 16 - December 22, 2007 பக்கங்கள் - 28

20.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்

யாழ் விலை 40.00

## ஜோக்கராகும் ஜெயராஜ் கோமாளியான மேர்வின்!



## சமஷ்டி: போராட்டத்தை சர்வதேச ரீதியில் நியாயப்படுத்த எடுத்த நகர்வு அது!

# அரசின் போர்ப் பிரகடனமும் பேச்சுக்கான அழைப்பும்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை ஆறாண்டைக் கடக்கும் முன்பே மூச்சை அடக்கி விடும் சூழல் மெல்ல மெல்ல உருவாகிக்கொண்டிருக்கிறது.

அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இரு தரப்புக்களிலும் எந்தத் தரப்பாவது அதில் இருந்து விலக வேண்டுமானால் 14 நாள்கள் முன்னறிவித்தலை



அனுசரணையாளர்களான நோர்வேக்கு கொடுக்க வேண்டும்.

தெற்கில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் கருத்துக்களையும் கள நிலைவரத்தையும் உற்றுநோக்கி ஆராய்ந்தால் விலகும் முன்னறிவிப்பை நோர்வேக்கு வழங்க வேண்டிய சூழல் ஏற்படமாட்டாது என்ற செய்தியே வெளிப்படுகின்றது.

யுத்தநிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடிக்கின்றோம் என சர்வதேசத்துக்குக் கூறிவரும் அரசுத் தரப்பு அனுசரணையாளர்களான நோர்வேக்கு தெரியாமல் - முன்னறிவிப்புக் கொடுக்காமல் - அதில் இருந்து விலகப்போகின்றது.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளை, நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்தும், வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம இந்திய பத்திரிகை ஒன்றுக்கு வெளியிட்ட கருத்தும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசுத் தரப்பு ஒரு தலைப்பட்சமாக வெளியேறும் என்ற செய்தியையே கூறிநிற்கின்றன.

''எவ்வாறான இடையூறுகள் வந்தாலும் பயங்கரவாதத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் இருந்து ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.

''மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு பயங்கரவாதம் அழிக்கப்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகிறோம். பயங்கரவாதிகளின் இறுதிமூச்சு முடியும் வரை அவர்களுக்கு எதிராக நாம் போர் தொடுப்போம்''

இப்படி ஜப்பானில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

அதேபோன்று இந்திய பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் -

''விடுதலைப் புலிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தையை நடத்தவே அரசு விரும்புகின்றது. போர்நிறுத்தம் தொடர்பாகவோ அன்றி அது சம்பந்தப்பட்ட வேறு எந்த விடயங்கள் குறித்தோ விடுதலைப் புலிகளுடன் பேச அரசு தயாரில்லை''

- வெளிவிவகார அமைச்சர் ரோகித போலகொல்லாகம இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2005ஆம் ஆண்டு மஹிந்த அரசு ஆட்சிக்கு வந்த பின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக சர்வகட்சி மாநாடு, சர்வகட்சிகளின் தெரிவுக் குழு, நிபுணர் குழு என பலதரப்பட்ட அமைப்புக்களை நிறுவி இன்னமும் இறுதித் தீர்வு குறித்து உருப்படியான தீர்வை எட்டமுடியாத நிலையில் அல்லாடிக்கொண்டு நிற்கின்றது.

அண்டை நாடான இந்தியா முதல்கொண்டு மேற்கு நாடுகள் வரை ''பேச்சு மூலம் தீர்வைக் காணுங்கள்; இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்'' என வற்புறுத்திக் கொண்டிருக்கின்றன. ஆனால்அந்தத் தீர்வுக்கான இணக்கப்பாடு ஒன்றைக் காணமுடியாதநிலையில் அரசுத் தரப்பு அல்லாடிக்கொண்டிருக்கின்றது.

தெற்கு அரசியல் கட்சிகள் மனப்பூர்வமாக தமது யோசனைகளை முன்வைக்காத காரணத்தால் அந்த முயற்சி இழுபட்டுக்கொண்டு போகின்றது.

ஒரு பக்கம் பயங்கரவாதம் என்றும் மறுபக்கம் அரசியல் பேச்சுவார்த்தை என்றும் இலங்கை அரசுத் தலைமைகளிடம் இருந்து முரண்பாடான செய்திகள் வெளிவருகின்றனவே தவிர உருப்படியான தீர்வைக் காண அவை முயலவில்லை என்பதையே அதன் செயற்பாடுகள் காட்டுகின்றன.

அரசுத் தலைவரோ பயங்கரவாதிகளை ஒழிக்கப் போவதாக சபதம் எடுத்து நிற்க -

அந்த அரசில் முக்கிய பதவி வகிக்கும் ரோகித போகோல்லாகம விடுதலைப் புலிகளுடன் பேசத் தயார் என அறிவிக்கின்றார்.

முரண்பாடாக அரசுத் தரப்பில் இருந்து

## தென்னிலங்கையையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற நடைபெறும் இரட்டை நாடகம்

செய்திகள் வெளிவந்தாலும் -

உண்மை நிலை என்ன என்பதை சற்று ஆராய்வோம்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து சிங்களத் தலைமைகளால் தமிழ் மக்கள் புறக்கணிக் கப்பட்டு வந்தனர். அதற்கு எதிராக தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுத்துவந்தனர். பல்வேறு சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர். பேரினவாத சக்திகள் அவற்றை எல்லாம் தமது இரும்புக்கரம் கொண்டு அடக்கிவந்தன.

இதன் விளைவாக ஆயுதப் போராட்டம் பரிணமித்தது. இந்த ஆயுதப் போராட்டம் விடுதலை நோக்கிய போராட்டமாக வளர்ச்சி கண்டு நிற்கின்றது.

தமிழ்மக்கள் தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமைகளுடன் வாழவேண்டும் என்ற அபிலாஷையுடன் இந்த விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

முப்படைகளைக் கொண்ட தனி நிர்வாக ஆட்சிகொண்ட நடைமுறை அரசுக்கான சகல அம்சங்களுடன் தமிழர் தரப்பால் நிர்வாகம் ஒன்று வரித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் பரிணாம வளர்ச்சியடையக் காரணம் சிங்களத் தலைமைகள்தான். காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த தலைவர்கள் தமது ஆட்சியை தமது ஆட்சிக்காலம் முடிவடையும்வரை இழுத்துச் செல்வதற்காக சமாதானம் என்றும் போர் என்றும் இரட்டைப்போக்கைக் கடைப்பிடித்ததால் இன்று யுத்தம் தீவிரமாகி நாட்டின் பாதுகாப்பு செலவீனத்தை பலமடங்கு அதிகரித்து அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

எந்தத்தரப்பாலும் யுத்தத்தில் வெல்லமுடியாது என்று சர்வதேச மற்றும் உள்ளூர் விமர்சகர்கள் எதிர்வு கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

83 இனக்கலவரத்துடன் தீவிரமான போர் 2002 பெப்ரவரியில் கைச்சாத்தான போர்நிறுத்த உடன்படிக்கையுடன் ஓய்வுக்கு வந்தது.

சிங்களத் தலைமையும் சர்வதேசமும் நீட்டிய நேசக்கரத்தை விடுதலைப் புலிகளின் தலைமை பற்றி மேற்கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் யுத்தம் ஓய்வுக்கு வந்தது.

யுத்தம் ஓய்வுக்கு வந்தபின் இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக்காண தமிழர் தரப்பு இணங்கி ஐ.தே.கட்சியுடன் ஆறு சுற்றுப்பேச்சுக்களை நடத்தியது. அந்தப் பேச்சுக்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை, இறுதிக்கட்டத் தீர்வு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டு இணக்கம் ஏற்பட்டபோதும், அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் ஒப்புதல் கிட்டாததால் பயன் ஏதும் கிடைக்கவில்லை.

மீண்டும் புதிய அரசுடன் இரண்டு கட்டப் பேச்சுக்கள் நடந்த போதும் அந்தப் பேச்சுக்களும் தோல்வியில் முடிந்தன.

தமிழரின் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேசத்துக்கும் தென்னிலங்கை தலைமைகளுக்கும் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான - அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளான - விடுதலைப் புலிகள் வழங்கிய இடைவெளி முடிவுக்கு வரப் போகின்றது.

கடந்த மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் வெளியிட்ட கருத்துக்கள் இதையே கூறிநிற்கின்றன.

''தமிழரின் தேசியப் பிரச்சினையில் சர்வதேச நாடுகளின் நகர்வுகளும் நடவடிக்கைகளும் எம் மக்களுக்குத் திருப்தி தருவனவாக அமையவில்லை. இந்நாடுகள் மீது எமது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை இன்று தகர்ந்து போயிருக்கின்றது. இந்நாடுகளின் நடுநிலைச் செயற்பாட்டிலே இன்று பெரும் கேள்விக்குறி எழுந்திருக்கின்றது''

இப்படி அவர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

பேச்சுக்கு அடிப்படையான யுத்த நிறுத்தம் குறித்துப் பேசப்போவதில்லை என்ற ரோகித போகொல்லாகமவின் அறிவிப்பும் -

பயங்கரவாதிகளின் இறுதிமூச்சு முடியும்வரை அவர்களுக்கு எதிராக போர் தொடுப்போம் என்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவிப்பும் -

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர்தின உரைமூலம்



சர்வதேசத்துக்கு விடுத்துள்ள அறிவிப்பும் -

மீண்டும் நாலாம் கட்ட ஈழப்போருக்குள் நாடு மூழ்கப் போகின்றது என்பதற்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

கடந்த கால வரலாறுகளை உற்று நோக்கும்போது, யுத்தம் இடை இடையே நிற்கும், பின்னர் தீவிரமாகும்.

அரசுத் தரப்பில் இருந்துவரும் போர்பிரகடனங்களும் யுத்தம் திணிக்கப் பட்டால் எதிர்கொள்வோம் என்ற விடுதலைப் புலிகளின் அறிவிப்பும் சமாதான காலம் முடிவுக்கு வரப் போகின்றது என்ற எச்சரிக்கையையே விடுக்கின்றன.

சமாதானத்துக்கு விடுதலைப் புலிகள் வழங்கிய கால அவகாசம் முடிந்து யுத்தம் எப்போது வெடிக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவும் நேரத்தில் பிரதம நீதியரசர் கருத் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

''.... யுத்தத்தின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. வடக்கு - கிழக்கில் மக்கள் பிரச்சினைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அங்கு குண்டுகளை வீசுவதன் மூலமோ அல்லது பாரிய யுத்தத்தை மேற்கொள்வதன் மூலமோ சமாதானத்தை நிலைநிறுத்த முடியாது...'' இப்படி நாட்டின் பிரதம நீதியரசர் சரத் நந்தன சில்வா கருத்து வெளிட்டுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி நடந்த வைபவம் ஒன்றில் கலந்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்துள்ள கருத்து அரசுத்தலைமையின் காதில்

**யாழவன்**

ஏறுமா?

கடந்த ஜூன் மாதத்தில் கொழும்பில் இருந்து தமிழ் மக்களை பஸ்கள் மூலம் வடக்கு - கிழக்குக்கு அனுப்பிய அரசின் செயற்பாடு -

கடந்த வாரங்களில் கொழும்பில் உள்ள தமிழர்களை அள்ளி பூஸா முகாமில் தடுத்து வைத்த அரசின் செயற்பாடு -

ஆகியவற்றில் உயர் நீதிமன்றத்தில் அரசு மூக்குடைபட்டிருந்தது.

இதே போன்று நீதிமன்றத்தில் இல்லாவிட்டாலும் வெளியில் அவர் தெரிவித்த ஆலோசனையை அரசு புரிந்து செயற்படப் போகின்றதா? அல்லது நாலாம் கட்டப் போருக்குள் நாட்டை மூழகடிக்கப் போகின்றதா? பொறுத்திருந்து பார்ப்போம். *

# முரளி என் கணவர்.
# என் உலகமே அவர் தான்...!




கிரிக்கெட் முரளிக்கு தொழில் மட்டும்தான் அவரின் வாழ்க்கைமைதானம் வீடுதான்.

ஒரு தந்தையாக, கணவராக எங்களைக் காத்து வருகிறார்.

முரளிக்கு எங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியும். ஆயினும் எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று யாரால் சொல்ல முடியும்?

அதனால் தான் லை.்.ப் இன்சுவரன்ஸ் ஒன்றைப் பெற்றிருக்கிறார்.

## செலிங்கோ லை.:.ப்

**செலிங்கோ இன்சுவரன்ஸ்**

*சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ*

134, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: (011) 2 461 461 இணையத்தளம்: www.ceylincolife.com



# ஈழத் தமிழர் பாதையில் மலேசியத் தமிழர்களும்?

# இனச் சுத்திகரிப்பால் குமுறும் மலேசியத் தமிழர்கள்

மலேசியாவில் வாழும் இந்தியத் தமிழர்கள் தாம் பெரும்பான்மை இஸ்லாமிய அரசால் ஓரங்கட்டப்படுவதாக சமீபத்தில் குரல் எழுப்பியுள்ளனர். இந்துக் கோவில்கள்



அப்துல்லா அஹமட் பதா

இடிக்கப்படுவதாகவும், கல்வி, வேலைவாய்ப்புக்களில் இந்தியர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவதாகவும் இந்தியத் தமிழர்கள் கூறியுள்ளனர். இந்திய தமிழர் உரிமை அமைப்புக்களில் முக்கியமான Hindu rights activist force (Hindraf) என்ற அமைப்பு கோலாலம்பூரில் அண்மையில் நடத்திய அரச எதிர்ப்புப் பேரணியில் ஆயிரக்கணக்கான இந்துக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. பிரதமர் அப்துல்லா அஹமட் பதாவியின் அரசைக் கண்டித்தே இப் பேரணி நடந்துள்ளது.

இலங்கையில் தமிழர்கள் ஓரங்கட்டப்பட்ட வரலாற்றின் தொடர்ச்சியாக இப்போது மற்றொரு ஆசிய நாடான மலேசியாவிலும் அதே கதை அரங்கேறியுள்ளது. ஆனால், இலங்கைத் தமிழர்கள் போலன்றி மலேசியத் தமிழர்கள் சமீப காலத்திலேயே அந்நாட்டில் குடியேறியவர்களாவர். அதாவது பிரிட்டிஷ் காலனித்துவ காலத்தில் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களாக அழைத்துவரப்பட்டவர்கள் இப்போது கல்வி, தொழில் துறைகளில் முன்னேறி முன்னணி வகிக்கின்றனர். மலேசியாவின் மொத்த சனத்தொகையில் ஐந்து சதவீதத்திற்கும் குறைவானவர்களே இந்த மலேசிய இந்தியர்கள். இவர்கள் தவிர மிக மிக சொற்ப தொகையான இலங்கைத் தமிழர்களின் சந்ததியினரும் உள்ளனர். மலேசிய இந்தியர்களில் பெரும்பான்மையினர் இந்துத் தமிழர்களாவர். மிகச் சிறிய தொகையினர் முஸ்லிம்கள். இந்துக்களாக உள்ளவர்களே ஓரங்கட்டப்படுவதாக எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது. காந்தியின் படங்களைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இவர்களை மலேசிய அரசு கைது செய்து தடுத்து வைத்துள்ளது.

''இன்றுவரை நாம் காந்தியையே தலைவராகக் கருதுகிறோம். பிரபாகரனை எமது தலைவராக்க வேண்டிய நிலை இனிமேல் வரலாம்'' என Hindraf அமைப்பின் தலைவர்களில் ஒருவர் கூறினார். இதையடுத்து Hindraf அமைப்பு புலிகளுடன் தொடர்புடையது என மலேசிய அரசு கூறியுள்ளது.

இதனை அவ்வமைப்பின் சட்டத்தரணியான உதயகுமார் மறுத்துள்ளார். Hindraf தலைவர்களில் ஒருவரான வேதமூர்த்தி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பல தமிழ்த் தலைவர்களைச் சந்தித்துள்ளார். ஜெயலலிதா கூட மலேசிய அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். கருணாநிதியின் கண்டனத்தை கண்டித்து மலேசிய வெளிவிவகார அமைச்சர் ''எமது நாட்டின் உள்விவகாரத்தில் தலையிட வேண்டாம்'' என கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளின் தொடக்கத்தில் இந்திய- இலங்கை அரசுகளுக்கிடையே இருந்த முறுகலை ஒத்த ஒரு நிலை மலேசிய - இந்திய அரசுகளுக்கிடையே ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது. ஆனால், இங்கு ஒரு முக்கிய வேறுபாட்டைக் கவனிக்க வேண்டும். இலங்கைத் தமிழர்கள் மலேசியாவின் இந்தியத் தமிழர்களை விட வேறுபட்டவர்கள். அதாவது, இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர்கள் இந்தியா விலிருந்து அண்மைக் காலத்தில் குடியேறியவர்கள் அல்லர். ஆனால், மலேசியத் தமிழர்கள் மிக அண்மைக் காலத்தில் மலேசியாவில் குடியேறியவர்கள். சுருங்கச் சொன்னால் மலேசியத் தமிழர்கள் மலேசியக் குடிமக்களாயினும் இந்தியர்கள் என்ற தமது முத்திரை அடையாளத்தை இன்னும் இழக்கவில்லை. எனவே, இந்திய அரசு நேரடியாகத் தலையிட வேண்டிய கட்டாயத்திலுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் பாராமுகமாக உள்ளதுபோல் இந்தியாவால் இந்த விடயத்தில் இருக்கமுடியாது. மற்றொரு முக்கிய விடயம் இது இந்து - முஸ்லிம் விவகாரமாக இருப்பதால் பாரதிய ஜனதா கட்சியும் கோதாவில் இறங்கியுள்ளது. இந்துக் கோவில் இடிப்பு என்பதை கேட்டு பாரதிய ஜனதா கட்சி சும்மா இருக்கப்போவதில்லை. ஏற்கனவே காங்கிரஸ் தலைவர்களை முந்திக்கொண்டு பி.ஜே.பி. தலைவர்கள் அறிக்கை விடுத்துள்ளனர்.

கருணாநிதி கண்டனம் தெரிவித்ததை பி.ஜே.பி. தலைவர்களில் ஒருவரான வெங்கையா நாயுடு பாராட்டியும் உள்ளார். ஆக விவகாரம் சூடு பிடிக்கிறது என்பதே உண்மை.

இலங்கையின் சிங்கள - தமிழர் பிரச்சினை பெரும்பாலும் இனமொழி அடிப்படையிலானதே அன்றி மத அடிப்படையிலானதல்ல. மலேசியப் பிரச்சினையோ மதத்தின் பாற்பட்டது. இது இப் பிரச்சினைக்கு இன்னும் தீவிரத் தன்மையை வழங்கக் கூடும். மலேசியா, இலங்கை போலன்றி பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த ஒரு நாடாகும். எலக்ரோனிக் உபகரணம், மோட்டார் வாகனம் என பல உற்பத்திகளில் முத்திரை பதித்துள்ள ஒரு நாடு அது. எனவே, அந்நாட்டின் பிரச்சினை இலங்கைப் பிரச்சினையினின்றும் வேறுபட்டதாக இருக்கக்கூடும். மலேசியாவின் முஸ்லிம் பெரும்பான்மை அரசால், இந்திய தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்படுவது இன்று நேற்று




தொடங்கியதல்ல. முன்னாள் பிரதமர் டாக்டர் மஹதீர் முஹம்மதின் காலத்திலேயே இது தொடங்கிவிட்டது. இரும்புக்கரம் கொண்ட ஒரு சர்வாதிகாரியைப் போலவே மஹதீர் நடந்துகொண்டார்.

மலேசியப் பொருளாதாரத்தை உயர்த்தியதற்காக அவர் பெரிதும் பாராட்டப்படுகிறார். ஆனால், ஜனநாயகம் என்ற முனையில் இருந்து பார்த்தால் அவரது செயற்பாடுகள் கடும் விமர்சனத்துக்கு உள்ளாக நேரிடும். இந்தியர்களை மட்டுமன்றி தன்னை எதிர்த்த தனது சக முஸ்லிம்களைக் கூட அடக்க அவர் கையாண்ட விதம் கேள்விக்குறியாகவே இருந்தது. தனது துணைப் பிரதமர் அன்வர் இப்ராஹிமை அவர் சிறையிட்ட முறை இதற்குச் சான்று. அடுத்தடுத்து வந்த மலேசிய அரசுகள் ஜனநாயகத்தை மிதிக்க



மன்மோகன்சிங்

முயன்றன என்பது இரகசியமல்ல. சமீபத்தில் உகண்டாவில் நடந்த பொதுநலவாய மாநாட்டில் பாகிஸ்தானை இடைநிறுத்தும் தீர்மானத்தை மலேசியா எதிர்த்தது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானில் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்திருக்கும் முஷாரப்பை மலேசியா ஆதரித்ததிலிருந்து மலேசியா எங்கே போகிறது என்பதைத் தீர்மானிப்பது கடினமல்ல. இலங்கைத் தமிழர்கள் இலங்கையின் சனத்தொகையில் 12 வீதமாக இருந்தபோதும் மலேசியத் தமிழர்கள் அந்நாட்டின் சனத்தொகையில் அவ்வளவு கணிசமான தொகையினரல்லர். இருந்தபோதும் இந்தியப் பின்னணியைக் கொண்டிருப்பதால் அவர்களது பலம் இலங்கைத் தமிழர்களின் பலத்தைவிட பலமடங்கு அதிகமே. தம்மை அடிமைகளாக மலேசியாவுக்கு அழைத்து வந்ததை இட்டு நட்டஈடு வழங்க வேண்டுமென மலேசியாவிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்திடம் இந்தியத் தமிழர்கள் பேரணியாக சென்று மகஜர்சமர்ப்பித்துள்ளனர். இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எதிராக போரிடுவதாக கூறும் பிரிட்டன், இஸ்லாமிய மலேசிய அரசால் இந்தியர்கள் நசுக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்கவும் முடியாது. எனவே, வரும் காலங்களில் இந்தப் போராட்டம் மேலும் பலரது தலையீட்டுக்கு வழிவகுக்கலாம் என்பது மட்டும் உண்மையாகும்.

என்.சுரேந்திரஜித்

# சமஷ்டி போராட்டத்தை-சர்வதேச ரீதியில் நியாயப்படுத்த எடுத்த நகர்வு அது!

## ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர் - XII

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் சமாதானப் பேச்சுக்களின் நடுவே எனக்களித்த பேட்டி ஒன்றின் சில பகுதிகளைத் தந்து, அந்தப் பேட்டியில் அவரது மனதை சதா அரித்துக் கொண்டிருந்த ஒரு விடயம் மெலிதாகப் புலப்படுகின்றது என்று குறிப்பிட்டு, அதை உங்களால் புரிந்து கொள்ள முடிகின்றதா என்று கடந்த வாரம் கேட்டிருந்தேன் அல்லவா?

ஜேர்மனியின், பேர்ளின் நகரில், பெப்ரவரி மாதம் 7,8ஆம் திகதிகளில் நடைபெற்ற ஐந்தாவது சுற்று அமைதிப் பேச்சின் பின்னரே - அடுத்து வந்த நாட்களிலேயே - இந்தப் பேட்டியை அவர் வழங்கியிருந்தார். அச்சமயம் அருகில் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் கூட இருந்தார் என்று எனக்கு ஞாபகம்.

இக்கட்டுரைத் தொடர் பிரசுரமாகத் தொடங்கிய சமயம், இத் தொடர் குறித்து என்னுடன் தொலைபேசியில் சிலாகித்து உரையாடிய தமிழ்ச்செல்வன், கட்டுரைத் தொடரின் நடுவே - அதை முற்றாக வாசித்து முடிக்காமலேயே - தன் வாழ்க்கைப் பயணத்தை விட்டுப் பிரிந்து விட்டார் என்பது வேதனைக்குரியதே.

ஆனால் அந்தத் தொலைபேசி உரையாடல் - இக்கட்டுரைத் தொடர் குறித்த நமது உசாவல் - பின்னர் சற்று திசை திரும்பி ஒரு பரபரப்புக்கும் வழி செய்ததை இங்கு குறிப்பிடலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சமயம், மஹிந்த ராஜபக்ஷ அணிக்கு ஆதரவாக முடிவு எடுப்பதற்காகப் புலிகள் பெரும் தொகைப் பணத்தை அந்த அணியிடமிருந்து பெற்றுக் கொண்டனர் என்ற குற்றச்சாட்டு புலிகள் மீது பரவலாக வெளிவந்திருந்தமை குறித்து நான் தமிழ்ச்செல்வனிடம் கேள்வி எழுப்பியதும் அவருடனான எனது இந்தக் கடைசித் தொலைபேசி உரையாடலின்போதுதான்.

அதற்குத் தமிழ்ச்செல்வன் அளித்த மறுப்பும், விளக்கமும் இவ்விடயத்தில் புலிகள் தரப்பின் முதல் உத்தியோகபூர்வ பதிலாக 'உதயன்', 'சுடர் ஒளி' யிலும் பின்னர் தேசிய, சர்வதேச ஊடகங்களிலும் பரபரப்பாக வெளிவந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கவைதான்.

சரி. இனி விடயத்துக்கு வருவோம்.

இவ்வளவு ஈகங்கள், உயிர்த்தியாகங்கள், இழப்புக்களுக்கு மத்தியில் முன்னெடுக்கப்படும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் பின்புலத்தில் நீதி, நியாயம், தார்மீக அடிப்படை புதைந்து கிடக்கின்றது.

இலங்கை இனப்போரில் ஈழத்தமிழர்களின் பக்கத்திலும், அவர்களின் போராட்டத்தை முன்னெடுக்கின்ற புரட்சிகர விடுதலை அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளின் பக்கத்திலும் உள்ள நியாயங்கள் சர்வதேசத்துக்கு சரிவர உணர்த்தப்படவில்லை. சர்வதேசம் சரியாக அவற்றை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. உலக சமூகம் தமிழரின் பக்கத்தில் உள்ள பொருளங்களை சரிவர எடைபோட்டு உள்வாங்கிக்கொள்ளவில்லை என்ற ஆதங்கமும், வருத்தமும் பாலா அண்ணனுக்கு கடைசிவரை இருந்தன.

சர்வதேசத்தை சரியான வழிக்குத் திருப்புவதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பு தன் தோள்மேல் சுமத்தப்பட்டிருப்பதாகவே அவர் உணர்ந்தார். அது குறித்தே சதா சிந்தித்துக்கொண்டிருந்தார். அதுவே அவரது மனதை அரித்துக் கொண்டிருந்தது.

கடந்த வாரம் கொழும்பில் பரபரப்பான சில கருத்துக்களை, விடைபெற்றுச் செல்லும் பிரிட்டிஷ் தூதுவர் டொமினிக் சில்க்கொட் பகிரங்கமாக வெளியிட்டிருந்தார்.

''தனித் தமிழீழம் என்ற தமிழர்களின் அரசியல் அபிலாஷையை சட்ட முரணானது என்று கூற வரவில்லை. ஆனால் அதை எட்டுவதற்காக விடுதலைப் புலிகள் முன்னெடுக்கும் மார்க்கம் தான் ஏற்றுக்கொள்ளவே முடியாதது'' - என்ற சாரப்பட அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

பிரிட்டனிடம் மாத்திரம் அல்ல, முழு மேற்குலகிடமும், இந்தியா போன்ற ஈழப் பிரச்சினையில் நெருங்கி சம்பந்தப்பட்ட தரப்புக்களிடமும் இத்தகைய ஒரே கருத்தே அன்றும் சரி, இன்றும் சரி நீடிக்கின்றது.

இந்தக் கருத்தியல் நிலைப்பாட்டை நேர் சீரமைத்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் அந்தப் போராட்டத்துக்கான பாதையையும் செப்பனிடச் செய்வதும், அவற்றுக்கு சர்வதேச அங்கீகாரத்தையும், அது எட்டப்படவிட்டால் ஆகக் குறைந்தது எதிர்ப்பின்மையையும் பெற்றுத்தருவதுமாக, இரட்டை நோக்குக் கொண்டதாக பாலசிங்கத்தின் அவாவும், கருத்தும், செயல் இலக்கும், சிந்தனையும் எந்நேரமும் அமைந்திருந்தன.

அமைதிப் பேச்சுக்களில் சாணக்கியமாகக் காய் நகர்த்துவதன் மூலம் ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பான சர்வதேசப் பாதையை சரியான தடத்தில் கொண்டு வந்து நிறுத்தலாம், நிறுத்த முடியும் என்று பாலசிங்கம் நம்பினார். அதையே அந்தப் பேட்டியின் வரிகளுக்கிடையில் பிணைந்து கிடக்கும் அவரது கருத்துக்கள் உணர்த்துவதை நீங்கள் நோக்கலாம். அதற்காக அந்தப் பேட்டியின் சில பகுதிகளை மீண்டும் ஒரு தடவை உங்களுக்கு இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

''...சர்வதேச உலகம் பேச்சு நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு நாடும் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு இடமளித்து ஆதரவுதர முண்டியடிக்கின்றன. அது இந்த முயற்சியில் அவர்களின் ஈடுபாட்டைக் காட்டுகின்றது. மேற்குலகு நாடுகளின் ஆர்வத்திற்கும், அக்கறைக்கும் மத்தியில் - அந்த புறச்சூழ்நிலையில் - சர்வதேசக் கண்காணிப்பில் இந்தப் பேச்சு நடக்கின்றது....

''தமிழ் மக்கள் தங்களுக்கு நியாயம், நீதி கேட்கிறார்கள். எமது தாயத்தில் சுதந்திரமாக - கௌரவமாக - எம்மை நாமே ஆளக்கூடிய விதத்தில் - வாழ விடுங்கள் என்று நியாயமான கோரிக்கையைத்தான் முன்வைத்துள்ளார்கள்.

''நாம் நாட்டைப் பிரிக்க விரும்பவில்லை. நாங்கள் பயங்கரவாதிகள் அல்லர். பல்வேறு நாடுகளில் இருப்பது போன்று சமஷ்டி முறையில் - தன்னாட்சி அடிப்படையில் - தமிழருக்கு நியாயமான தீர்வு ஒன்றைத் தாருங்கள் என்றுதான் கோருகின்றோம். உலக நாடுகள் எமது இந்த நிலைப்பாட்டைப் பெரிதும் வரவேற்றுள்ளன. அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய சமூக நாடுகள் அனைத்தும் வரவேற்றுள்ளன.

''...எங்களது இந்தக் கோரிக்கை (சமஷ்டித் தீர்வுக் கோரிக்கை) - கொள்கை - வெறும் உணர்ச்சிபூர்வமான ஒன்றல்ல. விஞ்ஞானபூர்வமான அரசியல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது அது.

### - வித்தி -

''...இப்போது ஒரு நாடகம் நடக்கிறது. பாலசிங்கமும் அதில் நடிக்கின்றார்.

''...இந்தப் பேச்சு ஓர் இராஜதந்திர நகர்வு. இலட்சியப் பயணத்தை நோக்கிய நகர்வு.

''எமது போராட்ட நியாயத்தை சர்வதேச உலகுக்கு எடுத்துரைக்கவும் வாய்ப்புத் தேவை. இந்த இடைவெளியைப் பயன்படுத்தி ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தேசமாகச் சென்று அதையும் செய்து வருகின்றோம்.

''முன்னர் உலகத்தால் ஓரங்கட்டப்பட்டு, ஒதுக்கப்பட்டிருந்த நாம் எமது பிரச்சினையை இன்று ஒவ்வொரு நாடாகச் சென்று எடுத்துரைக்க வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.'' - என்று அந்தப் பேட்டியில் கூறியிருந்தார் பாலசிங்கம்.

பாலா அண்ணன் சிற்பியாக இருந்து செதுக்கப்பட்ட சமஷ்டித் தீர்வு யோசனைக் கருவை இந்தப் பின்புலத்தில் நோக்கினால் அதில் புதைந்து கிடக்கும் இராஜதந்திரத்தை - சாணக்கியதை - நாம் புரிந்து கொள்ள முடியும்.

அதற்கான நியாயப்படுத்தலை நான் பாலா அண்ணனின் வார்த்தைகள் ஊடாகவே தர முயல்கின்றேன்.

''எமது நியாயமான விடுதலைப் போராட்டிற்கு சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை நாம் பெறுவதாயின் ஐ.நா. சாசனங்களுக்கு இசைவாக எமது போராட்டப்பாதையை நாம் வெளிப்படுத்துவது சாலச் சிறந்தது.''

அவர் எமது போராட்டப் பாதையை அந்தப் பாதையில் வகுத்துக்கொள்வது சாலச் சிறந்தது எனக் கூறவில்லை. அந்தப் பாதையை அவ்வாறு வெளிப்படுத்துவது சாலச் சிறந்தது என்றே கூறுகின்றார் என்பதை அவதானியுங்கள்.

''அரச அடக்கு முறைகளுக்கு எதிரான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் எமது விடுதலை இயக்கம் தனது அரசியல் கொள்கை நிலைப்பாட்டை, உள்ளக, வெளியகக் கூறுகள் இணைந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே நெறிப்படுத்தியிருக்கின்றது. சாராம்சத்தில் இந்தக் கொள்கை நிலைப்பாடு ஐ.நா.பிரகடனங்களுக்கும் சர்வதேச சட்ட நியமங்களுக்கும் இசைவாகக் கட்டி எழுப்பப்பட்டது.'' - என்று தமது சமஷ்டித் தீர்வு யோசனைத் திட்டத்தின் உள்ளார்ந்த அர்த்தத்தை மிகத் துல்லியமாக வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்றார் பாலசிங்கம்.

அதேசமயம்-

''இப்போது ஒரு நாடகம் நடக்கின்றது. பாலசிங்கமும் அதில் நடிக்கின்றார்'' என்றும்-

''இந்தப் பேச்சு ஓர் இராஜதந்திர நகர்வு. இலட்சியப் பயணத்தை நோக்கிய நகர்வு.'' என்றும்-

குறிப்பிடுவதன் மூலம் தமது இந்தத் தந்திரோபாயத் திட்டத்திற்குள் புதைந்துகிடக்கும் ஆழமான வியூக'சதிப் பின்னலையும்' அவர் கோடி காட்டுகிறார்.

ஆனால் அவரின் இந்தத் தந்திரோபாய நகர்வுக்குள் புதைந்து கிடக்கும் ஆழமான அர்த்தங்களை - அதற்குப் பின்னால் வகுக்கப்பட்டிருக்கும் தந்திரங்களை - புரிந்துகொள்ளாமல் பலரும் இத்திட்டம் குறித்து விமர்சித்தமை பாலா அண்ணனின் நெஞ்சை ஆழமாக ரணமாக்கியது என்பதையும் என்னால் நன்கு புரிந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும், நேரடியாகத் தெரிந்து கொள்ளவும் முடிந்தது.

''சிங்களத்தின் உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்தி, எமது விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் இரட்டை இலக்கில் நான் முன்னெடுத்த இந்த அசாதாரண காய் நகர்த்தலையும் அதற்குப் பின்னால் இருந்த விவகாரங்களையும் புரிந்து கொள்ளாமல் புலிகள் தமிழீழத்தைக் கைவிட்டுவிட்டார்கள் என்றும், தங்கள் தாயக இலட்சித்தைத் துறந்துவிட்டார்கள் என்றும் விஷமத்தனமான செய்தி பரப்பி, கொச்சைப்படுத்தி, தவறாக அர்த்தம் செய்து கேவலப்படுத்தினரே!'' - என்று கடைசிக் காலத்திலும் நொந்து கொள்வார் பாலசிங்கம்.

இந்தக் கைங்கரியத்தைத் திட்டமிட்டு

(08ஆம் பக்கம் பார்க்க)


Middlesex University, London

SPOT ADMISSIONS for January 2008



> Five Campuses in London
> Application processed within three working days
> Courses with Professional Accreditations, e.g. ACCA, AMBA, BCS, CIMA and CIPD.

A wide range of Undergraduate & Postgraduate Courses offered in:

> Art & Design
> Computing Science/ IT & Network Security/ Computer Networks
> Management including Financial, HRM, Marketing, MBA
> Msc Obstetric and Gynaecological Science
and many more Courses...........

1000 Pounds Bursary for all applicants and additional Merit Scholarships.

Students can apply under International Graduate Scheme (IGS) to seek employment for one year after successful completion of their course.

Interviews and Admissions by Middlesex University Representative On:
21st & 22nd, December 2007

KMS Knowledge Management Systems
Leading Educational Consultants and Training Providers
32, Hampden Lane, Colombo 6, Sri Lanka. Tel: 011-2365530

For appointment please contact: T: 2365530, 0777-209446

சுடர்ஒளி

டிச.16 - டிச.22. 2007

85, ஜெயந்தமல்லிமாராச்சிமாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

## யுத்தம் மூலம் தீர்வு சாத்தியமா?

இன யுத்தம் என்பது இலங்கைக்கு மட்டும் உரித்தானது அல்ல. சமீப கால வரலாற்றில் உலகில் 70 க்கு மேற்பட்ட நாடுகளில் இன யுத்தங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவற்றில் சுமார் 50 நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டன. சமாதானம் மூலம் தீர்வு காண முடியாத நிலையில் 11 நாடுகள் இன ரீதியாகப் பிளவு பட்டு விட்டன. மிகுதி நாடுகள் இன்னும் நிச்சயமற்ற நிலையில் இருந்து வருகின்றன - ஐ.தே.க. தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க சமீபத்தில் தெரிவித்த புள்ளிவிபரங்கள் இவை. அதாவது இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது என்பது தான் அவரது கருத்து. யுத்தம் மூலம் தீர்வு காண முயன்ற நாடுகள் இறுதியில் பிளவுபட்டுள்ளன.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவும் சமீபத்தில் இதே போன்ற கருத்தைத்தான் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் ஏற்பாட்டில் கொழும்பு, இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் உரை நிகழ்த்துகையில், யுத்தம் மூலம் சமாதானத்தைக் கொண்டு வர முடியாது என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் உரிய முறையில் பேணப்படுமானால் யுத்தம் ஒன்று வெடிப்பதற்கான சந்தர்ப்பம் இல்லை என்ற உண்மையையும் அவர் மனித உரிமைகள் தினத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் மூலம் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பதற்கு ஈராக்கும் ஆப்கானிஸ்தானும் முன் உதாரண நாடாக உள்ளன .

ஈராக் மீது படையெடுத்து சரியாக ஒரு மாதத்துக்குப் பின்னர், அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில், 'ஈராக் யுத்தம் முடிவடைந்து விட்டது' என்று அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பு வெளிவந்து இன்று பல வருடங்கள் கழிந்து விட்டன. ஈராக்கில் யுத்தம் இன்றும் முடிவடையவில்லை. தினமும் குண்டுகள் வெடிக்கின்றன. ஈராக்கில் இருந்து படைகளை வாபஸ் பெற முடியாத நிலையில் புஷ் திண்டாடுகின்றார். அமெரிக்காவின் கௌரவம் அடகு வைக்கப்படும் நிலைமை உருவாகி இருக்கிறது. ஆப்கானிஸ்தானிலும் இதே நிலைமைதான். சதாம் ஹுசேய்னுடனும் தலிபான்களுடனும் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறியதன் விளைவுகள் தான் இவை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது என்பது அனுபவ ரீதியாக உணரப்பட்ட நிலையிலேயே பெப்ரவரியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச தரப்புக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. தற்பொழுது சமாதான முயற்சிகள் நகர முடியாத நிலையில் மீண்டும் யுத்தம் மூலம் தீர்வு காண அரசு முடிவு செய்துள்ளது. போர் வெறியில் தென்னிலங்கை இருக்கிறது.

"கடந்த 30வருட அனுபவத்தின் மூலம் இங்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு யுத்தத்தின் மூலம் தான் தீர்வு காண முடியும் என அரசு தீர்மானித்து விட்டது'' என்று கூறுகின்றார் பாதுகாப்பு விடயங்களுக்குப் பொறுப்பான அரசின் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

•உலகில் எந்த ஒரு நாட்டிலும் யுத்தம் மூலமான தீர்வு வெற்றி அடையவில்லை. இது நன்கு தெரிந்தும் மஹிந்தர் அரச அந்த அழிவுப் பாதையில் செல்வது வேதனை அளிக்கிறது.

# உடைந்தது மு.கா.!

அஸ்லம் எஸ்.மௌலானா

எல்லோரும் எதிர்பார்த்தது போன்றே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசாங்கத்திலிருந்து விலகியதைத் தொடர்ந்து அக்கட்சியில் இன்னொரு பிளவு ஏற்பட்டிருக்கிறது.

கடந்த புதன்கிழமை கட்சியின் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட நான்கு எம்.பிக்கள் தாம் வகித்து வந்த அமைச்சுப் பதவிகளைத் துறந்து விட்டு, நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பிலிருந்து எதிரணிக்குச் சென்றனர்.

எனினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த மேலும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் வகித்து வரும் அமைச்சுக் பதவிகளைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொண்டு அரசுப் பக்கத்திலேயே அமர்ந்திருந்தனர்.

### இணைந்தது ஏன்?

அரசிலிருந்து வெளியேறுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்ட தீர்மானம் அரசை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருப்பதோடு அதன் இருப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. தேசிய அரசியலில் ஓர் அதிர்வை ஏற்படுத்தும் வகையில் முஸ்லிம் காங்கிரஸின் வெளியேற்றம் அமைந்துள்ளது.

ஆனால் அரசிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் விலகிச் சென்றமையும் அதனால் அக்கட்சியில் மற்றொரு பிளவு உருவாகியிருப்பதும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விடயமல்ல. அது ஏலவே எதிர்பார்க்கப்பட்டு வந்ததொரு விடயமே.

முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த சில எம்.பிக்களின் அழுத்தம் காரணமாகவே அக்கட்சி கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி அரசில் சேர்ந்து கொண்டது. கட்சி பிளவடைவதைத் தடுக்கும் நோக்கிலேயே உத்தரவாதம் - உடன்பாடு எதுவுமின்றி அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டதாக அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியிருந்தார்.

ஐ.தே.க. எம்.பிக்கள் 18 பேர் கட்சி மாறி, அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொண்ட அதே தினத்தில் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் 6 பேரும் அரசில் சேர்ந்து மந்திரிப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

### எதிரிகளுக்கே அதிகாரம்

ஆனால் ஏனைய முஸ்லிம் அமைச்சர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு மிகையான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் வகையிலான - பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவிகள் எதுவும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களுக்கு கிடைக்கவில்லை.

அதேவேளை ஏற்கனவே அரசில் ஒட்டிக்கொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸின் எதிரிகளுக்கு அதிகாரமும் சலுகைகளும் நிறைந்த அமைச்சுப் பதவிகள் கொடுக்கப்பட்டன. அவர்கள் முன்னர் வகித்து வந்த பதவிகளை விட ஒரு படிதரம் அதிகரித்தே புதிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

அதனால் எதிரிகளை மேவி எந்தவொரு வேலையையும் முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர்களினால் செய்ய முடியவில்லை. அமைச்சர்கள் அதாவுல்லா, றிஷாத் பதியுதீன், அமீரலி, நஜீப் ஏ.மஜீத் போன்றோர் பணத்தை அள்ளிக்கொண்டு வந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றபோது அமைச்சரவை அந்தஸ்து மிக்க அமைச்சராக இருந்தும் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களினால் ஒரு துண்டுச் சுவரைக்கூடக் கட்ட முடியவில்லை.

இதனைவிட தனக்கு வழங்கப்பட்ட தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சின் கீழ் வரவேண்டிய தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவை வேறுபடுத்தி ஜனாதிபதி தம்வசம் வைத்துக் கொண்டிருந்தமை அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு பெரும் கவலையையும், விசனத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

### பேரம் பேச முடியவில்லை

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேரடியாகப் பேசுவதற்குக் கூட மு.கா.தலைவர் ஹக்கீமுக்கு சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஷில் ராஜபக்ஷவுடன் இது பற்றி பலமுறை பேச்சு நடத்தியும் அவருக்கு நியாயம் கிடைக்கவில்லை.

பொறுப்பு- அதிகாரம் எதுவுமில்லாமல் வெறும் கோதாகவே தனக்குரிய அமைச்சுப்பதவி தரப்பட்டிருக்கிறது என்று மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் பகிரங்கமாகவும் விசனம் வெளியிட்டிருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் சில எம்.பிக்கள் - அதுவும் தனது விசுவாசத்துக்காக - தன்னால் நியமனம் வழங்கப்பட்ட தேசியப் பட்டியல் எம்.பிக்கள், தனக்குக் காலை வாரிவிட்டு - பின் கதவால் சென்று அரசுடன் இணையப்போகிறார்கள் என அஞ்சிய தலைவா ரவூப் ஹக்கீம், அந்த



எம்.பிக்களின் விடாப்பிடியான நிலைப்பாட்டுடன் ஒத்துப்போய் - இணங்கிச் சென்று முஸ்லிம் காங்கிரஸை அரசில் இணைத்துக் கொண்டார்.

இதனால் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் மற்றும் நலன்கள் சார்ந்த விடயம் தொடர்பில் மாத்திரமல்ல, தமக்கான பதவிகள் மற்றும் அதிகாரம் பற்றியும் ஜனாதிபதியுடன் எவ்வித பேரம் பேசலுக்கும் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு இடம் கிடைத்திருக்கவில்லை.

### மறக்க முடியாத வடுக்கள்

எது எவ்வாறாயினும் தமது அமைச்சுக்குப் புறம்பாக ஏதாவது வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவோ, வாக்களித்த மக்களைத் திருப்திப் படுத்தவோ முடியாத நிலையிலேயே கடந்த 11 மாதங்களையும் அவர் கடந்து வந்தார்.

அதே வேளை மறுபுறம் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் எதற்கும் இந்த அரசிடமிருந்து நியாயமான தீர்வு கிடைக்கவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த கையோடு அக்கரைப்பற்று பள்ளிவாசல் குண்டு வெடிப்பில் எட்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டதும், அதன் பின்னர் பொத்துவில் - இரத்தல் குளத்தில் பத்து முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதும், கொழும்பில் முன்னணி முஸ்லிம் வர்த்தகர்கள் பலர் கடத்தப்பட்டமையும் இலகுவில் மறந்து விட முடியாத வடுக்களாகும்.

இந்த அரசு பதவிக்கு வந்தது முதல் கிழக்கில் முஸ்லிம்களின் காணிகள் வெகுவாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து கிழக்கு மாகாணத்தை விடுவித்ததாகக் கூறும் அரசு, அங்கு கருணா மற்றும் பிள்ளையான் தலைமையிலான ஆயுதக் குழுக்களின் ஆதிக்கத்துக்கு இடமளித்து- முஸ்லிம்களின் உயிர், உடைமைகளுக்கு அச்சுறுத்தல்களைத் தோற்றுவித்துள்ளது.

கிழக்கில் முஸ்லிம்கள் கடத்தப்படுவதும், கொல்லப்படுவதும், அவர்களிடம் கப்பம் பறிக்கப்படுவதும் சர்வசாதாரண விடயங்களாகி விட்டன. கிழக்கில் சிங்களப் பேரினவாத சக்திகள் முஸ்லிம்களின் காணிகளை அபகரிப்பது தொடர்பிலும், முஸ்லிம்கள் மீதான, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் மேலாதிக்கம் மற்றும் வன்முறைகள் தொடர்பிலும் இக்கட்டுரைப்பகுதியில் முன்னர் பல தடவைகள் விலாவாரியாக எடுத்துரைத்துள்ளோம்.

### அரசின் திட்டம்

இவை தவிர முஸ்லிம்களின் மார்க்க சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளும் இப்போது தொடக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிவாசல்களில் பாங்கு ஒலிப்பதற்கான கட்டுப்பாடு, உழ்ஹியாக் கடமையை நிறைவேற்றுவதில் ஏற்படுத்தப்பட்டுள்ள இடர்பாடுகள் போன்றவை சட்ட ரீதியாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை மறுதலித்தும், அவர்களது நலன்களைப் புறக்கணித்தும், அவர்கள் மீது பல்வேறு நெருக்குவாரங்களை ஏற்படுத்தியும் சிங்கள தேசத்தைத் திருப்திப்படுத்துவதில் இந்த அரசு குறியாக இருந்து வருகிறது.

கடந்த செவ்வாயன்று ஹெல உறுமயக் கட்சி, முஸ்லிம்கள் தொடர்பில் வெளியிட்டிருக்கும் காட்டமான அறிக்கையும், முஸ்லிம்கள் குறித்த அரசின் பாரபட்சமான நடவடிக்கைகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் இந்த அரசு மீது முழுமையாக நம்பிக்கையிழந்து - அதனை வெறுத்தொதுக்கும் அவசியம் முஸ்லிம் சமூகத்துக்கு உருவாகியிருப்பதாக புத்திஜீவிகளும், சிவில் சமூக அமைப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

### சிவில் சமூக அழுத்தம்!

குறிப்பாக கிழக்கு மாகாண அனைத்துப் பள்ளிவாசல்கள் மற்றும் நிறுவனங்களின் சம்மேளனம் இவ்விடயங்களைச் சுட்டிக்காட்டி 23 முஸ்லிம் எம்.பிக்களுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்திருந்தது.

முஸ்லிம் சமூகம் சார்ந்த கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்து- உத்தரவாதங்களைத் தர முன்வராத பட்சத்தில் பட்ஜெட் வாக்கெடுப்பில் அரசை எதிர்த்து வாக்களிக்குமாறு அந்த சம்மேளனத் தலைவர் அஷ்ஷெய்க் ஹனிபா மதனி அனைத்து முஸ்லிம் எம்.பிக்களையும் வலியுறுத்திக் கேட்டிருந்தார்.

அதேபோன்று வேறு பல சிவில் சமூக அமைக்களும் அனைத்து முஸ்லிம் கட்சிகளும் அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளுமாறு கோரிக்கைகளை விடுத்திருந்தன. அதிலும் விசேடமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீது பாரிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

அரசில் இணைந்து ஒரிரு வாரங்களிலேயே அதிலிருந்து வெளியேற வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வந்த மு.கா.தலைவர் ஹக்கீமுக்கு இத்தகைய நிலைப்பாடு நல்ல வரப்பிரசாதமாக அமைத்திருந்தது.

### நீண்ட நாள் பிரயத்தனம்!

அரசிலிருந்த மங்கள - ஸ்ரீபதி விலகியதைத் தொடர்ந்து அந்த அணியுடனும், ஐக்கிய தேசியக் கட்சியுடனும் ரகசியப் பேச்சுக்களில் ஈடுபட்டு வந்த மு.கா.தலைவர் ஹக்கீம், தனது கட்சியின் ஏனைய எம்.பிக்களை அரசிலிருந்து விலக்கி எடுப்பதிலுள்ள அசாத்தியப்பாடுகளை கருத்திற் கொண்டே அரசை விட்டு வெளியேறுவதைத் தள்ளிப்போட்டு வந்தார்.

கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி மாத்திரமே தலைவர் ரவூப் ஹக்கீமுடன் ஒத்து நின்றார். ஏனைய நால்வரும் அவ்வாறான தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டாம் என்று தலைவரை இழுத்துப் பிடித்துக் கொண்டே இருந்தனர்.

இதனால் தான் கடந்த மாதம் 19ஆம் திகதி இடம் பெற்ற முதலாவது வாசிப்பு மீதான பட்ஜெட் வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிக்கும் தீர்மானத்தை எடுக்க முடியாமல் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்து வாக்களித்திருந்தது.

அதன் பிறகு பல தடவைகள் மு.கா.வின் உச்ச பீடம் கூடி இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்தது. பெரும்பாலான உறுப்பினர்கள் அரசிலிருந்து மு.கா. விலக வேண்டும் என வற்புறுத்திய போதிலும் கட்சியின் சில எம்.பிக்கள் முரண்டு பிடித்துக் கொண்டே நின்றனர்.

### கட்சித் தாவலின் விலைமதிப்பு!

இதனால் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறுகின்ற பட்ஜெட்டின் இறுதி வாக்கெடுப்பிலும் அரசை எதிர்த்து வாக்களிக்கும் தீர்மானத்தை தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கொள்ள மாட்டார் என்றே கட்சி வட்டாரங்கள் கூறி இருந்தன.

எனினும் கட்சியின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் எம்.பியும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் காஸிமும் சில நிபந்தனைகளை முன்வைத்து - தலைவர் ரவூப் ஹகீம் வழங்கிய உத்தரவாதங்களை ஏற்றுக் கொண்டு

(07ஆம் பக்கம் பார்க்க)

# உடைந்தது....

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வழியில் செல்வதற்கு இணங்கி வந்ததைத் தொடர்ந்து அரசிலிருந்து விலகுவதற்கான தீர்மானத்தை மு.கா.உத்தியோகபூர்வமாக மேற்கொண்டதாகத் தெரிகிறது.

புத்தளம் வன்முறைகள் தொடர்பில் கட்சிப் பதவிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கும் கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியான பிரதி அமைச்சர் கே.ஏ.பாயிஸ், தலைவர் ஹக்கீமைப் பகிரங்கமாகக் கண்டித்து ஊடகங்களில் கருத்து வெளியிட்டிருந்ததுடன் பட்ஜெட் வாக்கெடுப்பில் அரசை ஆதரித்து வாக்களிப்பதில் தனக்குள்ள உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி யிருந்தார்.

இதனால் அவருடன் பேச்சு நடத்துவதற்கான சாதகமான சூழ்நிலை எதுவும் இருக்கவில்லை என முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு தேசியப் பட்டியல் எம்.பியான பிரதி அமைச்சர் எஸ்.நிஜாமுதீன் அரசுத் தரப்பிலிருந்து விலகிக் கொள்வதற்கு அறவே விரும்பவில்லை என்பதுடன் தலைவர் ஹக்கீமினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களை ஏற்றுக் கொள்ளவும் மறுத்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

எனவே அரசில் இருந்து விலகிக் கொள்வதற்கு இரண்டு தேசியப்பட்டியல் எம்.பிக்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இழந்து- தியாகம் செய்திருக்கிறது எனலாம். இது தொடர்பில் மேலும் சில விபரங்களை அடுத்த வாரக் கட்டுரையில் விரிவாக ஆராய முடியும்.


## நிரூபித்துக் காட்டும் என் மலையாள மாந்திரீக சக்தி

அதிசயம் ஆனால் உண்மை




46 வருட காலமாக என் புகைப்படத்தை பத்திரிகையில் அறிமுகப்படுத்துவது, எனது உண்மையான சேவை என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் மேலும் எனது மாந்திரிக ஜோதிடம் கலந்த நாளாந்த சேவையைக் கண்டறிய இதோ எனது வெப் தளம். www.drpksamy.com. குறிப்பாக மாந்திரிக துறையில் வாங்கும் பணத்திற்கு ரசீது கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே.

வெளிநாட்டவர்களுக்கு விசேட 24 மணித்தியால தொலைபேசி வசதி உண்டு. 0094 112470615

**ஜேர்மன் அன்பரின் மடல்:** [illegible] ... 700 கிலோமீற்றர் அப்பால் இருந்தவண்ணம் [illegible] நன்றிகள்.

**லண்டன் அன்பரின் மடல்:** *என்னவள் என்னிடம் வந்து சேர்ந்தாள்*- [illegible] என்னை வெறுத்து என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர்க் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோசத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல்:** *39 வயதில் அதிசயத் திருமணம்*- [illegible] ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணம் நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்குப் பரிகாரம் செய்ததால் [illegible] மகளின் திருமணத்தை இனிதே நடத்தேற்ச் செய்ததைக்கு கோடானகோடி நன்றிகள்.

**திருநகர் அன்பரின் மடல்:** *நெடுநாளாகத் தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி*- [illegible] ஐயா, எனது சகோதரிக்குத் திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்க வகையில் சகோதரியின் திருமணம் நடைபெற [illegible] உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பண்டாரவளை அன்பரின் மடல்:** *தீராத தலைவலி தீர்ந்துவிட்டது*- [illegible] ஐயா [illegible] நெடுநாளாக எனக்கிருந்த தீராத தலைவலியை குணமாக்கி என்னைப் பெரும் கஷ்டத்திலிருந்து [illegible] கண்ணீரால் நன்றிகள்.

**பிரான்ஸ் அன்பரின் மடல்:** *குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி*- [illegible] ஐயா, வெளிநாட்டுக்குச் செல்வதற்கு [illegible] எனக்கு பிரயாணம் தடைப்பட்ட [illegible] பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தைக் கைகூட வைத்த உங்களுக்கு பிரான்சிலிருந்து கடிதத்தை நன்றியாக எழுதுகின்றேன். என்றுமே உங்களை மறவேன்.

**இந்தியா அன்பரின் மடல்:** *சந்தேகத்தால் பிளவுபட்ட காதல் வெற்றி*- [illegible] ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய இருந்த சமயம் மீண்டும் சந்தோசமாகச் சேர்த்தது உங்களால்தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல்:** *போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்*- [illegible] ஐயா எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எனது குடும்பத்திற்கு ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல்:** *ஜாதகத்தில் கூறியது பலித்தது*- மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்கவந்தபோது வெளிநாடு செல்வது பற்றிய அதிர்ஷ்டம் எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக் கூறியது பலித்தது கண்டு அச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன். என்றும் உங்கள் சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல்:** *அதிசய அக்னி குண்டல பூசை*- மதிப்பு, மரியாதை கொண்ட ஐயா, [illegible] எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேடமாக நடைபெறும் அக்னி குண்டல பூசையில் [illegible] எம்மைத் துன்பத்திலிருந்து காத்து வருகின்றமைக்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா.

**Prof. P.K.SAMY (J.D.G.A.N.) JP ஐயா**

SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM.

NO-162, KOTAHENA STREET, MAYFIELD ROAD, COLOMBO-13.

0112470615, 0112 342463, 0012342464 Fax: 0094 11 2344831

நுவரெலியாவில் என் நிறுவனம் - துர்க்காதேவி ஆலயம்- இல.33, கண்டி வீதி நுவரெலியா. Tel: 052 2222508



## மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPHY)

இளம் வயதில் வாலிபத் தூண்டுதலால் புரியாமல் செய்யும் தவறுகளால் ஆளுமைக் குறைவு, சக்தி குறைவு, ஞாபகமறதி ஏற்படுதல் மற்றும் பயம், நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மை போன்ற நோய்களுக்கும்

- ஆரம்பமான நோய்களை உடனே குணமாக்கலாம்.
- ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப்பேறு இன்மைக்கும் பெண்களுக்கும், வெள்ளைபோதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல்,பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு.

பிரபல மனோ தத்துவ நிபுணர் **Dr.P.ஆறுமுகம்**

**SEXUAL DISORDERS** (*ஆண்மைச் சக்தி குறைவு*)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. இதற்காக வெட்கப்படவோ வேதனைப்படவோ தேவையில்லை. (பிறவியிலேயே ஆண்மையற்றவர்கள் தவிர) இதற்குப் பல காரணங்கள் உண்டு.

- அளவுக்கதிகமாக விந்தை வீணாக்கியது.
- கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது.
- உடல்பலவீனம். நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்து விடுவது.
- உறவின்போது விந்து விரைந்து வெளியேறுதல்
- முதல் தடவையாக உறவுகொள்ளும் போது ஏற்படும் பயத்தினால் உறவில் திருப்தியின்மை.

இக்குறைகளாலும், தோல்வி அவமானத்தாலும் இனி நமக்கு வாழ்வே இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை வளர்ந்து முற்றாக ஆண்மை குன்றலாம். பயப்படாதீர்கள் எமது மனோதத்துவ வைத்திய முறையிலும், திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

### டாக்டர் ஆறுமுகம் அவர்களை சந்திக்கும் இடங்கள்

**வவுனியாவில்...**

2008 ஜனவரி 05, 06, 07 வரை

**Vanni Inn,**

2ஆம் குறுக்குத்தெரு,
வவுனியா,
Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**கொழும்பில்...**

2007 டிசம்பர் 16 முதல் 23 வரை

**New Ahmed Tourist Inn,**
Bang Bang Building
2-2/2, Bankshall Street,
Colombo - 11.
Tel No. 5368426, 5368427
**Hot Line: 0777 569205**

### வெளிநாட்டினருக்கு விசேட வைத்திய முறை செய்யப்படும்

வெளிநாட்டில் உள்ளவர்கள் தபால்மூலம் (தயவுசெய்து முத்திரை ஒட்டிய கடித உறையுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்தியமுறையில் ஒடியோ கசட் பெற்று அத்துடன் திறமான மூலிகை மருந்தும் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

கடிதத் தொடர்புகளுக்கும் ஏனைய நாட்களில் சந்திப்பதற்கும்

**Dr. P. Arumugam,**
51/5, Koolavady Road
Batticaloa, Srilanka.
Resident Tel No. 065 22 24019,
Hot Line: 0777 569205

தயவு செய்து ரூபா.250/= செலுத்தி பதிவு செய்து கொள்ளவும்.



# SINGAPORE

## STUDY IN

## MALASYIA, UK, CANADA, CYPRUS

**100% visa guaranteed**

**For jan, 2008 intake**

Pathway for your education with best return with excelent job opportunity

**Availble Courses:-**
- Business Administration
- Information Technology
- Law
- Hotel Management
- Engineering
- Medicine/ Nursing
- Shiping course
- Els..........

All courses are ailable in any field.

**FOR SINGAPORE**
- No need IELTS and TOEFL.
- No need of bank balance.
- Fly within 14 working days.
- Accomdation will be provided.
- Part time job opportunities available.
- Fly singapore with a cost of only Rs 50,000/=.
- Free air port pickup.
- PR opportunity for degree holders.



**Minimum qualification G.C.E (O/L) guaranteed part time job & Accomodation**

**Contact :** Nikil - 0774286116
Pooja - 0774285699

## நீங்களும் பட்டதாரியாவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

சிங்கப்பூர், மலேசியா, லண்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் போன்றவற்றிற்கு STUDENT VISA அடிப்படையில் மாணவர்களை மிகத்துரிதமாக அனுப்பி சர்வதேச அங்கீகாரமுடைய பட்டதாரியாவதற்கான மாணவர்களின் கனவுகளை நனவாக்கும் சகல ஏற்பாடுகளையும் தரமாகச் செய்து தருவதில் தலைநகரின் முன்னணி நிறுவனம் OPEN INSTITUTE OF COLOMBO ஆகும். இந்நிறுவனத்தின் சேவைகளாவன–

[1] துறைசார் நிபுணர்களால் வழங்கும் தரமான ஆலோசனைச் சேவை.
[2] சிங்கப்பூர், மலேசியப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளிற்கு ஒரு கிழமைக்குள் பயண ஏற்பாடு.
[3] வெளிநாடுகளில் மாணவர்களிற்கான தங்குமிட வசதிகள்.
[4] கற்றலுடன் கூடவே பகுதிநேர வேலைவாய்ப்புக்கள்.
[5] அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இறுதிக் கற்கைகளை [FINAL STUDIES] கற்பதற்கு மாற்றீட்டுத் திட்டங்கள் [TRANSFER SHEME].
[6] சர்வதேச அங்கீகார பட்டதாரிச் சான்றிதழைப் பெற்று மிகக் கவர்ச்சிகரமான சம்பளத்தில் முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான உத்தரவாதம்.
[7] TOFEL CLASSES
[8] AAT, CIMA CLASSES

**OIC OPEN INSTITUTE OF COLOMBO**

No: 40-3/1A, GALLE ROAD, 3RD FLOOR
(ADJOINING TO HSBC WELLAWATTA)
COLOMBO - 06. TEL: 0114992277

WEB: www.oiccitycampus.com E-mail: oiccitycampus@yahoo.com

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

**Vani International Marriage Bureau (VIMB) Govt.Regd. (International)**
➔ உங்கள் பிள்ளைகளுக்காக பெருந்தொகையான பணத்தை செலவு செய்தும் நிரந்தர குடியுரிமை (PR) உடன் மேற்குலக நாடொன்றில் வாழ வழி செய்ய முடியவில்லையா? நீங்கள் அதை நிறைவேற்று முகமாக இலவச ஆலோசனைகளைப் பெறவும்..
➔ எல்லாச் சமூக மத குடியுரிமை (PR) உள்ள குடியுரிமை (PR) இல்லாத மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் விபரங்களைப் பெறவும். பல கிளைகளைக் கொண்ட ஒரே ஒரு சர்வதேச திருமண ஸ்தாபனமாகும். தலைமை அலுவலகம்: லண்டன், பிரதான அலுவலகம்: வங்களாவடி, வேலணை. கொழும்புக்கிளை: PSJ. சிந்துஜன் - ☎ : 0777 4047531 வவுனியா கிளை: S.சிந்து - ☎: 077 9776384 யாழ். கிளை: E.T.ராஜன்- ☎:077 934 9988 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் - ☎ :0091-9941035512 மேலும் பல விபரங்களை அறிய எமது (VIMB) மணப்பந்தல் என்கின்ற வார வெளியீட்டை புத்தகக் கடையில் கேட்டு வாங்கிப்படியுங்கள். விலை ரூ.10

---

**வீடுகள் தோறும் திருமணங்கள்.** நீங்கள் விரும்பும் மணமக்களைத் தேடித் தேடி அலுத்து விட்டீர்களா? திருமண உலகில் 45 வருட சேவையில் இரண்டாந் தலை முறை கண்ட நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் எதிர்பார்ப்பின்படி, சாதி, சமய, தராதரத்திற்கு எற்றபடி, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மணமக்களைத் தேர்ந்தெடுத்து திருமணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம். இந்திய வம்சாவழியினரின் திருமணத்திற்காக தனிப்பிரிவு தொடங்கியிருக்கிறது. வாருங்கள் திருமணத்தை நிறைவேற்றுங்கள். இயக்குனர்: புலவர், 15A, 32 ஆவது லேன், வெள்ளவத்தை கொழும்பு - 06. ☎ : 2500380 0713352215

---

SANNITHIYAN MARRIAGE SERVICE. எமது புதிய முகவரியில் இந்து, கிறிஸ்தவர்கள், Specially குருகுலம், வேளாளர், மற்றும் சகல சமூக பிரிவினர்க்குமான துரித விவாக சேவைக்கு (உள்நாடு, வெளிநாடு) தேவையான ஆவணங்களுடன் பதிவு செய்து சந்நிதியானோடு இணைந்து வெற்றி பெறுவார்கள். செல்வசந்நிதி வேலவன் சித்திரபெருந்தேர் வெள்ளோட்டம் (1984) திருவிழா காட்சிகள் (2003) D.V.D இலவச பதிவு செய்ய காரியாலயம் வரவும். அலுவலக நேரம்: காலை 9 - 1 மணி 4-8 மணி மாலை. T.P: 0773573055. T.GUNARATNARAJAN, Sannithiyan Marriage Service, 285-1/1, Galle Road, Wellawatte. (பொலீஸ் நிலைய வாயில் எதிரே)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் குடியுரிமை உள்ள வயது 26, கிரகபாவம் 46, புனர்பூசம், 8 இல் செவ்வாய், B.A பட்டதாரி மணமகளுக்கு Doctor, Engineer, Accountant, BSc மணமகன் தேவை. வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். (மணமகளின் தந்தை லண்டனில் பிரபல தொழிலதிபர்) மணமகள் விரைவில் கொழும்பு வரவுள்ளார். யாழ். இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் குடியுரிமை உள்ள, வயது 37, கிரகபாவம் 35, B.Sc (M.Eng) சித்திரை மணமகனுக்கு அழகிய, சிவந்த, மெல்லிய மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: (கொழும்பு) PSJ. சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை), **Vani International Marriage Bureau Govt.Regd.(International) ☎: 077 6184434, 0774047531** தலைமை அலுவலகம் **S.Ponnampalam. 211 #, Livorpool Road, London (UK),** யாழ் கிளை. E.T. ராஜன். ☎ : 077 9349988 வவுனியா கிளை: S.சிந்து. ☎:077 977 6384 இந்தியா (தமிழ்நாடு) S.K.ரூபன் ☎: 0094-9941035512 பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

---

யாழ்.இந்து குடும்பம் (சமூகத்தின் விபரம் தொலைபேசி ஊடாக) கனடாவில் குடியுரிமையுடைய 78 ஆம் ஆண்டு பிறந்த, பரணி, கிரகபாவம் 28, Accountant க்கு மணமகன் தேவை. (குடும்பத்துடன் கனடாவில்) மிக விரைவில் கொழும்பு வரவுள்ளார். யாழ்.இந்து குடும்பம் (சமூகத்தின் விபரம் தொலைபேசி ஊடாக) லண்டனில் குடியுரிமையுடைய, 39 வயது, 8 இல் செவ்வாய், கிரகபாவம் 40, சித்திரை 2 ஆம் பாதம், மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: (கொழும்பு) PSJ.சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை) **Vani International Marriage Bureau Govt. Regd.(International)** ☎:077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் **S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK)** யாழ் கிளை E.T. ராஜன். ☎:077 9349988 வவுனியா கிளை S. சிந்து ☎:077 977 6348 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512 நிர்வாகி (வேலணையூரான்) M.S. பொன்னம்பலம், M.S.சிற்றம்பலம் (முருகா), சகோதரர்களின் சந்ததியினரின் ஒருவர் பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

---

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் குடியுரிமையுடைய, 77 ஆம் ஆண்டு, உத்தராடம், 8 இல் செவ்வாய், கிரகபாவம் 57, Computer Engineer மணமகளுக்கு பட்டதாரி/ஆங்கில அறிவுள்ள மணமகன் தேவை. யாழ்.இந்து, உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 39, உயரம் 5'9", விசாகம், 4 ஆம் பாதம், கிரகபாவம் 22-1/2, அரச சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: PSJ. சிந்துஜன் (**VIMB**) (வங்களாவடி வேலணை) Vani International Marriage Bureau Govt.Regd.(International) ☎ :077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் **S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK)** யாழ் கிளை E.T. ராஜன், ☎:077 9349988 வவுனியா கிளை:S. சிந்து ☎:077 977 6348 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512 பதிவுக் கட்டணம் செலுத்திய பின்னரே எமது சேவைக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

## மணமகள் தேவை

வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்த, 22.12.1974ல் பிறந்த உயர்சைவவேளாள, பரம்பரைச் சைவபோசன **Computer Hardware + Networking Engineer,** உயரம் 5'8", நடுத்தர உடற்கட்டு, மிக்க இளமைத்தோற்றம், உத்தரட்டாதி மூன்றாம் பாதம், கிரகதோஷம் இல்லை, மூன்றுசுற்று மொத்தக் கிரகபாவம் 5, தற்பொழுது **Dubai** நிறுவனமொன்றில் **Senior Executive - IT Infra Structure** ஆக வேலைபார்க்கும் சைவ தமிழர் வாழ்வியல் நெறிமுறைகளில் ஈடுபாடுள்ள எமது மகனுக்கு, சைவபோசன, குறைந்தது ஐந்து வயதாவது இளைய, மெல்லிய தோற்றமுள்ள குடும்பப்பாங்கான மணமகளைத் தேடுகின்றோம். உயர்கல்வித் தகமையையோ சீதனத்தையோ பெரிதாக எதிர்பார்க்கவில்லை. தொடர்பு: (011) 2506773

---

யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடாவில் குடியுரிமையுடைய, 1970 ஆம் ஆண்டில் பிறந்த, 8 இல் செவ்வாய், கிரகபாவம் 60, உத்தராடம் 2 ஆம் பாதம், உயரம் 5'8", கனடாவில் கணக்காளரான மணமகனுக்கு அழகிய, சிவந்த, மெல்லிய, படித்த, மணமகள் தேவை. மணமகன் தற்போது கொழும்பு வந்துள்ளார். இன்னும் 15 நாட்கள் மட்டுமே இங்கு தங்கியிருப்பார். தீவகத்தைச் சேர்ந்தவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:(கொழும்பு) PSJ.சிந்துஜன் (VIMB) (வங்களாவடி வேலணை) **Vani International Marriage Bureau Govt. Regd.(International)** ☎:077 6184434, 077 4047531 தலைமை அலுவலகம் **S.Ponnampalam. 211 #, Livorpool Road, London(UK)** யாழ் கிளை E.T. ராஜன். ☎:077 9349988 வவுனியா கிளை:S. சிந்து ☎:077 977 6348 இந்தியா(தமிழ்நாடு) S.K.ரூபன் ☎:0091-9941035512

## தேவை

கொழும்பு - 12, டாம் வீதியில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கம்பியூட்டர் அனுபவமுள்ள கணக்கு இலிகிதர் (Accounts Clerk) தேவை. விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: ABBE (PVT) LTD, 67A, Wolfendhal Street, Colombo - 13. Tel: 0777-725258, 2439993.

---

வீட்டு வேலை, சமையல் வேலை, குழந்தைகள் பராமரிப்பாளர், நோயாளி பராமரிப்பாளர், ரூம் போய்ஸ், உணவக வெயிட்டர்கள், சாரதி, தையல் வேலை, காவல், தோட்ட வேலை போன்றவற்றுக்கு ஆட்கள் தேவை. தொடர்பு ஸ்ரீசுபசெத, 2ஆம் மாடி, சிங்ககிரி கட்டடம், பண்டாரவளை. T.P:057 2230160

---

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள அனுபவமில்லாத ஆண் பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிட வசதிகள் இலவசம், அருண் டெக்ஸ்டைல் சென்டர், இல.12 கம்பளை வீதி, நாவலப்பிட்டிய. T.P: 054 2223027

---

தொழிற்சாலை ஒன்றுக்கு Bag தைப்பதற்கு (ஆண்/பெண்) இருபாலாரும் தேவை. தொடர்பு-203, லெயாட்ஸ் பிராட்வே, கொழும்பு-14. T.P:077 3203777.

---

கொழும்பில் உள்ள இந்தியன் குடும்பத்தினரின் வீட்டில் குழந்தை பார்ப்பதற்கு மற்றும் சிறு சிறு வேலைகள் செய்வதற்கு 20-30 வயதிற்கு இடைப்பட்ட வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பெண் (House maid) தேவை. மலையகத்தவர், நீண்டகாலம் கடமை புரியக் கூடியவர் விரும்பத்தக்கது. கிராம சேவகர் கடிதம், ID Copy இவற்றுடன் தொலைபேசி மூலம் விண்ணப்பம் பெற்ற பின்பு நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கவும். T.P: 0777 346362 011 2347753.

---

குவைத்/டுபாய் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் House Maids/Cleaners, Drivers, Security Guards, Painters, Tinkers, Carpenters ஆகியோருக்கு இருவருட ஒப்பந்த அடிப்படையில் வேலை வாய்ப்பு உண்டு. உணவு தாங்குமிடம் இலவசம் சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவும் உண்டு. LOTUS JOBS BANK, NO.10 RUDRA MAWATHA, WELLAWATTE, T.P: 2361336. Licence No.2077

---

DUBAI CABLECOMPANYக்கு இரு வருட ஒப்பந்த அடிப்படையில் LABOURERS தேவை. SALARY RS. 24000/- +O.T. உணவு தங்குமிடம் இலவசம் நேரில் வரவும். LOTUS JOBS BANK, NO.10 RUDRA MAWATHA, WELLAWATTE, T.P: 2361336. Licence No.2077

## பயிற்சி வகுப்பு

பெண்களிற்கான தையற்கலை, அழகுக்கலை, கேக் ஐசிங், Sugar Flowers, Structure, Patch work, saree, Beads, Spring work, சல்வார், சாறி பிளவுஸ் (one week) திரைச்சேலை வடிவமைப்பு ஆகியவற்றிக்கான பயிற்சி நெறிகள் இல.155, Colombo-15 இலும் வெள்ளவத்தை Ideal Academy யிலும் ஆரம்பம். பயிற்சி முடிவில் அரச அங்கீகாரமுள்ள சான்றிதழ் வழங்கப்படும். சகல விதமான ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும். அழகுக்கலை, Sareework பயில பொருட்கள் முற்றிலும் இலவசம். தொடர்புகளுக்கு: 4938452, 0785184381

---

அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள் மிக குறைந்த கட்டணத்தில் செயன்முறை விளக்கத்துடன் கற்பிக்கப்படும். வெளிநாடு செல்வோருக்கான குறுகிய கால பயிற்சி வகுப்புக்கள். பொருட்கள் இலவசம். சான்றிதழ் வழங்கப்படும். தனிப்பட்ட முறையிலான வகுப்புக்களும் நடைபெறுகின்றன. AKSHANABEAUTY PARLOUR. 077 6043376, 0774421153

---

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 6 வகையான Saree Blouse, 6 வகையான SHALWAR. No 36, Station Road, Wellawatte. Rennshiy. 0779360781 (ஒவ்வொரு புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வகுப்புக்கள்)

---

வெள்ளவத்தையில் NATURE WAY இல் மணப்பெண்ணலங்காரம் (Bridal Dressing) Wedding cake, Structure cake, Birthday cake, Church Dec. தையல் என்பன Order ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான வகுப்புக்கள் சான்றிதழுடன் நடைபெறுகின் றன. தொடர்பு: T. LUXMIE, No.02 Ranjan Road, (off Station Road) Tel:2505325E-mail:www.naturewaybp.com

---

Golden Line Herbal Beauty Hair & Skin Care. இந்தியாவில் பயிற்சி பெற்ற (C & G) UK Qualified அழகுக்கலை நிபுணரால் பயிற்சிகள் ஆரம்பமாகின்றன. முதல் 5 மாணவர்களுக்க விஷேட சலுகை * பேசியல் (23) * பிளீச்சிங் (09) *மணப்பெண் அலங்காரம் * பரு சிகிச்சை Hi Ferquency * Straightening, Rebonding, Cutting வாய்ப்பை தவற விடாதீர்கள். பெண்கள் மட்டும். தொடர்புகட்கு:077 6993315.

---

Diploma in Bridal & Hair Dressing Course இப் பாடநெறியினைக் கற்பதால் எது வித தயக்கமும் இன்றி எந்த விதமான மணப்பெண்ணையும் மிகச் சிறந்த முறையில் அலங்கரிக்கும் தகுதியினைப் பெற்றுக் கொள்ளலாம். பயிற்சியுடனான வகுப்புகள் 8 விதமான Brides, Bridesmaid, Flower Girl போன்றவர்களை Models க்கு Dress பண்ணிக் காட்டுவதுடன் பயிற்சியும் வழங்கப்படும். அத்துடன் இப்பாட நெறியில் Bridal Make-Up, Bouquets - 3, Saree Work - 2, Costume Jewellery - 2, Professional Facial, Modern Hair Styles - 10, Nail Art - 2, மற்றும் Eyebrow Setting, Body Painting போன்றவை அடங்கும். Duration - 2 Months. சான்றிதழ் வழங்கப்படும். நம்பிக்கையுடன் இணையுங்கள். Sureka -077 6697469.

---

Professional Hair Cutting Course. நவீன முறையிலான Cuttings. கூந்தலைப் பற்றிய விஞ்ஞான ரீதியான விளக்கங்களுடன் 7 விதமான Layercuts, Bobcut, Mushroom Cut, Front Cuts, Hair Settings, Blowdry என்பனவை சரியான முறையில் கற்றுத் தரப்படும். மற்றும் உபகரணங்களை சரியான முறையில் பாவிப்பது எப்படி என்பதும் வகுப்புக்களில் கற்றுக் கொள்ளலாம். மிகச் சிறந்த பயிற்சியுடனான வகுப்புக்கள். வெட்டிப் பழக நீள முடியுடன் கூடிய Dummy இலவசம். Duration 1 Month மதிப்பு மிக்க சான்றிதழ் வழங்கப்படும். சனி ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறும். பதிவுகளுக்கு Sureka (இலங்கையின் மிகப் பிரபல சிங்கள அழகுக்கலை நிபுணர்களிடம் சிறப்பு பயிற்சி பெற்றவர்) 077 6697469.

---

பிரான்ஸ், கனடா, ஜேர்மனி செல்ல இருப்பவர்களுக்கு Spoken French, spoken German போன்ற பாடங்கள் குறுகிய காலத்தில் Grammer உடன் கற்றுத்தரப்படும். T.P: 0714893449.

---

வெள்ள வத்தையில் மிககுறுகிய காலத்தினை அடிப்படையாகக் கொண்ட Bakery Course ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறைந்த கட்டணத்தில் முழுமை அடைய சிறந்த சந்தர்ப்பம். Splendour Home Craft Centre, 17-1/1, Colling wood Place, colombo - 06. T.P: 0714893449.

## வாடகை

வெள்ளவத்தை No. 05, St.Lawrence Road இல் உள்ள தொடர்மாடியில் 6ம் மாடியில் தளபாட வசதிகளுடன் அறை வாடகைக்குண்டு. (பெண்களுக்கு மட்டும்)

---

வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் கல்வி கற்கும் மாணவிகள் இருவருக்கு அறை வாடகைக்குண்டு. தொடர்பு:077 4535252.

---

கொழும்பு-06 கிருலப்பனை மகிந்த பிளேஸில் 3 படுக்கையறைகள் சகல வசதிகளுடன் வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு:077 4404015

---

Shop for Rent தெகிவளை சந்தியில், சிறிய கடை நியாயமான வாடகை, Textile, வியாபாரம், விரும்பினால் பொருட்களுடன் நியாய மான விலையில். தொடர்பு:077 6645770

---

வெள்ளவத்தை கொலிங்வூட் பிளேஸில் கடற்கரைக்கு நெருக்கமாக Luxury Apartment இல் 3 அறைகள், 2 குளியலறைகள், பணியாளர் அறை ஆகியவற்றுடன் இல்லம் முழுவதும் குளிர் சாதன வசதி மற்றும் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. வாகனத் தரிப்பிடம் வரவேற்பு மண்டபம், நீச்சல், தடாகம், உடற்பயிற்சிக் கூடம்(ஜிம்) ஆகிய வசதிகளும் உண்டு. வெளிநாட்டவருக்கு பொருத்தமானது. தரகர்கள் வேண்டாம். தொடர்புகளுக்கு: 2365486 (மாலை6 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்)

---

கல்கிசையில் காலி வீதிக்கு அருகாமையில் புதிதாக கட்டப்பட்ட வீடு 2 படுக்கையறைகள், ஹோல், சாப்பாட்டறை, குளியலறை, சமையலறை சகலதும் Tile பிடிக்கப்பட்டுள்ளது. அமைதியான சுற்றாடல், வருட வாடகைக்கு சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. 14, Fonseka Road, Mount Lavania. T.P:078 6085945

---

Ground Floor இல் Hall, Dinning hall, 1 அறை இணைந்த குளியலறை, சமையலறை, 1st Floor இல் 3 அறைகள், 2 இணைந்த குளியலறைகள், 2 அறை, A/C, பல்கனி, தனிவழிப்பாதை, ஒரு வாகனத் தரிப்பிட வசதியுடன் வாடகைக்குண்டு. வெளிநாட்டவர் விரும்பத்தக்கது. No.11, Daya Road, off Hampden Lane, Colombo - 06. T.P :0777872156.

---

தெகிவளையில் மாபிள் பதித்த இரண்டு படுக்கையறைகள் உள்ள வீடு வாடகைக்குண்டு. தொடர்பு:2737448, 2610919.

---

களுபோவிலவில் 3 அறைகளுள்ள வீடு வாடகைக்குண்டு. வாடகை ரூ.12000/-. தொடர்பு: 0773 496990.

---

கொஹூவலவில் 2 அறைகளுள்ள வீடு, 2 குளியலறைகளுடன் வாடகைக்குண்டு. தொடர்பு:28/1, Perera Av, Kokuwala.

## நியூமராலஜி

**அதிர்ஷ்ட நியூமராலஜி.** நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம். அதிர்ஷ்டம் தரும் அதிநவீன அதிர்ஷ்ட நியூமராலஜி எண்கணிதத்தில் 49 வருட ஆராய்ச்சியும் அனுபவமும் பெற்றவர். பிரபல இலங்கை, இந்தியா, அரசியல்வாதிகள், தொழில் அதிபர்கள், தென்னிந்திய சினிமா நட்சத்திரங்கள், வியாபாரிகள், இன்னும் ஆயிரக்கணக்கானவர்களுக்கும் அதிர்ஷ்டமாக வாழ அதிர்ஷ்டக் குறிப்புகள் அமைத்துக் கொடுத்தவர். எந்த வயதிலும் செல்வம், வியாபாரம், அதிர்ஷ்டமான பெயரமைப்பு, அதிர்ஷ்டமான கையொப்பம், கல்வி, தொழில், காதல் விவகாரங்கள், காதல் பிரச்சினைகள், பொருத்தமான அதிர்ஷ்டத் திருமணம், திருமணமாகாதவர்களுக்குத் திருமணம், திருமணமானவர்களின் பிரச்சினைகள், குழந்தைச் செல்வம், வேறு பல பிரச்சினைகளுக்கும், நீங்களும் அதிர்ஷ்டமுடன் வாழ முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள் விபரங்களுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்க. தபால் மூல சேவையும் உண்டு. இரகசியம் பேணப்படும். அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர். பேராசிரியர் டாக்டர். ரசூல்மன்சூர் **Prof.Dr.RAZUL MANZURR,** (MOD MANZURR) No.198/2/A, 1st Floor, Hill street Dehiwala. Sri Lanka. ☎: **071- 4136254, 078 - 5118019, 071- 4182713, (060) 2172645. Email:razulmanzurr@yahoo.com**

## பெண்களுக்கு அதிர்ஷ்டம்

பெண்களே! நீங்களும் வாழ்க்கையில் வெற்றி பெற்று வாழ முடியும். பெண்களுக்கு கணவன் தான் நல்ல துணைவன். ஆனால் எல்லோருக்கும் நல்ல கணவன் அமைவதில்லை. வரதட்சணை, மாமியார், நாத்தனார் கொடுமை, குழந்தையில்லாமை, கணவனின் திடீர் மரணம், கைவிடப்படும் அவலம், விவாகரத்து இப்படி எத்தனை எத்தனை துன்பங்கள், துயரங்கள், அழகு, கல்வி, தொழில், காதல், திருமணத்தடை, மற்றும் வேறு எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் தொலைபேசி, நேரில், தபால் மூலமும் தொடர்பு கொள்ளலாம். இரகசியம் பேணப்படும். 49 வருட ஆராய்ச்சியும், அனுபவமும் பெற்ற அதிநவீன மனோதத்துவ நியூமராலஜி நிபுணர் பேராசிரியர் டாக்டர். ரசூல்மன்சூர் **Prof.Dr.RAZUL MANZURR (MOD MANZURR) No.198/2/A, Hill street, Dehiwala. ☎: 071- 4136254, 078 - 5118019, 071- 4182713, (060) 2172645. E-mail: razulmanzurr@yahoo.com**

## இந்திய யாத்திரை

பிள்ளையார்பட்டி, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், காஞ்சீபுரம், திருப்பதி, ஸ்ரீவைகுண்டம், திருவையாறு, திருவாரூர், திருவெண்காடு, திருக்கழுக்குன்றம், சுருட்டப்பள்ளி, சென்னிமலை, குற்றாலநாதர், அகத்தீஸ்வரம், திருக்கடையூர், கொல்லிமலை, மேல்மலையனூர், ஆறுபடை வீடுகள், நவக்கிரக ஆலயங்கள், கைலாசலிங்கபர்வதவர்தனி, சிதம்பரம், பிரகதீஸ்வரர், பொற்கோயில், இராமேஸ்வரம், திருவெண்ணாமலை, உட்பட 40இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். 12 நாட்கள் 10 பேர் இந்தப் 10 பேரில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் (ஒருவருக்கு மட்டும்) திருப்பதி வெங்கடேஸ்வரரின் (4 கிறாம்) தங்கடாலர் ஒன்று பரிசளிக்கப்படும். விபரங்கட்கு: T. ஸ்ரீரெங்கநாதன் T.P: 0777681?02 0724 222989.

## போராட்டத்தை..... (05ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்த தமிழ்ப் பிரமுகர்கள், சில ஊடகவியலாளர்கள் போன்றோரின் செயற்பாடு குறித்து அவரது மனதில் ஆழமான ஆதங்கங்கள் இருந்தன.

அவை முடிந்த விடயங்கள். அதனால் இதற்கு மேல் கிளறாமல் விட்டுவிட்டு அப்பால் செல்வோமா?

* * *

புலிகளின் விடுதலைப் போராட்டத்துக்கு சார்பாக சர்வதேச சமூகத்தை திருப்பவேண்டும் என்று பாலசிங்கம் சதா சிந்தித்தார் என்று குறிப்பிட்டேன் அல்லவா?

சர்வதேச சமூகம் என்ற மட்டத்தில் மேற்குலகுக்கு அப்பால் மிக முக்கிய காரணியாக அவர் இந்தியாவைக் கருதினார்.

*"புலிகள் தொடர்பாக இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள தவறான புரிதலை மாற்றியமைக்கக்கூடிய - மாற்றியமைக்க வேண்டிய - ஆள் நான்தான். என் சாவுக்கு முன் அதைச் செய்ய முயலவேண்டும். அதற்கான வாய்ப்பும் கடமையும் பொறுப்பும் எனக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நான் செத்தால், எனக்குப் பின் யார் இதைச் செய்வார்கள்?"* - என்று திடீரென ஒரு நாள் ஒரே போடாகப் போட்டார் அவர்.

இது 2006ஆம் ஆண்டு நடுப் பகுதியில் லண்டனில் உள்ள அவரது நியூமோடன் இல்லத்தில் நான் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது இடம்பெற்ற உரையாடல் என்று எனக்கு நினைவு.

*"புதுடில்லி அதிகார நியமனம் ஒன்று இதற்கு வசதியான - வாய்ப்பான - சூழ்நிலையை எனக்குத் தந்திருக்கின்றது."* - என்றார் அவர். விவரத்தைக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அப்படி அச்சமயத்தில் அதிகாரத்துக்கு வந்த நபர் யார்? அச்சந்தர்ப்பத்தை பாலா பயன்படுத்தினாரா? - இவற்றை அடுத்த வாரம் பார்ப்போமா?

என்றாலும் அதற்கு முன்னர் வாசகர்களுக்கு ஒரு 'க்ளு' தந்து விடுகின்றேன் - ஊகிப்பதற்காக.

கொழும்பில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் 1987 ஜூலை 29ஆம் திகதி கைச்சாத்திடுவதற்காக, அன்று காலையில் புதுடில்லியிலிருந்து கொழும்பு புறப்பட முன்னர், அதிகாலை 2 மணி வரை விடிய விடிய புதுடில்லியில் இது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி.

பிரதமரின் இல்லத்தில் நடந்த அந்த உரையாடலில் பிரதமர் ராஜீவுடன் புலிகளின் தலைவர் பிரபாகரன், மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், தமிழக அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போதுதான் ராஜீவ் - பிரபா இடையில் எழுதப்படாத ஓர் ஒப்பந்த இணக்கமும் ஏற்பட்டது. இதுவெல்லாம் பலருக்கும் தெரிந்த விடயங்கள்தான்.

ஆனால் அச்சமயம் அங்கு பிரசன்னமாகியிருந்து, விடயங்களைக் கையாண்ட மற்றொருவரும் இருந்தார். அவர் குறித்து பலரும் அறிந்திருக்கவில்லை.

அந்த நபர் யார்? அவர் அதிகாரத்துக்கு வந்தமையை பாலா அண்ணன் ஏன் வாய்ப்பான சந்தர்ப்பமாகக் கருதினார்? அடுத்தவாரம் ஆராய்வோம்.

(வளரும்)



'நாம ஏரைப் பிடிச்சு, உலகத்து வயிற்றை எல்லாம் சந்தோஷப் படுத்துறோம். ஆனால் நமக்கு கிடைச்சதெல்லாம் வதங்கின வயிறுதான்.'






# அதிகமானால் ஆபத்து

கதாநாயகியின் கைக்குட்டையை கதாநாயகன் திருடி வைத்துக் கொள்வது, கதாநாயகனின் வியர்வை படிந்த சட்டையை கதாநாயகி எடுத்து தன்னோடு அணைத்துக் கொள்வது... போன்ற காட்சிகளை சினிமாவில் பார்த்திருப்பீர்கள். நிஜமாகவும் இப்படி நடக்கும். 'காதல் பருவத்தில்' இப்படிப்பட்ட ஒரு சில செயல்கள் எப்போதாவது இருந்தால், 'ஓ.கே.' பிரச்சினை இல்லை. அதிகமாக இருந்தால், பெற்றிஷம் (Fetieism). அப்படியென்றால் பெண்கள் உபயோகிக்கும் கைப்பை, ஆடைகள், குடை, செருப்பு, போன்ற ஏதாவது குறிப்பிட்ட பொருட்களை பார்த்ததும் சிலருக்கு 'செக்ஸ்' தூண்டுதல் ஏற்பட்டுவிடும். அதற்காகவே இத்தகைய பெருட்களை கவர்ந்து விடுவார்கள். இவர்கள் அதிகமாக் களவாடுவது உள்ளாடைகளை! இவர்களை 'பெறிஷிட்டுகள்' என்கிறார்கள். இப்படிப் பட்டவர்கள் பெண்களிலும் உண்டு.

இந்த மாதிரியானவர்கள் ஐரோப்பிய நாடுகளிலேயே அதிகம் இருக்கிறார்கள். இப்போது இந்தியாவி லும் அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

''பருவ காலத்தில் செக்ஸை அடக்கி, மறைமுகமாக வடிகால் தேடுகிற நேரத்தில் அவர்களது மனதுக்கும் உணர்வுக்கும் சில 'விஷயங்கள்' - சில செயல்முறைகள் பிடித்துப் போகின்றன. அதுவே பிற்காலத்தில் திருப்திக்குரிய விஷயமாக மாற, அதற்கே அடிமையாகி விடுகிறார்கள். இப்படித்தான் இவர்கள் உருவாகிறார்கள்'' என்கிறார்கள் செக்ஸாலஜிஸ்ட்கள். இப்படிப் பட்ட பலருக்கு குற்ற உணர்வு ஏற்பட்டு, சிகிச்சை பெறும் அளவுக்கு மனம் பாதிப்பு அடைந்து விடுவதுதான் கவலைக்குரிய விஷயம். பருவ வயதில் கொஞ்சம் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்!




''மந்திரி யாரே, நாட்டு மக்கள் என்னைச் செல்ல மாக 'சர்க்கரை வர்த்தி' என்று அழைக்கி றார்களாமே!''
''ஆம் மன்னா, தங்களுக்கு 'டயபடீஸ்' இருப்பது எப்படியோ 'லீக்' ஆகிவிட்டது!''

கத்தரிக்காய் சாப்பிட்டால் உடம்பில் சூடு ஏற்பட்டு உடல் பாதிக்கும். அதன் காம்பையும் சேர்த்து சாப்பிட்டால் சூடு தணியும். உருளைக்கிழங்கு சாப்பிட்டால் வாயு. உருளைக்கிழங்கை தோலுடன் சாப்பிட்டால் வாயு குறையும். வேர்க்கடலைப் பருப்பை தோல் அகற்றி சாப்பிட்டால் பித்தம். சிவப்புத் தோலுடன் சாப்பிட்டால் பித்தம் நீங்கும்.



''இந்த நடிகைக்கு வாயிலேயும், காலலையும் எப்படி அடிபட்டுச்சு?''
''வாய்க்கால்ல தவறி விழுந்துட்டாங்க!''





# சொப்ஸ்டிக்கை உபயோகிப்பது எப்படி?

முதலில் சொப்ஸ்டிக்கை (Chop Stick) கெட்டியாகப் பிடிக்கவும்.

இன்னொரு சொப்ஸ்டிக்கை பென்சில் பிடிப்பது போல் நடுவில், ஆள்காட்டி விரல் மற்றும் கட்டை விரல் ஆகியவற்றின் உதவியோடு படத்தில் காட்டியபடி பிடிக்கவும்.

இரண்டு சொப்ஸ்டிக்குகளையும் இப்படி பிடிக்கக் கற்றுக்கொண்டால் சாப்பாட்டை எளிதல் எடுத்து சாப்பிட முடியும்.

கோழி ஒன்றுதான் பிறப்பதற்கு முன்பும் சாப்பிடப்படுகிறது. இறந்த பின்பும் சாப்பிடப்படுகிறது.



''உன் மாமியார் மேல எவ்வளவு பாசம் இருந்தா அவரை தியேட்டருக்கு சினிமா பார்க்க கூட்டிட்டுப் போவே?''
''நீ வேற! 'பழைய சிவாஜி படம் என்றால் உயிரையே விட்டுடுவேன்' என்று சொன்னாங்க... அதுதான்...!''

# ஒத்துழைப்புக்கு காரணம் பெண்களே தான்!



வேலை வாய்ப்பில் தற்போது ஆண்களுக்கு இணையான வாய்ப்புகள் பெண்களுக்கும் கிடைத்து வருகின்றன. ஆனால், இதற்காக அவர்கள் என்ன கொடுக்கவேண்டியிருக்கிறது என்பதை மதிப்பிடுவது அத்தனை எளிதல்ல. இந்தியாவில் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு பாலிவுட் நடிகர் ஒருவர் அளித்த பேட்டி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. திரையுலகில் வாய்ப்பு பெறுவதற்காக பல பெண்கள் படுக்கைக்கு வரவும் தயாராக இருக்கிறார்கள் என்று அவர் தெரிவித்திருந்தார்.

இன்னொரு அதிர்ச்சியான சம்பவம். அரசு அலுமினிய நிறுவன நிர்வாக இயக்குனர் ஒருவர் தன்னை பாலியல் கொடுமை செய்ததாக அந்நிறுவனத்தின் பெண் ஊழியர் ஒருவர் குற்றம் சாட்டினார். பரபரப்பை ஏற்படுத்திய இந்த விவகாரம் குறித்து இந்திய அரசு, ஒரு விசாரணை கமிஷனை அமைத்தது. இறுதியில் அந்தப் பெண்ணின் குற்றச்சாட்டு உண்மை எனக் கண்டறியப்பட்டது. இதையடுத்து நிர்வாக இயக்குனர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டார்.

இந்த இரு சம்பவங்களிலுமே பெண்கள் கெடுக்கப்பட்டிருக்கின்றனர். அதேநேரம் ஆதாயத்துக்கு ஆசைப்பட்டு விரும்பி, அதற்கு உடன்பட்டிருக் கிறார்கள்.

செக்ஸை பிரதானப்படுத்தி தம்மை உயர்த்திக்கொள்ள நினைக்கும் பெண்ணும் சரி, அப்படி ஒரு கோரிக்கை வைக்கும் ஆணும் சரி, அயோக்கியர்களே.!

உறவில் தாம்பத்திய உறவு தனித்துவம் வாய்ந்தது. பசி எப்படியோ, அப்படி இயற்கையாகத் தோன்றும் உணர்வு இது. தன்னை ஓர் ஆண்மகனிடம் பெண் ஒப்படைக்கிறாள் என்றால் அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அந்த ஆணின் பதவி, தோற்றம் அல்லது அப்பெண்ணுக்கு ஆக வேண்டிய காரியங்கள் .

உலகமெங்கும் இது போன்ற விவகாரங்கள், பெருகிவிட்டன. ஆனால் இதில் ஆண்களை மட்டுமே சமூகம் குற்றவாளியாகக் கருதக்கூடாது. பெண்கள், வெறும் பணி முன்னேற்றத் துக்காக இதுபோன்ற கீழ்தரமான யுக்திகளை நாடவேண்டிய அவசியமில்லை.

இப்படி குறுக்கு வழியில் செல்லும், பெண்களால், தகுதியும் திறமையும் மிக்க பலரது வாய்ப்புகள் பறிபோகின்றன. எனவே, இந்த விவ்காரத்தில் ஆண்களைவிட பெண்களே கண்டனத்துக்குரியவர்கள்!



''ரமேஷ் நாம பிரிஞ்சுடலாம்!''
''ஏன் ...நாம காதலிக்கிறது உங்க வீட்டுக்கு தெரிஞ்சுடுச்சா?''
''ஆமாம், நாம காதலிக்கிறதைத் தெரிஞ்சுட்டு, என் வீட்டில எனக்கு மாப்பிள்ளையே பார்க்க மாட்டேன் என்கிறாங்க!''





''நான் டாக்டர் என்றால் நிறை பேர் நம்ப மாட்டாங்க...!''
''ஏன்?''
''நான்தான் டாக்டர் இல்லையே...!''

மெக்சிக்கோவின் டெபால்சிங்கே நகரம். அரசியல்வாதியான மெண்டோசாவும் திருமதி மெண்டோசாவும் அவர்களது மகளும் மியாமி ரெஸ்டோரண்டில் சேரிவாசிகளான சொசிமோ, பற்றிஸ் இருவரினாலும், பொலிஸ் அதிகாரி மெக்டொனாலினால் பணம் கொடுக்கப்பட்டு கொலை செய்யப்படுகின்றனர். அச்சம்பவத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் பற்றிஸ் காருடன் எரியுண்டு போகிறான். பின்னர் மெக்டொனால் சொசிமோவை கொல்ல முயல்கிறான். தப்பியோடிய சொசிமோ பற்றிஸின் மனைவி டுமாச்சியுடன் மரங்களுக்கிடையே பரண் அமைத்து ஒளிந்திருக்கிறான். அவர்கள் இருவரையும் தேடி பத்திரிகையாளரான ரீட்டா காட்டுக்குள் செல்கிறாள். அவர்களை சந்திக்கின்றாள். தகவல்களை காதலன் ஜோன்சனுக்கு அனுப்புகிறாள். அவர்கள் மூவரையும் பிடிக்க பொலிஸார் வலைவிரிக்கின்றனர். ரீட்டாவை பத்திரமாக அழைத்துச் சென்று ஜோன்சனிடம் சேர்ப்பிக்கின்றான் சொசிமோ. திரும்பி வரும் வழியில் கைத்தொலைபேசி ஒலிக்கிறது. கைத் தொலைபேசியில் பேசியவாறே சொசிமோ இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க முயல்கிறான் மெக்டொனால். அதை உணர்ந்த சொசிமோ வேகமாக ஓடுகிறான். அதேநேரம் தேவாலயப் பக்கமாக ஒன்றுகூடிய ஜோன்சனும் ரீட்டாவும் மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிக்க நினைக்கின்றனர்.

இனி....




## தொடர் - 12

மோட்டர் சைக்கிள் ரொக்கெட் என பறக்கின்றது. ஜோன்சன் ரீட்டாவிடம் பக்கவாட்டு கண்ணாடியை பார்க்கும்படியாகச் சொன்னான்.

"பைத்தியக்காரி மாதிரி உளறாதே! அவர்கள் என்னை தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே வருகிறார்கள். நான் உஷாராகிவிட்டேன். அவர்கள் கண்களில் மண்ணைத்தூவிவிட்டு வருவதற்கே இவ்வாறு நடந்து கொண்டேன். படுபாவிகள் எப்படியோ கண்டுவிட்டார்கள்"

அவன் மூச்சு விடாமல் சொன்னான்.

வண்டி பறக்கின்றது.

ஜோன்சன் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதில் கில்லாடிதான். ஓட்டப் பந்தயக்காரனைப் போல மிக மிக இலாவகமாக ஓட்டுகிறான். அது அகலமான பாதை அல்ல, குறுகலானது. வண்டியின் சக்கரங்கள் வாகன வீதியின் முகத்தை கட கட வென விழுங்கிக் கொண்டு பறக்கின்றன. ரீட்டா பக்கவாட்டு கண்ணாடியில் கண்களைப் பதித்தாள்.

பின்னால்-

கொஞ்சம் தொலைவில் தேவாலயம். புயலைப் போல தொடர்ந்து கொண்டிருக்கும் மோட்டார் சைக்கிள்களின் பின்னால் அம்புலன்ஸ் போல் தோற்றமளிக்கும் ஒரு வண்டி மோட்டர் சைக்கிள்களை கடந்து முன்னுக்கு வர எத்தனிக்கின்றது.

ஆனால், மோட்டார் சைக்கிள்காரர்கள் இடம் கொடுப்பதாகத் தெரியவில்லை.

ரீட்டாவுக்கு இது அதிசயமாகவிருந்தது. அம்புலன்ஸ் வண்டி என்றால் எந்த வண்டியும் உடனே இடம் கொடுத்துவிடும் இந்த மூடர்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று தெரியவில்லையே என்று நினைத்தாள்.

ஜோன்சனின் முன்னால் பாதை பிரிகிறது.

"ஜோன்சன்! நாம் பிழையான வழியை தேர்ந்தெடுத்து விட்டோமா?"

"அதுக்காக கவலைப்படாதே. வேண்டுமென்றே நான் இந்தப் பக்கம் வந்தேன். நாம் போக வேண்டிய வழி தெற்குத்தான்"

"உனக்கென்ன பைத்தியமா? ஏன் அப்படி செய்தாய்?"

"எல்லாம் விசயத்தோடுத்தான். இதோ பார் பாதை பிரிகின்றதே! அதன் இடது பக்கமாகவே செல்வோம். கொஞ்சம் தொலைவில் ஒரு குறுக்கு மணற் பாதை வரும். அதன் வழியாக கொஞ்சம்தூரம் சென்றதும் பிரதான பாதை வரும். அங்கிருந்து நாம் மறுபடியும் வந்த திசைக்கு திரும்பி தெற்கிலுள்ள நமது இடத்துக்குப் போய் சேர்ந்துவிடலாம்."

"ஓ! அப்படியா? பின்னால் வருபவர்களும் அதே வழியில் திரும்பி விட்டால்?"

"மாட்டார்கள். அந்த அளவு தூர இடைவெளி விட்டுத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். திரும்பும் இடம் மறைவானது. வளைவானது. பின்னால் வருபவர்களின் கண்களிலிருந்து நாம் மறைந்து விடுவோம். அதை அவர்கள் ஊகித்து கண்டறிவதற்கு முன்னர் நாம் எங்கள் ஊர் போய் சேர்ந்துவிடலாம்."

"சபாஷ்!"

ரீட்டா ஜோன்சனைப் பாராட்டினாள். அவன் ஒரு திட்டத்துடன் செயல்படுவது அவளுக்குப் பிடித்திருந்தது. அவனிடம் ஏற்பட்டிருந்த அந்த வளர்ச்சி அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

ஆனால், அடுத்தகணமே-

அந்த மகிழ்ச்சியென்னும் கண்ணாடி சுக்கு நூறாக உடைந்து துகள் துகளானது.

மோட்டார் சைக்கிள்களின் பின்னால் வந்து கொண்டிருந்த அந்த வாகனம் அவற்றை முந்துவதற்கு கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தது.

மோட்டார் சைக்கிள்காரர்கள் அதை உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை. அவர்கள் தம் போக்கில் ஜோன்சனை குறி வைத்து பறந்து கொண்டிருந்தார்கள். அப்போதுதான் பின்னால் விரைந்து கொண்டிருந்த வாகனத்திலிருந்து 'அவசரம் அவசரம் வழி விடு வழி விடு' என்பது போல அம்புலன்ஸ் அலறல் கடூரமாக எழுந்தது. அப்போதுதான மோட்டார் சைக்கிள்காரர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தவர்கள் போல திடும்திடுமென விழித்துக்கொண்டார்கள்.

மோட்டார் சைக்கிள்கள் இருபக்கமாக பிரிந்தன. இடைவெளியினூடாக சரேலென அம்புலன்ஸ் வாகனம் ஊடுருவியது. அந்த பாதைகள் பிரியும் வழியில் ஜோன்சனின் மோட்டார் சைக்கிளை நெருக்கமாக அண்மித்தது.

பின்னால் நிகழும் திகில் சம்பவத்தை ரீட்டாவும், ஜோன்சனும் அவதானித்துக் கொண்டுதான் வருகிறார்கள்.

ஆரம்பத்தில் -

அம்புலன்ஸ் வண்டியில் வருபவர்களும் மோட்டார் சைக்கிள்களில் தொடர்பவர்களும் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் - அதாவது பொலிஸ்காரர்கள் என்றுதான் ஜோன்சன் நினைத்தான்.

ஆனால், பின்னால் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் வழியை விடுடா என்பதைப் போன்ற நாடகத்தை அவதானித்தால் அப்படித் தெரியவில்லை. அம்புலன்ஸ் வாகனத்தில் வருபவர்கள் வேறு ஆசாமிகள் என்று தோன்றியது.

அவர்கள் யார்? யாராக இருந்தால் என்ன? ஜோன்சனுக்கு சந்தோஷம். ஆமாம்! அவனுடைய திட்டப்படியே அந்த வளைவில் திரும்பியதும் மோட்டார் சைக்கிள் ஆசாமிகளின் பார்வையிலிருந்து தப்பித்துச் சென்று விடுவதும் இலகுவான காரியமாகிவிட்டது.

கொஞ்சம் தொலைவில்-

அதோ! அந்த வளைவு நெருங்கிவிட்டது.

மகிழ்ச்சி பிடிபடவில்லை.

ஜோன்சன் நிதானமடைந்தான். வண்டியிலிருந்து அதன் ஓடும் வேகம் பெருத்த சப்தத்தை ஏற்படுத்தாத வண்ணம் அவதானித்துக் கொண்டான்.

அம்புலன்ஸ் வாகனம் நெருங்கிவிட்டது. அதனுள் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

அப்போது - அம்புலன்ஸ் வாகனத்தின் முன் ஆசனத்திலிருந்து ஒரு கை வெளியில் நீள்கிறது.

அந்தக் கையில் ஒரு துப்பாக்கி. அது புகையை கக்குகின்றது. குண்டுகள் பறக்கின்றன. கண்ணிமைகள் மூடி திறக்கும் நாழிகைக்குள் இச்சம்பவம் நிகழ்கின்றது.

டுமீல்! டுமீல்!

முதல் குண்டு ரீட்டாவின் தோள் பட்டையில் பாய்கின்றது. அடுத்தது ஜோன்சனின் தோளில் பாய்கின்றது.

வண்டி வந்த வேகத்தில் கொஞ்சம் தொலைவுவரை அங்குமிங்குமாக ஓடி பின்னர் விழுந்து விடுகிறது. ரீட்டா ஏற்கனவே விழுந்து விட்டாள். அவள் முதுகில் சுமந்துகொண்டிருந்த பை தொலைவில் பள்ளத்தில் உருண்டு, புதருள் மறைந்துவிட்டது.

ஜோன்சன் வண்டியை சமாளித்துக் கொண்டு ஓட்டுவதற்கு முயன்றான். முடியவில்லை. உடல் முழுவதும் மின்சாரத் தாக்குதல் உண்டானது போல அதிர்ந்தது. கண்கள் இருண்டன. ரீட்டா கொஞ்சம் தொலைவில் விழுந்து விட்டாள் என்ற நினைவு ஏற்பட்டபோது, அவன் மேலும் நிலைகுலைந்துபோனான். சமாளிக்க முடியவில்லை. வண்டியுடன் சரிந்துவிட்டான்.

அம்புலன்ஸ் அவர்களைக் கடந்தது. அதிலிருந்து இயந்திரத் துப்பாக்கி கட கடவென குண்டு மழை பொழிந்தவாறே ஒரு சூறாவளியென சுழன்று மறைந்தது. சரமாரியாக பாய்ந்த குண்டு மழையில் ஜோன்சனின் உடல் சல்லடையாகிவிட்டதா என்ன? நீரிலிருந்து மணலுக்குள் விழுந்துவிட்ட ஒரு மீனென சளார் சளாரென உடல் பாய்ந்து துடித்தது. பின்னர் அசைவற்றுப்போனது. மோட்டார் சைக்கிளில் தொடர்ந்து வந்து கொண்டிருந்தவர்கள் அதிர்ந்து போனார்கள். கண்முன்னே நடந்தேறிக்கொண்டிருந்த திகில் சம்பவத்தால் அவர்கள் வெலவெலத்துப் போனார்கள்.

"என்ன நடக்கிறது?"

"யார் இவர்கள்?"

இருவரும் ஒருவரையொருவர் திகிலுடன் பார்த்து கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் இருவரும் மத்திய உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்தப் பிரதேசத்தில் உண்மையிலே ஒரு பயங்கரவாத இயக்கம் செயல்படுகின்றதா என்பதை புலனறிந்து, தகவல்களை வெளிப்படுத்துமாறு அவர்கள் பணிக்கப்பட்டிருந்தார்கள்.

இந்த விவகாரம் பிரதேச பொலிஸுக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச பொலிஸுக்கு தெரியாமலேயே அவர்கள் தமது புலனாய்வு வேலைகளை ஆரம்பித்திருந்தார்கள்.

ரீட்டா என்ற பத்திரிகையாளர் காட்டுக்குள் சென்ற விவகாரமும், தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகளையும் அவர்கள் தெரிந்து கொண்டிருந்தார்கள். இந்தப் பிரதேசத்தில் என்ன நடக்கிறது? சனசஞ்சாரம் இல்லை. ஏதோ பழங்காலத்து கிராமம் போலிருக்கிறது. அடிக்கடி கடல் குளியலுக்காக உல்லாசப் பயணிகள் வந்து போகிறார்கள். அதனால், கொஞ்சம் களை கட்டினாற்போல் தெரிகிறது. இப்படி ஒன்றும் புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தபோதுதான் ஜோன்சனை மோட்டார் சைக்கிளுடன் அங்குமிங்கும் பறப்பதைக் கண்டார்கள். இவன் இப்படி சுற்றிக் கொண்டிருப்பதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும். அவசரப்படாமல் ஆளை சமார்த்தியமாக மடக்க வேண்டும் என்றுதான் இந்த உளவாளிகள் ஜோன்சனை தொடர்ந்து கொண்டிந்தார்கள். தேவாலய வாசலில் அவனுக்காக கொக்கு போல காத்திருந்தார்கள்.

திடுதிப்பென ஓர் இளம் பெண் ஓடிவந்தாள். வண்டியின் பின்னால் ஏறிக்கொண்டாள். அவனை கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

(18ஆம் பக்கம் பார்க்க)




# அறிவியல்

ரி.கே.ஆர்

## பாலித் தீவின் எழில்

பசுபிக் கடல் பகுதியில் சிறிய தீவுகள் ஏராளமாக உள்ளன. உலக வெப்பமயமாதல் காரணமாக கடல் மட்டம் உயர்ந்து வரும் ஆபத்தால், தீவுகள் அழியக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது. அது பற்றி இந்தோனேசியாவின் பாலித்தீவில் பசுபிக் கடல் தீவுகளின் தலைவர்கள், கூட்டம் நடத்தினர். உலக வெப்பமயமாதலால் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி பேச்சைத் தவிர்த்து செயலில் இறங்க உலக நாடுகளை கூட்டம் கேட்டுக் கொண்டது. பாலித்தீவின் எழில் மிகு தோற்றம் இது.



## தாக்குதல் ஏவுகணை



தாக்குதல் நடத்த வரும் ஏவுகணையை வழிமறித்து தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனை ஒரிசா கடற்கரை பகுதியில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒரிசா கடற்கரை பகுதியில் சந்திபூர் என்ற இடத்தில் ஒருங்கிணைந்த சோதனை மையம் உள்ளது. ஏவுகணைகளை வழிமறித்து தாக்கி அழிக்கும் சோதனை இங்குதான் நடத்தப்பட்டது. ஒருங்கிணைந்த சோதனை மையத்தில் உள்ள 3ஆவது பகுதியில் இருந்து ஓர் ஏவுகணை செலுத்தப்பட்டது. இதை 'தாக்குதல் ஏவுகணை' என விஞ்ஞானிகள் அழைத்தனர். இது பிருத்வி ஏவுகணையில் இருந்து மேம்படுத்தப்பட்டு உருவாக்கப்பட்டது. இதற்கு இரண்டு நிமிடங்கள் 40 வினாடிகளுக்கு பிறகு, வீலர் தீவில் இருந்து அதி நவீன ஏவுகணை செலுத்தப்பட்டது. இந்த ஏவுகணை உள்நாட்டு தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டது. இதற்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. தற்சமயம் இதை 'ஏஏடி-02' என விஞ்ஞானிகள் அழைத்து வருகின்றனர். இரண்டு ஏவுகணைகளும் 15 கி.மீ., உயரத்தில் நடுவானில் சந்தித்துக் கொண்டன. தாக்குதல் ஏவுகணையை, அதிநவீன ஏவுகணை வழிமறித்து தாக்கி அழித்தது. இந்த சோதனை வெற்றிகரமாக நடந்தேறியது என இராணுவ ஆய்வு மற்றும் மேம்பாட்டுத் துறை விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.


ஏவுகணையை வழிமறித்து தாக்கி அழிக்கும் திறனுடன் உருவாக்கப்பட்டுள்ள ஏவுகணை ஏழு மீட்டர் நீளம் கொண்டது. எதிர்வரும் ஏவுகணையின் பாதையை அறிந்து அதற்கு ஏறறவாறு தனது பாதையை மாற்றிக்கொள்ளும் அளவுக்கு இந்த ஏவுகணையில் நவீன ராடார் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதே போன்றதொரு சோதனை கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடத்தப்பட்டது. தற்போது நடத்தப்பட்டது இரண்டாவது சோதனை. சில நாட்களுக்கு முன் 'டம்மி' ஏவுகணை சோதனை நடந்தது. இப்போது உண்மையான சோதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இந்த சோதனையை ஒட்டி, ஐந்து கிராமங்களைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

## இன்னிசை இசைக்கும் ரோபோ

வயலின் வாசிக்கும் இந்த ரோபோ, ஜப்பானைச் சேர்ந்த டொயோடா மோட்டார் நிறுவனத்தின் காட்சியரங்கில் வைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் அண்மையில் 3 விதமான ரோபோக்களை தயாரித்துள்ளது. ஒன்று ' பார்ட்னர்ரோபோ', மற்றொன்று வயலின் வாசிக்கும் ரோபோ. மூன்றாவது இருசக்கர வாகனம் போல மனிதனை சுமந்து செல்லும் ரோபோ. போகிற போக்கைப் பார்த்தால், மனிதனுக்கு மனிதன் போட்டி போடும் நிலை மாறி ரோபோக்களுடன் போட்டி போடும் காலம் வந்துவிடும் போல் தெரிகிறது.



## சூரிய மண்டலத்தைக் கடந்து சென்ற முதல் விண்கலம்



மனிதன் உருவாக்கிய பொருள் ஒன்று சூரிய மண்டலத்தைக் கடந்து சென்றது என்றால் அது பயனியர் - 10 என்ற அமெரிக்க விண்கலம்தான்.

02.03.1972 அன்று பூமியில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்ட பயனியர் - 10 விண்கலம், 1983 ஆம் ஆண்டு சூரியமண்டலத்தைக் கடந்து சென்றது. 19.08.2000 வரை இந்த விண்கலத்திலிருந்து 'ரேடியோ அன்டெனா' மூலம் சமிக்ஞைகள் வந்தன. அதற்குப் பிறகு ஒரு சமிக்ஞையும் வரவில்லை. இந்த நிலையில் எட்டு மாதங்கள் கழித்து, 2001 ஏப்பிரலில் பயனியர்- 10 விண்கலத்திலிருந்து ரேடியோ சமிக்ஞைகள் வருவதைக் கேட்டு 'நாஸா' (NASA) விஞ்ஞானிகள் மகிழ்ச்சியடைந்தனர். செவ்வாய்க்கும், வியாழனுக்கும் இடையே உள்ள குறுங்கோள்கள் பாதை வழியேசென்ற முதல் விண்கலமும் இதுதான். வியாழனை அருகில் சென்று புகைப்படம் எடுத்து அனுப்பிய முதல் செயற்கைவிண்கலமும் இதுதான். இவ்வளவு பெருமைகள் உள்ள பயனியர்-10 இதுவரை 35 ஆண்டுகள் பயணம் செய்ததில் பூமியிலிருந்து 11.2 பில்லியன் கி.மீ. தூரத்துக்கு அப்பால் உள்ளது. இது தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கிறது.

## தகவல்.காம்



- மனித குடலை கிடையாக விரிக்க முடிந்தால் அதனை ஒரு டெனிஸ் திடலின் பரப்பளவுக்கு நீட்ட முடியும்.
- நிலாவும், பூமி போல ஒரு பெரிய உருண்டைக் கல்தான். அதனால்தான் இருட்டான இரவில் அது நமக்குத் தெரிவதே இல்லை. அந்நாளை நாம் அமாவாசை என்கிறோம். அமாவாசையன்றும் 7-8 மணிக்கு மேற்கு திசையில் நிலா இருந்தாலும் அது தென்படுவதில்லை. சூரிய ஒளி அதன்மீது பட்டால் உடனே அது நமக்குத் தென்படுகிறது.
- வேதியியல் சோதனைக்கூடங்களில் அமிலங்களையும் காரங்களையும் வேறுபடுத்தி அறிந்துகொள்வதற்குப் பயன்படுத்தும் தாளுக்கு லிட்மஸ் தாள் என்று பெயர்.
- கண்ணாடி தன் உருநின்றழிய ஒரு மில்லியன் ஆண்டுகள் எடுக்கும்.
- ஓர் ஆய்வாளர் ராடார் குழாய்க்கு அருகில் நடந்து சென்றபோது அவரது பொக்கற்றில் இருந்த சொக்லட் உருகியதை அடுத்தே மைக்ரோவேவ் (Micro Wave) கண்டறியப்பட்டது.




**அன்பு மாணவர்களே, பெற்றோர்களே, வழிகாட்டும் ஆசிரியர்களே!**

2008ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள (தற்போது தரம்-04 இல் கற்கும்) இளம் சிறார்களை பாடத்திட்ட ஒழுங்கில் இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில் எமது அயராத முயற்சியாலும் பிரபல இளம் தலைமுறை ஆசிரியர்களான து.திலீப்குமார் - கொழும்பு, சண்.சுதர்சன் -கண்டி, தி.சுரேஸ்குமார்-கம்பளை மற்றும் பிரபல ஆசிரியர்களின் கூட்டுமுயற்சியினாலும் உருவாக்கப்பட்ட படிமுறை மாதிரிப்பரீட்சை வினாத்தாள்கள் இப்பகுதியில் வாரந்தோறும் வெளிவரும். இதனை மாணவர்கள் தொடர்ந்து பயிற்சி செய்தால் பரீட்சையில் வெற்றி அடைவதுடன் மாணவர்களின் முன்னேற்றம் இயல்பாகவே புரியும் என்பது எமது அசையாத நம்பிக்கை. அந்த வகையில் 15ஆவது வினாத்தாள் இன்று வெளிவருகின்றது.

**இவ்வாறாகப் பரீட்சையைப்போட்டி, எப்பத்திரிகைகளிலும் இல்லாத ஒரு விசேட சேவையை எமது கல்விச் சுடர், முதல்முறையாக ஆரம்பித்து வெற்றிநடை போடுகின்றது.**

அதாவது, இப்பகுதியில் பிரசுரமாகும் படிமுறைப்பரீட்சை வினாத்தாளுக்கு அன்றையதினமோ அல்லது அடுத்துவரும் நாட்களில் மாணவர்கள் சுயமாக விடையளித்து இவ்வினாத்தாளை எமக்கு தொடர்ந்துவரும் வியாழக்கிழமைக்கு முன் அல்லது வியாழக்கிழமை கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தால், அவை எமது கல்விச்சுடர் ஆசிரியர் குழுவினால் திருத்தி, புள்ளியிடப்பட்டு மறுநாளே தங்களுக்குத் தபாலிடப்படும். நீங்கள் இவ்வினாத்தாளை அனுப்பும் போது அதனுடன் தங்கள் சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை ஒன்றையும் அனுப்புதல் அவசியமாகும். பாடசாலைகள், கல்வி நிலையங்கள் அதிக வினாத்தாள் களை அனுப்பவேண்டி இருப்பின், அதனை அனுப்பும் போது அதன் நிறைக்கேற்ப பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட பெரிய கடித உறை ஒன்றையும் வைத்து அனுப்புதல் அவசியமாகும்.

வினாத்தாளின் மேலே உள்ள சுயவிவரங்கள் யாவும் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**உங்கள் வினாத்தாள்களை அனுப்பவேண்டிய முறை:-**

கடித உறையின் வலதுபக்க மேல்மூலையில் (படிமுறைப் பரீட்சை -15 (Steping Exam - 15) எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

| | யாழ் மாணவர்களுக்கு மட்டும்.. |
|---|---|
| ஆசிரியர்,<br>கல்விச்சுடர்,<br>சுடர் ஒளி பணிமனை,<br>இல. 85,<br>ஜயந்தமல்லிமாராச்சிமாவத்த,<br>கொழும்பு-14. | ஆசிரியர்,<br>கல்விச்சுடர்,<br>உதயன் பணிமனை,<br>இல. 361,<br>கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம். |

## "எந்தமாதிரியும் இல்லாத முன்மாதிரியான கல்விச்சுடரின் புதிய படைப்பு"

மாணவர்களே! பெற்றோர்களே! வழிகாட்டும் ஆசிரியர்களே!

எம்முடன் இணைந்து இந்த அளப்பெரிய சேவையின் பயனை அனுபவிக்க உங்களுக்குக் கிடைத்துள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

## பாராட்டப்படும் கல்விச்சுடர் மாணவச் செல்வங்கள்

படிமுறைப் பரீட்சை - 12 இல் சிறந்த புள்ளிகளைப் பெற்ற கீழ்வரும் மாணவர்களை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



N.கிருஷாகரி 153 (கல்முனை-02) · M.சர்ஜுன் 175 (மாவனல்ல) · R.டன்ஸ்டன் 170 (கல்முனை-01) · S.அஹ்தர் அலி 170 (சம்மாந்துறை) · H.நுஹா 158 (நிந்தவூர்-16)

A.பாத்திமா நிஸ்மா 182 (நிந்தவூர்) · M.சந்தோஷ் 175 (நிலாவெளி) · R.ஜான்சி 170 (தோனியகல) · F.சஹ்றா 170 (நிந்தவூர்-14) · M.நிஹாறுல் பர்ஹத் 170 (நிந்தவூர்-16)

A.தஜீவன் 167 (நிந்தவூர்) · M.மின்னத் ஹசீமா 167 (நிந்தவூர்-15) · M.ஜெம்சித் ஹசன் 164 (நிந்தவூர்-13) · M.அக்தர் 164 (நிந்தவூர்-09) · நாதியா 161 (நிந்தவூர்)

M.ஜவாஹிர்தீன் 161 (நிந்தவூர்-07) · N.பாத்திமா நுஸ்லா 158 (நிந்தவூர்-03) · சஞ்ஜிதா 158 (நிந்தவூர்) · U.அமானி 158 (நிந்தவூர்)

M.ஆஷிக் 155 (கம்பளை) · T.உமாமா 158 (நிந்தவூர்-13)

திருகோணமலை ACA கல்வி நிலையத்தை சேர்ந்த கீழ்வரும் சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.



M.ஆனந் 150 (திருகோணமலை) · S.தர்சாயினி 150 (திருகோணமலை) · K.சர்விகா 136 (திருகோணமலை) · S.கில்ரன் ஸ்டாலின் 140 (திருகோணமலை) · K.சடாச்சரன் 140 (திருகோணமலை)

சுடர் சிந்தனை:- "முயற்சி செய்யாது பலனில்லை எனவே முயற்சித்துக் கொண்டேயிரு.."

# படிமுறைப் பரீட்சை - 15 நேரம்: 1 மணி

| | | |
|---|---|---|
| மாணவர் பெயர் | : | ........................................ |
| முகவரி | : | ........................................ |
| கற்கும் பாடசாலை/ கல்வி நிலையம் | : | ........................................ |
| தொலைபேசி இலக்கம் | : | ........................................ |

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1-5 வரையான வினாக்களுக்கு விடை தருக.

" தம்பி, தங்கை கடலைப் பார்
பரந்து கிடக்கும் நீரைப் பார்
தாவிக்குதிக்கும் அலையைப் பார்
தரையில் பொங்கும் நுரையைப் பார்

கடலில் துள்ளும் மீனைப் பார்
கப்பல் அசையும் அழகைப் பார்
மீனைப் பிடிக்கும் வலையைப் பார்
மூழ்கிக் கிடக்கும் முத்தைப் பார்"

1) இங்கு பாடலில் குறிப்பிட்டுள்ளவாறு தரையில் பொங்குவது எது?
........................................
2) இங்கு மீன் என்ன செய்கின்றது?
........................................
3) இங்கு பாடலில் அதிக தடவைகள் வந்துள்ள சொல் எது?
........................................
4) கடலில் மூழ்கிக் கிடப்பது எது?
........................................
5) இப் பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி எது?
........................................

02. பின்வரும் சொற்களின் ஒத்தகருத்துப் பதங்களைத் தருக.

1) பிரளயம் - ........................
2) ககனம் - ........................
3) அறுதி - ........................
4) பற்று - ........................
5) புறக்கணிப்பு - ........................

03. பின்வரும் சொற்களின் எதிர்க்கருத்துப் பதங்களைத் தருக.

1) நிதானம் - ........................
2) காழ்ப்பு - ........................
3) காருண்யம் - ........................
4) நேயம் - ........................
5) செழிப்பு - ........................

04. 1) கீழே தரப்பட்ட பிராணிகளின் பெயரைத் தெரிவு செய்து அவற்றின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக. .

.............. .............. .............. ..............

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | பல்லி | 2) | சிலந்தி | 3) | முதலை | 4) | தேள் |
| 5) | நத்தை | 6) | ஓணான் | 7) | தவளை | 8) | கீரி |

2) கீழே தரப்பட்டுள்ள நவீன விளையாட்டுக்களின் பெயர்களைத் தமிழில் தருக.

.............. .............. .............. ..............

# மலையகத்தில் தமிழர்க்குள் ஆழ ஊடுருவும் சிங்களம்

இருநூறு வருடங்களுக்கு மேலாக அதாவது 1796 இல் இருந்து மலையகத்தில் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கென ஓர் கலை, கலாசாரம், பண்பாடு, மொழி என்பன உண்டு.



இம் மக்கள் தேயிலை, இறப்பர் தொழிலாளிகளாகவே (70 சத வீதத்தினர்) அன்று தொடக்கம் இன்று வரை இந்த நாட்டில் இருக்கின்றனர். இலங்கையின் பொருளாதாரத்தில் 70 சத வீத உழைப்பை, வருமானத்தை பெற்றுக் கொடுக்கும் இம்மக்கள் பெரியளவில் எவ்வித முன்னேற்றமும் இன்றி வாழ்ந்து வருகிறார்கள்.

1948களுக்குப் பின் வந்த சிங்களத் தலைவர்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆங்காங்கே ஏற்படுத்தி தமிழர்களின் பெரும்பான்மையை இழக்கச் செய்து வருகின்றனர். அத்தோடு சிங்களப் பாடசாலைகளுக்கு போதிய அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்து சிங்களம் படித்தவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களையும் அரசு பெற்றுக் கொடுக்கிறது. இதனால் பலர் இன்று சிங்களவர்களாகவே மாறிவிட்டனர்.

திட்டமிட்ட சில அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் தமிழர்கள் வெளியேற்றப்படுவதும் அந்த இடத்தில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதும் சாதாரண விடயம் ஆகிவிட்டது.

உதாரணமாக மகாவலி அபிவிருத்தி திட்டம், மேல் கொத்மலை நீர்த்தேக்கம் ஆகியவற்றில் தமிழர்கள்தான் ஆரம்பத்தில் 90 சதவீதம் வாழ்ந்தனர். ஆனால் இன்று இவர்களில் பெரும்பான்மையானோர் சிங்களவர்களாகத்தான் வாழ்கின்றனர்.

இங்கு வாழும் எம்மவர்கள் பலர் சிங்களப் பாடசாலைகளில் கற்பதோடு, வானொலியில் சிங்கள அலைவரிசை கேட்பதும், சிங்களவர்கள் போன்று பெயரை வைப்பதும் வேதனை தருகிறது. வடக்கு, கிழக்கில் ஆயுதங்களால் தமிழர்கள் அழிக்கப்படுகின்றனர். ஆனால் தென்பகுதியில் மொழியைக் கொண்டு தமிழர்களை படிப்படியாக சிங்களவர்களாக மாற்றி, தமிழை அழிக்கின்றனர். அதுதான் அப்படி என்றால் தமிழ் தெரிந்தவர்களே தமிழை ஒதுக்குவதுதான் கவலைக்குரியது. தற்போது மலையகத்தில் பொலிஸ் மற்றும் அரச நிறுவனங்களில் பல தமிழர்கள் வேலை செய்கின்றனர். எவராவது தமிழில் இவர்களுடன் கதைத்தால் தமிழே தெரியாத மாதிரி சிங்களவர்கள் போன்று கதைப்பது வேதனை அளிக்கிறது. அதே நேரம் சிங்களவர்கள் தமக்குத் தெரிந்த தமிழில் பதில் அளிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி பல இடங்களின் பெயர்களை சிங்களமாக மாற்றிவிட்டனர். உதாரணமாக சாமிமலையை 'நிசங்க உயன' எனவும், பொகவந்தலாவையிலிருந்து வரும் மணல் ஆறு, 'கெசல்வத்தை ஆறு' எனவும் மாறறப்பட்டுவிட்டன. இதற்கு தாளம் போடுவது போன்று தமிழ் அரசியல்வாதிகளும் அதே சிங்கள பெயர்களையே உச்சரிப்பது எமக்கு அதிர்ச்சி அளிக்கிறது.

தமிழ் நாட்டில் ஆங்கிலம் கலந்த தமிழனும், மலையகத்தில் சிங்களம் கலந்த தமிழனும்தான் எதிர்காலத்தில் இருக்கப் போகின்றார்கள் என்பது தடுக்கப்பட வேண்டியதாகும்.

ஒரு சில அரச பணிமனைகள், திணைக்களங்களில் தமிழைக் கொலை செய்துள்ளார்கள். இதையாவது மலையக அரசில்வாதிகள் தடுக்காமல் இருப்பது ஏன் என்று தெரியவில்லை.

நாம் தூய தமிழில் கதைக்கும் போது பிள்ளைகளும் அதே பாதையில் சென்று தூய தமிழில் கதைப்பார்கள். நீர்கொழும்பில் வாழ்கின்ற தமிழர்களுக்கு தமிழ் தெரியாமல் போனது இதனால்தான். அதே போன்று மலையகத்திலும் ஒரு நிலை வரக்கூடாது. நாம் அனைவரும் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

தமிழில் கதைத்து, தமிழ்ப் பெயர்களை வைத்து, தமிழர்களாக வாழ அனைவரும் முன்வர வேண்டும்.

-யாழ் ராஜா-

## பேனா நண்பர்கள்



பெயர் : பாக்கியமுத்து நிதர்சன்
வயது: 19
முகவரி: கே.கே.எஸ்.வீதி, பூனாறிமடம், கொக்குவில், யாழ்ப்பாணம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை



பெயர் : யே.கொலஸ்ரிக்கா
வயது: 17
முகவரி: 16ஆம் கட்டை, பரந்தன், வைரவர் கோயில்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர் : சி.மெக்சிம்
வயது : 18
முகவரி: வ.சிவா, 4ஆம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர் : ஏ.ஆர்.ரிஸ்வான் ஜெஹம்மத்
வயது : 21
முகவரி: 166, கிராமோதய வீதி, சாய்ந்தமருது - 13.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு.



பெயர் : ந.கண்ணன்
வயது : 25
முகவரி: கோவில் முள்ளியான்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, பேனா நட்பு

### பேனா நண்பர்கள்

உங்கள் அபிமான சுடர்ஒளி வாரஇதழ் பத்திரிகையில் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'பேனா நண்பர்கள்' பகுதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆர்வமுள்ளவர்கள் புகைப்படப் பிரதியுடன், தேசிய அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

கீழ்க்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெயர், முகவரி, வயது, பொழுதுபோக்கு.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி
'பேனா நண்பர்கள்'
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.



# ஒரு பூச்சியின் உரையாடல்

விஞ்ஞானச் சிறுகதை

"என்னைக் காப்பாற்று! என்னைக் காப்பாற்று!" அந்தச் சின்னக் கீச்சுக்குரல் திரும்பத் திரும்பக் கேட்டபோது ஹென்றி திடுக்கிட்டுப்போனான்.

அப்போதுதான் 'ஈ' என்ற திகில் படம் பார்த்துவிட்டுத் திரும்பியிருந்தான். அதன் க்ளைமாக்ஸ் காட்சியில் ஒரு மனிதன் பிரம்மாண்டமான ஈ ஆகிறான். அதன் நினைவு வந்து இன்னும் பயந்தான்.

"சேச்சே அப்படி இருக்காது" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு சுற்றிலும் பார்த்தான்.

"எங்கே இருக்கே?" என்று கேட்டான்.

"மூலையில், விட்டத்தில், சீக்கிரம்!" என்ற அந்தக் குரலில் பயம் இருந்தது.

மேலே ஏதும் தெரியவில்லை. அறையில் ஒரு 15 வாட் பல்ப் மட்டும் இருந்ததால் ஏதும் தெரியவில்லை. நாற்காலி போட்டு அதில் நின்றுகொண்டு குரல் வருவதாக இருந்த மேல் விட்டச்சுவர், மூலையைச் சந்திக்கும் இடத்தைக் கூர்ந்து நோக்கினான்.

ஒரு சிறிய குளவி, ஒரு சிலந்தி வலையில் திணறிக்கொண்டிருந்தது. மூலையில் சற்றுத் தூரத்தில் ஒரு சிலந்தி தன் எட்டுக் கண்களும் பளிச்சிடக் காத்திருந்தது.

" நீயா, பேசினாய்?" என்றான் ஆச்சரியத்துடன் குளவியை நோக்கி.

"ஆம்" என்றது சின்னக்குரல்.

"என்னை அது விழுங்கு முன் காப்பாற்று."



ஹென்றி வலையில் விரல் வைக்குமுன், "காப்பாற்றினால் என்ன தருவாய்?" என்று கேட்டான்.

"முதலில் என்னைக் காப்பாற்று. அதன்பின் அதற்கான சன்மானத்தைப் பற்றிப்பேசலாம்" என்றது கீச்சுக் குரல்.

"ம்ஹூம் மாட்டேன். நீ ஏதாவது இருட்டில் மறைந்து என்னை அம்போ என்று கையெல்லாம் ஒட்டடையோடு விட்டுவிடுவாய்."

"சரியான முரட்டு ஆளப்பா நீ."

"இல்லையில்லை. மாறாக நான் சாது. அதுதான் என் பிரச்சினை. தன்னம்பிக்கை இல்லை. சமூகத்திலோ, அழகிலோ, அந்தஸ்திலோ எதிலும் சிறப்பில்லை. என் வாழ்க்கை முழுவதும் உடல் வலிமையும் புகழும் வளர்ப்பது பற்றிய புத்தகம் படித்தே செலவழிந்தாகிவிட்டது. என்னை பார். இப்போ என்ன ஒல்லியான ஆசாமி பார்."

கொஞ்ச நேரம் விட்டுப் பதில் குரல் வந்தது.

"ஆம், ஒல்லியாகத்தான் இருக்கிறாய்."

"ஐந்தடி மூன்று அங்குலம் உயரம், நூறு பவுண்ட் எடை, முகப்பரு, சோர்ந்த கண்கள்... உதிரும் கேசம்... எனக்கு உன்னால் எதுவும் உதவ முடியாது."

"நிஜமாகவே என்னால் முடியும். நான், நீ நினைப்பது போல் இல்லை. என்னால் பேச முடிகிறதே கவனித்தாயா? பூச்சி பேசுமா எங்கேயாவது? நான் யார் தெரியுமா? இந்த வடிவத்துக்குச் சபிக்கப்பட்ட ஒரு ஜீனி."

" ஜீனி! அராபிய இரவுக் கதைகள் போலவா? மந்திரம் கற்ற, வரம் தரும் ஜீனியா?"

"ஆம்" என்றது அந்தச் சிராய்ப்புக் குரல்.

" ப்ளீஸ் சீக்கிரம்! அது என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறது. என்னைக் காப்பாற்றினால் உனக்கு ஒரு வரம் அளிப்பேன்."

"அத்தனை சக்தி இருந்தால் உன்னைச் சாப்பிட வரும் ஜந்துவை நீயே கொன்று விடுவதுதானே?"

"அதுதானே சிக்கல். ஒரு ஜீனி தன் சக்தியைத் தற்காப்புக்குப் பயன்படுத்தக்கூடாது. அது சுயநலத்துடன் சேர்த்தி. எப்போதும் தன் எஜமானின் சேவைக்குத்தான் பயன்படுத்த வேண்டும். இப்போது நீதான் எஜமானன்!"

"அப்படி ஏதாவது வாக்குறுதி கொடுத்திருக்கிறாயா?"

"நிச்சயமாக. ஒரு ஜீனி சுயநலத்துக்குத் தன் சக்தியைப் பயன்படுத்த முடிந்தால் தலைக்கனம் அதிகமாகிப் பிரபஞ்சத்தையே ஆளலாமே!"

"விதியை மீறினால் என்ன ஆகும்?"

"என் மந்திர சக்தியை இழந்து சாதாரண ஆவியாக உலாவுவேன். நடப்பதைத் கையாலாகாமல் பார்த்துக்கொண்டிருப்பேன்."

"அப்படியொரு சிக்கலா?" என்று அனுதாபித்தான் ஹென்றி.

"ஆனால் ஒரு சந்தேகம். கதைகளில் எல்லாம் நீங்கள் மூன்று வரம்தானே தருவீர்கள்? நீ மட்டும் ஏன் ஒரு வரம் என்று சிக்கனம் பண்ணுகிறாய்?"

(27 ஆம் பக்கம் பார்க்க)



# நல்லவன் ஆகிறார் சிம்பு

இனிமேல் நான் கெட்டவனாகவோ, பெண்களை மோசமாகச் சித்திரிக்கும் கதைகள் உள்ள படங்களிலோ நடிக்கமாட்டேன் என்று கூறியுள்ளார் நடிகர் சிம்பு. 'கெட்டவன்' படம் முடக்கி வைக்கப்பட்டுள்ள நிலையில் 'காளை' படத்தில் நடித்துவருகிறார் சிம்பு. புதிதாக 'சிலம்பாட்டம்' படத்தில் நடிக்க ஆரம்பித்துள்ளார். இந்த நிலையில் புதிய முடிவை எடுத்துள்ளார் சிம்பு. இனிமேல் நான் நடிக்கும் படங்களில் சமூகத்திற்குத் தேவையானவையாகவே இருக்கும். மேலும் பெண்களை மோசமாகச் சித்திரிக்கும், பெண்களிடம் மோசமாக நடந்துகொள்ளும் வேடங்கள் போன்றவற்றில் நடிக்க மாட்டாராம் சிம்பு. 'சிலம்பாட்டம்' குறித்து சிம்பு கூறுகையில், ''சிலம்பாட்டம் படத்தில் மிகவும் அமைதியான, மென்மையான வேடத்தில் நடிக்கின்றேன். சாந்தமாக இருக்கும் இளைஞன் எப்படி ஆக்ரோஷமாக வெடிகுண்டு எறிகின்றான் என்பதுதான் கதை. இனிமேல் நான் எந்தப் படத்திலும் கெட்டவனாக நடிக்கப் போவதில்லை. பெண்களை மோசமாக சித்திரித்துக் காட்டும் கதைகளைக் கொண்ட படத்தில் நடிக்கப் போவதில்லை. முன்பு இளைஞர்களுக்காக படம் எடுத்தேன். ஆனால், இப்போதெல்லாம் என்னுடைய நடிப்பு தாய்க்குலங்களையும், குழந்தைகளையும் போய்ச் சேரவேண்டும் என்பதுதான் என்னுடைய எண்ணம்'' - என்றார் சிம்பு.



# தங்கருக்கு பாராட்டு

தங்கர்பச்சான் இயக்கி சத்யராஜ் நடித்துள்ள 'ஒன்பது ரூபா நோட்டு' படத்தைப் பார்த்துவிட்டு அவரை வெகுநேரம் பாராட்டித் தள்ளியுள்ளார் முதல்வர் கருணாநிதி. சில நாட்களுக்கு முன்னர் போர் பிரேம்ஸ் ப்ரிவியூ திரையரங்கில் அவருக்காக இந்தப் படம் சிறப்பாகத் திரையிடப்பட்டது. கருணாநிதியுடன் தங்கரும், சத்யராஜும் படம் பார்த்தனர். படத்தைப் பார்த்துவிட்டு சத்யராஜையும் தங்கரையும் பாராட்டிய முதல்வர், இது மிகப் பெரிய வெற்றிப் படமாக அமையும் என்றாராம். இவர்களுடன் இணைந்து சிறப்புக் காட்சியைப் பார்த்த ஒரு பெரியவர், நேராக தங்கரின் வீட்டுக்கு வந்தது வீட்டுவாசலில் அமர்ந்து அழுதபடி இருந்திருக்கிறார். ஒரு பக்கம் அந்தப் பெரியவர் குறித்த கவலையும் மறுபக்கம் படம் ஏற்படுத்திய பாதிப்பின் பூரிப்பும் கலந்தபடி உணர்ச்சி வசப்பட்டவராய் இதைச் சொல்லும்போது தங்கரின் கண்களும் கலங்குகின்றன. மகன்களால் புறக்கணிக்கப்படும் ஏழைத் தந்தை மனைவியுடன் வீட்டை விட்டு வெளியேறி பல வருடங்களுக்குப்பின் மீண்டும் தன் குழந்தைகளைப் பார்க்க சொந்த ஊருக்குத் திரும்பி வருவதே கதை. மாதவன் படையாச்சி என்ற வயதான வேடத்தில் சத்யராஜ் மிக அழகாக நடித்துள்ள இந்தப் படத்துக்கு பரத்வாஜின் இசை மிகப் பெரிய பக்க பலமாக அமைந்துள்ளது. சர்வதேச திரைப்பட விழாக்களில் இந்தப் படம் நிச்சயம் பெரிய பெயர் பெறும் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

# பாவனாவின் திறமை

குடும்பப் பாங்காக மட்டும்தான் எனக்கு நடிக்கத் தெரியும் என்று எவரும் முடிவு கட்டிவிட வேண்டாம்; கிளாமரிலும் நான் கலக்குவேன் என்கிறார் பாவனா. சின்ன இடைவெளிக்குப் பின்னர் தமிழில் மீண்டும் பல படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் பாவனா, மாதவன் நடிக்க, சீமான் இயக்க உருவாகியுள்ள 'வாழ்த்துக்கள்' படத்தில் நடித்து முடித்துள்ளார். அடுத்து வினய்க்கு ஜோடியாக 'ஜெயம் கொண்டான்' படத்தில் நடிக்க ஆரம்பித்துள்ளார். இப்படத்தின் பாடல் காட்சிகளில் இதுவரை இல்லாத அளவுக்கு கிளாமராக நடித்துள்ளாராம் பாவனா. அப்படியா பாவனா என்று அவரிடம் கேட்டபோது, ''கற்பனை செய்து பார்க்கும் அளவுக்கு மிதமிஞ்சிய கவர்ச்சியெல்லாம் காட்டி நடிக்கவில்லை. ரசிகர்கள் முகம் சுளிக்காத வகையில்தான் கிளாமர் காட்டியுள்ளேன். அதில் தவறேதும் இல்லை. என்னால் குடும்பப் பாங்கான வேடங்களில் மட்டுமே நடிக்க முடியும் என சிலர் என்னை தவறாக நினைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் என்னால் கிளாமராகவும் நடிக்க முடியும். ரசிகர்கள் முகம் சுளிக்காத வகையில் கிளாமர் காட்டி நடிப்பதில் தவறில்லை'' - என்றார்.

# சேரனின் 4 நாயகிகள்

சேரன் நாயகனாக நடிக்கும் 'ராமன் தேடிய சீதை' படத்தில் அவருக்கு ஜோடியாக நான்கு நாயகிகள் நடிக்கவுள்ளனர். அதில் மூன்றாவது நாயகியாக விமலா ராமன் ஒப்பந்தம் ஆகியுள்ளார். 'புதிய கீதை' என்ற படத்தை விஜயை வைத்து இயக்கிய ஜெகன்ஜி, தற்போது சேரனை வைத்து இந்த 'ராமன் தேடிய சீதை' என்ற படத்தை இயக்குகிறார். படு வித்தியாசமான கதையுடன் இப்படத்தைக் கொண்டுவரப் போகிறாராம் ஜெகன்ஜி. சேரனுக்கு இதில் நான்கு நாயகிகள் என முடிவுசெய்துள்ளனர். அதில் சில நாட்களுக்கு முன்னர் இரண்டு நாயகிகள் தெரிவுசெய்யப்பட்டனர். கேரளத்து ரம்யா, தூத்துக்குடி நாயகி கார்த்திகா ஆகியோரே அந்த இருவர். தற்போது 3ஆவது நாயகியாக 'பொய்' நாயகி விமலா ராமன் ஒப்பந்தமாகியுள்ளார். 'பொய்' படத்திற்குப் பிறகு தமிழில் சரியான அழைப்புகள் வராததால், மலையாளத்துப் பக்கம் ஒதுங்கிவிட்ட விமலாவை இந்தப் படத்தின் கதையைச் சொல்லி மறுபடியும் தமிழுக்கு அழைத்துவந்துள்ளார் ஜெகன்ஜி. படம் வித்தியாசமானதாக இருக்கும். ஒரு காட்சி கூட அனாவசியமானதாக இருக்காது என்று கையில் அடித்துச் சொல்கிறார் ஜெகன்ஜி. கேட்க வித்தியாசமாக இருக்கிறது. பார்க்க விறுவிறுப்பாக இருக்குமா?



# சேரனின் படத்தில் நடிக்க விஜய் ஆசை

சேரன் படத்தில் நடிக்கவேண்டும் என்ற ஆசையை சேரன் முன்னிலையில் வெளிப்படுத்தியுள்ளார் விஜய். முன்னர் மாதிரி விஜய் இல்லை. விதம் விதமான இயக்குநர்களின் படங்களில் நடிப்பதற்கு அவருக்கு ஆசை பிறந்துள்ளது. சில நாட்களுக்கு முன்னர் நடந்த 'ஒன்பது ரூபாய் நோட்டு' ஓடியோ வெளியீட்டு விழாவின்போது தங்கர் பச்சான் படத்தில் நடிக்க ஆசை என்று தங்கரிடம் கோரிக்கை வைத்தவர். இப்போது 'பிரிவோம் சந்திப்போம்' ஓடியோ வெளியீட்டு விழாவில் சேரன் இயக்கத்தில் நடிக்க ஆசை என்று அவரிடமே கோரிக்கை வைத்துள்ளார். சேரன் - சினேகா நடித்திருக்கும் 'பிரிவோம் சந்திப்போம்' படத்தில் ஓடியோ வெளியீட்டு விழா சில நாட்களுக்கு முன்னர் சத்யம் திரையரங்க வளாகத்தில் நடந்தது. விஜய் ஓடியோவை வெளியிட பிரபு தேவா அதைப் பெற்றுக்கொண்டார். அப்போது விஜய் பேசுகையில், ''சேரன் படத்தில் நடிக்க வேண்டும் என்று நான் நீண்ட நாட்களாகவே ஆசையோடு உள்ளேன். நவீன தமிழ் சினிமாவின் திறமையான இயக்குநர்களில் அவரும் ஒருவர். சேரன் பெரிய நாயகனாகவும், போட்டியாளராகவும் மாறியுள்ளார். எனவே, எனக்கு வாய்ப்புத் தரமாட்டார் என்றே நினைக்கின்றேன்'' - என்றார் விஜய்.

# தவிக்கிறார் வடிவேலு

தம்பி ராமையா இயக்கத்தில் வடிவேலு மூன்று வேடங்கில் நடித்துள்ள படம் 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்' செவனத்சேனல் மாணிக்கம் நாராயணன் தாயாரித்துள்ள இப்படத்துக்கு சபேஷ் - முரளி இசையமைத்துள்ளார். படத்தின் பாடல்கள் வெளியீட்டுவிழா சென்னை சத்தியம் திரையரங்கில் நடந்து. படத்தின் பெயருக்கேற்ப திரையரங்கை இந்திரலோகமாக மாற்றியுள்ளார். ஆதாரவற்ற குழந்தைகள் முன்னிலை வகிக்க, சூர்யா பாடல்களை வெளியிட சிம்பு பெற்றுக்கொண்டார். பிரமிட் சாய்மிரா சாமிநாதன், தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் இராமநாராயணன், விஜய், பார்த்திபன், சினேகா உள்ளிட்ட பலர் இருந்தும் வடிவேலுவின் பேச்சுத்தான் அனைவரையும் கவர்ந்தது. அங்கு வடிவேலு பேசியதாவது:- ''இன்றைக்கு இந்திரலோகமே இங்க வந்தமாதிரி இருக்கு. கொஞ்சம் உயரத்துக்குப்போனாலே பீதிவரும். அந்தப்பீதி எனக்கு இப்போ வந்திருக்கு. இரும்பை காய்ச்சி பின்னால வச்சமாதிரி இருக்கு. நெஞ்சு நடுங்குது. தண்ணியே இல்லாத கிணத்துக்குள்ள இறக்கிவிட்டு ஏறிவாடான்னு சொல்லி இருக்காங்க. 'புலிகேசி' படத்திலாவது 2 வேடம்: அதுலையும் ஒரு வேடத்தில் சிரிக்கவே கூடாதென்னு இயக்குநர் சொல்லியிருந்தார். இந்திரலோகம் படத்தில் நீங்கள் தான் இந்திரன், எமன், அழகப்பன்னு சொன்ன தோட மட்டுமில்லாம, நாரத்ராகவும் நடிக்கவேண்டும் என்று இயக்குநர் சொன்னார். பிறகு அந்த வேடத்தில் நாசர் நடித்தார். 3 வேடம் ஆனாலும் அதுக்குள்ளே 10 வேஷம் இருக்கு. எம்.ஜி. சிவாஜி மன்னர்களாக நடித்த படங்க பார்த்தபோது இப்படி செய்யவேண்டுமென்று எனக்குப் பசி இருந்தது. அந்தப் பசிக்கு இந்தப்படம் உணவாகக் கிடைத்தது'' - என்றார் வடிவேலு.









## ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்து

ஆரணக் கலிமா தொழுகையுடன்
அடுத்த நோன்பு, ஸக்காத்தைப்
பூரணப் படுத்தி, ஹஜ்ஜுக்காய்ப்
புறப்படும் பக்த கோடிகளே
காரண நபிகள் பதம் தோய்ந்த
கஃபத் துல்லாஹ் திருத்தலத்தை
சேரனும் உங்கள் உடலாவி!
சிந்தை நிறைந்த வாழ்த்துக்கள்!

கரந்தே உறையும் உடலாவி!
காமக் குரோத அசடுகளும்
துறந்தே நீவிர் தூயவராய்த்
தொடர்வீர் ஹஜ்ஜுப் பயணத்தை!
பரந்தே திரளும் பக்தருடன்
படர்வீர்! இறைவன் சந்நிதியில்
இரந்தே இறைஞ்சி, ஈடேற்றம்
இனிதே பெறுவீர்! வாழ்த்துக்கள்!

எல்லா இனங்களும் ஒருகுடையாய்
ஏகன் முன்னே ஒரு படையாய்
சொல்லால், செயலால் துதிசெய்து
சோதரராகும் பாக்கியத்தை
அல்லாஹ் அளித்தான்! நீவிரெலாம்
அகத்தால் வெளுத்து; அழிவு நிலை
இல்லா திருக்க இறைவனிடம்
இரந்தே கேட்பீர்! வாழ்த்துக்கள்!

உதிரப் பெருக்கை, மாமிசத்தை
உயர்வாய் இறைவன் ஏற்கவில்லை!
எதிலும் தியாக மனப்பாங்கே
ஏற்பாம் என்னும் தத்துவத்தை
பொதிந்தே உணர்த்தும் 'குர்பானி'
பொருண்மை தெளிந்து; இப்றா ஹீம்
மாதவச் செல்வர் வழிபடர்ந்தே
மாட்சிமை பெறுவீர்; வாழ்த்துக்கள்!

■ ஏறாவூர் அனலக்தர்

## நினைவுகள்

காதல் என்னும் புள்ளியில்
வட்டமிட்டு கொள்ளும்
சில இதயங்கள்
மண வாழ்க்கை என்ற
புத்தகத்தை
புரட்டிப் பார்க்காமலே
புதைந்து போகின்றன
புதைந்த தென்னவோ
புரிந்துணர்வின்றிப்போன
மனங்கள்மட்டும்தான்
என்றும் நீங்காமல்
வாழ்கின்றன
நினைவுகள் மட்டும்..

■ கரவெட்டி மா.சிவா
யாழ்.பல்கலைக்கழகம்

## புலம் பெயர்ந்து வீசுகின்ற தமிழ் காற்று ! பூந்தமிழாள் உளம் மகிழ பணியாற்று !

■ கவிஞர் வ.நா.கிரிதரன்



இணையச் சோலையில் இதழ் விரித்திருக்கும் பலநூறு வலைப்பூக்களிலே பல்லாயிரம் வாசகர்களால்; இலக்கிய நேசகர்களால்; வாசிக்கப்பட்டு, நேசிக்கப்பட்டு வரும் இணைய சஞ்சிகைகளில் கனடாவில் இருந்து வெளி வரும் 'பதிவுகள்' (www.pativukal.com) மிக முக்கியமானதொன்றாகும். தன் வாசத்தாலும், தமிழ் நேசத்தாலும், பலரையும் வசீகரித்து இணைய வலையில் இல்லை! இல்லை! தன் இதய வலையில் வீழ்த்தி 'பதிவுகள்' மாதமொருமுறை மலர்ந்து தொண்ணூற்றாறு இதழ்களை மலர்த்தி தமிழ் மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது. இச்சஞ்சிகையில் இந்தியாவிலும், புலம் பெயர் நாடுகளிலும் தமிழீழத்திலும் இலங்குகின்ற நாடறிந்த படைப்பாளிகளான அறிஞர் அ.ந.கந்தசாமி, கவிஞர் பசுபதி, ஜெயமோகன், புதுவை இரத்தினதுரை, சோலைக்கிளி, வெங்கட் சாமிநாதன், யமுனா ராஜேந்திரன், கே.எஸ்.சிவகுமாரன், உடுவை தில்லை நடராசா, டாக்டர் எம்.கே.முருகானந்தன், சி.ஜெயபாரதன், ரஞ்சினி, வ.ஐ.ச.ஜெயபாலன், தேவகாந்தன், ஆசிரிஷ், ஆசி.கந்தராஜா, மட்டுநகர் மாணிக்கம், எம்.ஏ.சலாம், ஈழநிலா, மட்டுவில் ஞானக்குமரன், வேதா இலங்காதிலகம், நவஜோதி யோகரட்ணம், தவசஜிதரன், பத்தனையூர் வே.தினகரன் போன்றோரின் படைப்புக்கள் பரந்து கிடக்கின்றன.

அரசியல், கவிதை, சிறுகதை, கட்டுரை, நூல் விமர்சனம், நிகழ்வு, சினிமா, அறிவியல், நாவல், மருத்துவம், விவாதம், இலவச வரி விளம்பரம் என்பனவற்றை பதிவுகள் உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது. இந்தப் பதிவுகள் இணையத் தளத்தின் ஆசிரியராக இருப்பவர் கவிஞர் வ.ந.கிரிதரன். இவர் புலம்பெயர் எழுத்தாளர், விமர்சகர், பன்னூலாசிரியர், இணைய இதழாளர் என்று பன்முகங்களைக் கொண்டவர்.

தனது பத்தாவது வயதில் எழுத்துலகில் காலடி வைத்த வ.நா.கிரிதரன் ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது ரொரண்டோ, கனடாவில் வாழ்ந்து வருபவர். இலங்கையில் இருந்த காலத்தில் ஆரம்பத்தில் ஈழநாடு சிறுவர் மலர் மூலம் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்தவர். முதலாவது கவிதையான 'பொங்கலோ பொங்கல்' சுதந்திரனில் வெளிவந்துள்ளது. அதன் பின் இவரது சிறுவர் கால ஆக்கங்கள் பல வெற்றிமணி, சுதந்திரன், மற்றும் சிரித்திரனில் வெளிவந்திருக்கின்றன. இவர் ஏழாம் வகுப்பில் இருந்த பொழுது அகில இலங்கை தமிழ்த்தின விழா கட்டுரைப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாவதாக வந்துள்ளார். ஆரம்பகாலக் கவிதைகள் ஈழத்தின் தேசியப் பத்திரிகைகள் பலவற்றில் வெளிவந்திருக்கின்றன. இவரது முதலாவது சிறுகதையான 'சலனங்கள்' சிரித்திரன் நடத்திய அ.ந.க.சிறுகதைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கதைகளில் ஒன்றாக வெளிவந்தது. அப்பொழுது இவருக்கு வயது 17. இவரது 'நல்லூர் ராஜதானி நகர அமைப்பு', 'வரலாற்றுச் சின்னங்கள் பேணப்படுதல்', 'கோப்பாய்க் கோட்டை' பற்றிய கட்டுரைகள் முறையே ஈழநாடு மற்றும் வீரகேசரியில் வெளிவந்திருக்கின்றன.

மொரட்டுவைப் பல்கலைக்கழகக் கட்டடக்கலைப் பட்டதாரியான இவர் கனடாவில் இலத்திரனியற் பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளிலும் [இணையத்தள பராமரிப்பு, இணையத்தள அப்ளிகேசன்கள் எழுதுதல்] தகைமைகள் பெற்றுள்ளார். மொரட்டுவைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'நுட்பம்' மலரின் ஆசிரியராகவும் இவர் இருந்திருக்கின்றார்.

இதுவரையில் இவரது ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன. சிறுகதைகள் மற்றும் 'அமெரிக்கா' குறுநாவலை உள்ளடக்கிய தொகுதியான 'அமெரிக்கா' மற்றும் 'நல்லூர் ராஜ தானி நகர அமைப்பு' ஆய்வு நூலும் தமிழகத்தில் ஸ்நேகா பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது. கனடாவில் மங்கை பதிப்பக வெளியீடுகளாக வெளிவந்த 'மண்ணின் குரல்' [கனடாவில் வெளிவந்த முதலாவது தமிழ் நாவல்], 'எழுக அதி மானுடா' [கவிதைத் தொகுதி] ஆகியன வெளிவந்துள்ளன. 'வன்னி மண்', 'அருச்சுனனின் தேடலும் அகலிகையின் காதலும்', 'கணங்களும் குணங்களும்','மண்ணின் குரல்' ஆகியவற்றின் தொகுதி தமிழகத்தில் குமரன் பப்ளிஷர்ஸ் வெளியீடாக 'மண்ணின் குரல்' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளன. இவரது சிறுகதையான 'ஒரு மா[நா]ட்டுப் பிரச்சினை' தமிழகத்திலிருந்து வெளிவந்த 'பனியும் பனையும்' தொகுதியில் இடம் பெற்றுள்ளது. 'சுவடுகள்' இதழில் வெளிவந்த 'பொந்துப் பறவைகள்' சிங்கப்பூர் கல்வி அமைச்சினால் அவர்களது தமிழ்ப் பாடத்திட்டமொன்றில் சேர்க்கப்பட்டுள்ளது. 'சுலேகா.கொம்' இல் இவரது இரு சிறுகதைகள் [ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டவை] இடம் பெற்றுள்ளன. ரொறாண்டோவில் ஒரு சில இதழ்களே வெளிவந்த 'இரவி' மற்றும் 'கல்வி' ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியரான இவர் ரொரண்டோவில் ஆரம்ப காலத்தில் 'குரல்' என்றொரு கையெழுத்துப் பிரதியினையும் வெளியிட்டவர். அத்துடன் சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் 'நமது பூமி' என்றொரு செய்திக் கடிதத்தினையும் [News Letter] கணினி உலகம் என்றொரு செய்திக் கடிதத்தினையும் வெளியிட்டவர். இவையும் ஒரு சில இதழ்களே வெளிவந்தன.

கனடாவுக்குப் புலம் பெயர்ந்த பின் இவரது படைப்புக்கள் 'தாயகம்', 'தேடல்', 'கணையாழி', 'துளிர்', 'சுவடுகள்', 'உயிர் நிழல்', 'ஆனந்தவிகடன்', 'சுபமங்களா' மற்றும் இணைய இதழ்களான 'திண்ணை', 'அம்பலம்', 'ஆறாந்திணை', ஆகியவற்றில் வெளிவந்திருக்கின்றன. 'ஐன்ஸ்டைனின் சார்பியற் தத்துவம், பிரபஞ்ச ஆய்வு, திராவிடக் கட்டடக்கலை பற்றிய இவரது ஆய்வுக் கட்டுரைகள் 'வீரகேசரி', 'கணையாழி', 'திண்ணை' போன்றவற்றில் வெளிவந்திருக்கின்றன. 'மரபும் கவிதையும்', 'வளர்முக நாடுகளும் குடிமனைப் பிரச்சினைகளும்' ஆகிய தொடர்கள் மற்றும் 'பாரதியின் படைப்புகள்' பற்றிய கட்டுரைகளும் 'தாயகம்' இதழில் வெளிவந்துள்ளன. தமிழ் இலக்கியம் சம்பந்தமான பல்வேறு விமர்சன கட்டுரைகளும் பல்வேறு இதழ்களில் வெளிவந்திருக்கின்றன.

2000ம் ஆண்டிலிருந்து 'பதிவுகள்' இணையத் தளத்தை வடிவமைத்து அதன் ஆசிரியராக இருந்து வருகின்றார். திண்ணை, பதிவுகள் போன்றவற்றில் நடைபெறும் விவாதங்கள் பலவற்றில் ஜீவன் கந்தையா, திண்ணை தூங்கி, டிசெதமிழன், ஜெய மோகன் உட்படப் பலருடன் தீவிரமாகப் பங்கு பற்றி வருபவர். புலம்பெயர்ந்து போனாலும் பூந்தமிழாள் மணம் பரப்பும் இவரின் மின்னஞ்சல் முகவரி: ngiri2704@rogers.com

## கண்டி 'அசோகா'

■ கவிஞர் வி.எஸ்.காந்தி

இந்தியா இலங்கை யன்று
எய்தவே இல்லை மீட்சி!
அந்நியர் ஆட்சி; எங்கும்
ஆதிக்கம் ஆங்கி லேயர்!
வந்தது இலங்கை நாடி
இந்தியக் கோஷ்டி; ஹொக்கிப்
பந்தாட்டப் போட்டி; பங்கு!
பரவச ஆட்டம்; கூட்டம்!

இளைஞர்நம் பி.டி.இராஜன்
இந்திய அணியில்; கையில்
வளை ஹொக்கிக் கோலே; அன்னார்
வருகையின் துவக்கம்; முடிவு
விளையாட்டுப் போட்டி; தேசந்
திரும்பினார் ; மீண்டார்; ஈண்டு
திளைத்திட்டார் கல்வித் தொண்டில்
திருகூட்டும் கண்டி மண்ணில்!

மலையகம் எங்கு மெங்கள்
மன்பதை! கல்வி, கேள்வி
நிலையோங்க வேண்டு மென்று
நெஞ்சினில் விழைவு; மேதை
கலைநகர் கண்டி மண்ணில்
கட்டியே எழுப்ப லானார்
தலைநிமிர் 'அசோகா' தேசத்
தலைவர்கள் புகழ்ச்சி; வாழ்த்து!

ஆங்கிலப் புலமை பொங்கும்
அருந்தமிழ் புலமை; எங்கும்
ஓங்கும்நல் நாமம் ஈர்க்கும்
ஒப்பற்ற மிடுக்குத் தோற்றம்!
ஈங்கவர் வருவார்! பார்ப்பார்
இலக்கியம் புகட்டி நிற்பார்!
தூங்குவோர் ;விழிப்பார்! இராஜன்
தூயநல் தொண்டன்; ஆசான்



## தொழுவத்து நாயகன்

பசு கதறும் தொழுவத்தில்
பாலகனாய்
வந்துதித்தீர்!
பார் பரவும் பாவத்தை கருவறுக்க
நடைபயின்றீர்!
பாசமிகு உள்ளங்களில்
இரட்சகராய்
வந்தமர்ந்தீர்!
நொறுங்குண்ட
இதயங்களை தேற்றுகின்ற
தோழனானீர்!
இருள் படிந்த
வாழ்க்கைதனில்
ஒளியாக உதயமானீர்!
மற்றவர்க்காய்
சிரிப்பதையே விரும்பாத
இவ்வுலகில்...
உற்றவர்க்காய்
ஊன் உருக
சிலுவை மரம் தாங்கினீரே!
உம் சிறகொடித்த
கயவரையும்
மன்னித்த மாட்சிமரே!
உம் அடியொற்றி
வாழ்ந்திடுவேன் என்
உயிருள்ள காலமெல்லாம்.

■ மன்னார்.தினேஷ்குமார்

## எங்ஙனம்?



அளவுக்கு மீறி
நேசம் தெளித்து
பாசம் காட்டிடும் என்
ரோசக்கார வண்டே!
யாரும் எண்ணிவிடக்
கூடாது
நீ ஒரு மோசக்காரன்
என்றே!

■ தியத்தலாவ எச்.எப் ரிஸ்னா




என் இதயக்கதவு
திறந்தே இருக்கின்றது.
ஒரு தடவையாவது
உட்கார்ந்துவிட்டுப் போ.
அல்லல் படும்
உன் மனசு
ஆறுதல் அடையட்டும்.

■ வே. முல்லைத்தீபன்
ஓட்டுசுட்டான்

## அகதியின் பாடல்

யுத்தம் செய்து கண்டதென்ன
தாண்டவக் கோனே! - எங்கள்
யுகங்கள்தானே இருண்டு போச்சு
தாண்டவக் கோனே!
நித்தம் சிந்தும் ரத்தத்தினால்
தாண்டவக் கோனே! - எங்கள்
நிம்மதிதான் தொலைந்து போச்சு
தாண்டவக் கோனே!

வீடுவாசல் இழந்து விட்டோம்
தாண்டவக் கோனே! - நாளும்
வீதியிலே உண்ணு கிறோம்
தாண்டவக் கோனே!
நாடுபோகும் போக்கி னைப்பார்
தாண்டவக் கோனே! - எலும்புக்
கூடுதானே மிஞ்சி நிற்கும்
தாண்டவக் கோனே!

ஆடுமாடாய் நடத்து கிறார்
தாண்டவக் கோனே! - அதனால்
ஆளவழி தேடு கிறோம்
தாண்டவக் கோனே! - பேய்
ஆடுகின்ற ஆட்டத் தைப்பார்
தாண்டவக் கோனே! - அதை
அடக்கிவிட ஆள னுப்பு
தாண்டவக் கோனே!

தலைநகரம் தேடிவந்தான்
தாண்டவக் கோனே! - அவன்
'தலை'நகரில்உருண்டனவாம்
தாண்டவக் கோனே! - கொழும்பு
கொலை நகரம் ஆனதுவே
தாண்டவக் கோனே! - அதை
கொடும் நரக மாக்கியதார்
தாண்டவக் கோனே!

தமிழ் மொழியை பேசிவிடின்
தாண்டவக் கோனே! - இங்கே
தறுதலைகள் கைது செய்வர்
தாண்டவக் கோனே!
தலைநகரில் வாழ்ந்தி டுவோர்
தாண்டவக் கோனே!-விரைவில்
தமிழ் மொழியை மறந்திடுவார்
தாண்டவக் கோனே!

வயலுக் கின்று போகப்பயம்
தாண்டவக் கோனே! - எம்மை
வளைத்து நின்று அறுக்கிறார்கள்
தாண்டவக் கோனே!
புயலிடியால் படும் வதையால்
தாண்டவக் கோனே!-தமிழன்
'புலி'யெனவே மாறுகிறான்
தாண்டவக் கோனே!

'பஸ்'ஸிலையும் ஏறப்பயம்
தாண்டவக் கோனே! - எங்கும்
'பார்சல்' குண்டு வெடிக்கிறதாம்
தாண்டவக் கோனே!
கடலுக்குள்ள மீன்பிடித்தால்
தாண்டவக் கோனே! - எமக்கு
கண்டபடி சுடுகி றார்கள்
தாண்டவக் கோனே!

காட்டுக்குள்ளே வாடும்போது
தாண்டவக் கோனே! - எம்மை
கணக்கிலுமே எடுத்திடாதோர்
தாண்டவக் கோனே! - இன்று
ஓட்டுக் கேட்டு ஓடிவாரார்
தாண்டவக் கோனே! - அவரின்
'சேட்டுக் கொலரை'பிடித்து அறை
தாண்டவக் கோனே!

நாட்டில் வாழும் வாழ்வை விட
தாண்டவக் கோனே! - நாம்
நடுக்கடலில் வீழ்ந்திடலாம்
தாண்டவக் கோனே!
பாட்டில் இதைப் பாடிவிடின்
தாண்டவக் கோனே! - இங்கு
பரிகசிக்க ஆளிருக்கார்
தாண்டவக் கோனே!

■ பொத்துவில்· அஸ்மின் உதுமாலெவ்வை

05. பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான படத்தைத் தெரிவுசெய்து கோடிடுக.

1) சூழலுக்கேற்ப தனது நிறத்தை மாற்றிக்கொள்ளும் பிராணி,

A  B  C 

2) மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் பயன்படும் சாதனம் ஒன்று,

A  B  C 

3) பெற்றோலினால் இயங்கும் வாகனம்,

A  B  C 

4) பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட சாதங்களிலொன்று,

A  B  C 

06. கீழே தரப்பட்டுள்ள சொற்களில் எழுத்துப் பிழையற்ற சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1) கவில்ந்தது/கவிழ்ந்தது/கவிள்ந்தது/கவீள்த்தது

..........................................................

2) மது ஒளிப்பு/மது ஒலிப்பு/மது ஒழிப்பு/மது ஒழிம்ப்பு

..........................................................

3) நன்மை/நந்மை/நண்மை/நன்ணம

..........................................................


4) கள்வியறிவு/கழ்வியறிவு/கல்வியறிவு/கள்வினயறிவு

..........................................................

5) உணர்ந்தான்/உனர்ந்தான்/ உணர்தான்/உணர்ந்நான்

..........................................................

07. தரப்பட்டுள்ள உருவை நன்கு அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

1) 


செவ்வக உருவினுள் அதிகமாகக் காணப்படும் நிற வட்டங்கள் எவை?

.......................

2) அருகில் தரப்பட்டுள்ள அளவிடையின்படி ரவியை விட ராமு எவ்வளவு உயரம் கூடியவன்?

....................... ராமு ரவி

3) அருகே தரப்பட்டுள்ள டிஜிட்டல் கடிகாரம் காட்டும் நேரத்தை சாதாரண நேரத்தில் தருக. .......................



08. சரியான விடையின் கீழக் கோடிடுக.

1) ஏழு தீக்குச்சிகளைக் கொண்டு உருவாக்கக் கூடிய உரோமன் இலக்கம் யாது?

1) XXV 2) LVIII 3) XXI 4) XIV

2) மாதம் ஒன்றின் முதலாம் திகதி புதன்கிழமை எனின், அம் மாதத்தின் 16ம் திகதி என்ன கிழமையாகும்?

1) செவ்வாய் 2) புதன் 3) வியாழன் 4) சனி

09. வேலை ஒன்றைச் செய்வதற்கு 20 மனிதர்களுக்கு 30 நாட்கள் எடுக்கும் எனின், அவ்வேலையைச் செய்வதற்கு பத்து மனிதர்களுக்கு எடுக்கும் நாட்கள் எத்தனை? .......................

10. பஸ் ஒன்று 1 மணித்தியாலத்தில் 15km தூரம் பயணம் செய்யும் எனின், 60km தூரம் பயணம் செய்ய எடுக்கும் நேரம்? .......................

11) தரப்பட்டுள்ள அட்டவணையில் கல்விச்சுற்றுலா ஒன்றில் கலந்து கொண்ட தரம் 05 மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் காட்டப்பட்டுள்ளது .

| வகுப்பு | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| 5 | 23 | 19 |
| 5 | 20 | 20 |
| 5 | 21 | 20 |
| 5 | 22 | 19 |

1) சுற்றுலா சென்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

.......................

2) சுற்றுலா சென்ற மாணவர்களில் ஆண்களின் எண்ணிக்கைக்கும் பெண்களின் எண்ணிக்கைக்கும் அடையிலான வித்தியாசம் யாது?

.......................

3) ஒரு பேருந்தில் 60 மாணவர்கள் செல்ல முடியும் எனின், சுற்றுலா செல்லத் தேவையான பேருந்துகளின் எண்ணிக்கை யாது?

.......................

12. கீழே தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து அவற்றின் பெயர்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தருக.

1) 

த : .......................

ஆ: .......................

2) 

த : .......................

ஆ: .......................

3) 

த : .......................

ஆ: .......................

4) 

த : .......................

ஆ: .......................

13. பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1) மின்கலம் - .......................

2) கலை - .......................

14. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) Market - .......................

2) Language - .......................

15. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1) சமகிய - .......................

2) ஆரக்ஸாவ - .......................

16. தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானித்து திருத்தமான எழுவாய், பயனிலைகளுடன் கருத்துள்ள பொருத்தமான வசனப்பிழைகள் அற்ற ஐந்து வாக்கியங்கள் எழுதுக.



1) ..........................................................

2) ..........................................................

3) ..........................................................

4) ..........................................................

5) ..........................................................

முற்றும்




தரம்-04 மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்காக நடாத்தப்படும்

பாடமுறைப் பரீட்சை 15 - 2007

ஆசிரியம்- திரு.சண்.சுதர்சன்.

மதீனா தேசிய பாடசாலை, கண்டி தொ.பே.இல:071-3456020

# சாதனா அனாதை இல்லை!





பூத்துக் குலுங்கும் நந்தவன வாசனையும், நிறைமாதக் கர்ப்பிணியாய் குலை தள்ளி நிற்கும் வாழைகளும், வளமான மண்ணும் கொண்ட அழகிய கிராமம் நீர்வேலிக்கிராமம். சில்லென்ற காற்றில் மேனி சில்லிட சுகமாய் வாழ்ந்த மத்தியதரக் குடும்பம் சாதனாவினுடையது. உருண்ட கண்களும் வில்போன்ற புருவமும் சுருண்டகேசமும் கொண்ட குட்டிச் சுட்டிப்பெண் அவள்.

''செந்தில்.... செந்தில்....அப்பம் சாப்பிடப் போறம் ஓடி வா கெதியா ஓடி வா முடியப்போகுது.''

''வாறன் எனக்கும் வை. சாதனா கொஞ்சமெண்டாலும் வைச்சிரு. சாறம் அவிழுது.ஷோட்ஸ் போட்டுக் கொண்டு ஓடி வாறான்''.

அப்பாவின் சாறத்தை கட்டிக்கொண்டு பெரியவர் ஸ்ரைலில் நடக்க எண்ணிய செந்திலின் இடுப்பில் இருந்து சாறம் நழுவிக்கொண்டிருந்தது. சாதனா கூப்பிட சாறம் கட்டும் நினைப்பை விட்டு ஷோர்ட்சை போட்டுக் கொண்டு ஓடி வந்தான். இவளிலும் ஒரு வயதிற்கு மூத்தவனாகிய அயல் வீட்டு செந்தில் அன்னியோன்யமான குடும்பம். மாமா, மாமி என்று அழைத்து உறவுகளாக்கிக் கொண்டவர்கள்.

''பிள்ளை......ஏன் தொண்டை கிழியக் கத்துறாய். அவனுக்குரிய பங்கை அம்மா எடுத்து வைச்சிருக்கிறன் தானே! அவன் ஆறுதலாக வரட்டன்''என்றாள், சாதனாவின் அம்மா நாகேஸ்வரி.

''என்னம்மா நீங்களும் அவனும் வந்தால் எல்லோரும் சேர்ந்து சாப்பிடலாமெல்லே. அது தான் கெதியா வரச் சொன்னனான்'' என்றாள்.

எள்ளென்றாலும் எட்டாகப் பங்கிடும் குணம். பிறர் நோக பேசியறியாதவள். ''இந்தா சாப்பிடு, சாப்பிட்டு முடிய கோயில் கட்டி விளையாடுவமே'' என்றாள் சாதனா.

''ம்கூம்...... கள்ளன் பொலிஸ் விளையாடுவம்'' என்றான் செந்தில்.

''ஓம் அதுதான் சுப்பர் விளையாட்டு நானும் வாறன்'' என்றான் சாகித்யன்.

''அப்படியெண்டா நான் தான் பொலிஸ்''

''அது சரிவராது. நீ தான் கள்ளன்''

''அப்ப போ நான் விளையாட வரேல்ல''

''சரி சரி. நீ தான் பொலிஸ். நாங்க இரண்டு பேரும் கள்ளர்'' என்று சமாதானப் படுத்தினான் செந்தில். சரியான பிடிவாதக்காரி, தான் நினைத்ததை சாதிக்கும் குணம். படிப்பிலும் வலு கெட்டி. விளையாட்டில்தான் கொஞ்சம் குறைவு. நடிப்பிலும் அபார திறமை. கண்ணகியாக நடித்தால் பெரும்பான்மையானவர்களுக்கு சாதனா என்பதை விட கண்ணகி என்றாலே தெரியும்!

சாதனா பருவம் எய்தியது முதல் ஏனோ செந்திலோடு கதைப்பதைக் குறைத்துக் கொண்டாள்.

''வரமாட்டியே சாதனா விளையாட.....''

''சீ...போடா.....''என்று வெட்கப்பட்டு புன்னகைப்பாள்.

''முந்தியெல்லாம் என்னோட விளையாட வாறவள் தானே! இப்ப ஏன் மாட்டன் என்கிறாள்''. இவனுக்கு கோபம் கோபமாய் வரும். கெஞ்ச மிஞ்சுறாள். இனி அவளாகக் கூப்பிட்டாலும் விளையாடப் போகக்கூடாது என்று எண்ணிக் கொள்வான். மீண்டும் அவளைக் காணும்போது அந்த எண்ணம் எல்லாம் மறைந்துவிடும். அன்பாய் பார்ப்பான், கதைக்கத் துடிப்பான். ம்..... எத்தனை இனிய நினைவுகள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டவன், மீண்டும் ஒரு தடவை சாதனாவின் வீட்டைத் திரும்பிப் பார்த்தான். ஏமாந்து போனான். எங்க போயிருப்பினம். யாரையாவது கேட்டுப்பாப்பம் என அயலவர்களை விசாரித்தபோது அதிர்ந்து போனான். எங்கே தேடியென்றாலும் அவளைப் பார்த்து விடவேண்டுமென்று அலைந்தவனை, ''ஏனப்பு அவளைத் தேடுகிறாய் அழிஞ்சு போன குடும்பத்தைப் பற்றி எங்களுக்கென்ன அக்கறை'' அலுத்துக்கொண்ட தனது தாயைப் பரிதாபமாகப் பார்த்தான். ஒரு காலத்தில் சொந்தங்களை விட மேலாக இருந்த குடும்பம் இப்ப குலைஞ்சு போனதால் தேவையில்லாமல் போய்விட்டதோ! அம்மாகூட சராசரி மனுசியாகத் தான் போய்விட்டார்.

பணத்தைக் கண்டதும் அம்மாவுக்கு குணம் மாறிப்போய் விட்டதோ, என்று கலங்கியவன் முயற்சியைக் கைவிடவே இல்லை. முயற்சி திருவினையானது. ஒரு காலத்தில் இரவுச் சந்தை மிகவும்

**-ஆனந்த வள்ளி-**

பிரபல்யமாக இருந்தது. தமிழீழத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய இரணைமடுவையும், உருத்திரபுரம் தனீன் தோன்றீஸ்வரத்தையும், நகரின் மத்தியில் அருள்மிகு கந்தசுவாமியையும், பிள்ளையாரையும் தன்னகத்தே கொண்டிருந்த வன்னியின் எழில்மிகு மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சியிலுள்ள பிரபலமான பாடசாலை ஒன்றில் இசையாசிரியராக- கடமை ஆற்றிக்கொண்டிருந்தாள் சாதனா. அங்கு சென்றவன் அலுவலகத்துக்கு சென்று முதல்வரிடம் விடயத்தைக்கூற அவரும் அவளை வரவழைத்தபோது ''செந்தில்..... என்ன ஆச்சரியம் நீங்கள் எப்பிடி.....'' தேவதை போல மெல்லிடையாள் தன் முன் வந்து நிற்க மெய்மறந்து போனான்.

முதல்வரின் செருமலில் சுயநினைவிற்கு வந்தவனாய் ''ஓம்....ஓம்... சாதனா....நீ...உன்னை என்னால மட்டுக்கட்டேலாமல் போயிற்று...'' என்று தட்டுத்தடுமாறி வார்த்தைகளைக் கக்கிக்கொண்டிருந்தான்.

''செந்தில் எங்க தங்கியிருக்கிறியள். பின்னேரம் எங்கட வீட்ட வாங்கோ கதைப்பம். கடமை நேரத்தில் நாங்கள் கதைக்கிறது சரியில்லத்தானே'' என்றபடி விலாசத்தை ஒரு தாளில் குறித்து நீட்டினாள். அதிர்ச்சியுற்றவனாய் ''உனக்கு திருமணம் ஆயிற்றோ''

''ஓ....நிறையப்பிள்ளையள் கூட இருக்கினம். பின்னேரம் வாங்கோவன். எல்லோரையும் அறிமுகப்படுத்திறன்'' சிரித்தபடி அலுவலகத்தை விட்டு வெளியேறினாள். குழம்பிப் போனான் செந்தில். சந்தோசமாகத் தான் இருக்கிறாள். பரவாயில்லை; நல்லதொரு குடும்பத்தின் மருமகளாக அவள் சந்தோசமாக இருந்தாலே போதும் என்று தன் மனதை தேற்றிக்கொண்டவனாய் பாடசாலை வளாகத்தை விட்டு வெளியேறினான். சூரியன் தன் கதிர்களை மடக்கிக்கொண்டு மெல்ல மெல்ல தாழ்ந்து போய்க்கொண்டிருந்த அமைதியான அந்த மாலைப்பொழுதில் சாதனா கொடுத்த விலாசத்துக்கு போய்ச் சேர்ந்த பொழுது, அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி.

''வாங்கோ நீங்கள் தான் செந்தில் மாமா என்ன? வாங்கோ'' என்றாள் ஐந்து வயது மதிக்கத்தக்க சிறுமி. மாமரத்தின் கீழ் அமைக்கப்பட்டிருந்த வைக்கோலிலான வட்டகொட்டிலுக்குள் இருக்கைகளைக் காட்டிவிட்டு சிட்டாய்ப் பறந்தாள்.

சாதனா ஓர் பெண்ணுடன் வந்து ''எங்கட அம்மா, சித்தி எல்லாமே இவாதான். உங்களைப்பற்றி சித்திக்கு சொல்லிற்றன்.''

''வணக்கம் தம்பி அன்பும் உறவும் அழிந்து கொண்டிருக்கிற இந்த கலப்பட உலகில் நீங்கள் சாதனாவை தேடி வந்திருக்கிறதை நினைக்க சந்தோசமாக இருக்கு. இருந்து கதையுங்கோ நான் ஒரு அவசர அலுவலாக வெளியே போகவேண்டியிருக்கு பிறகு சந்திப்பம்.'' என்றபடி சித்தி எனச் சாதனாவால் சொல்லப்பட்ட பெண் வெளியேறிச் செல்ல, அழகான பன் வேலைப்பாடுடைய தட்டில் சுவையான பாலையும் தேநீரையும் பருத்தித்துறை வடையையும் கொண்டு வந்து பரிமாறினாள் இன்னொரு சிறுமி.

''செந்தில் அங்க பாருங்கோ அதில விளையாடிக்கொண்டிருக்கிற சின்னன்களெல்லாம் என்ர பிள்ளைகள் தான். இஞ்சால பாருங்கோ படிச்சுக்கொண்டிருக்கினம் இவர்கள் என்ர தங்கச்சியாக்கள். நாங்கள் பல அங்கத்தவர்களைக்கொண்ட பெரிய குடும்பம். இந்த வாழ்க்கையில நான் நிறையவே சந்தோசமாய் இருக்கிறன். நான் சந்தோசமாக வாழ்வதைப்போல அப்பா, அம்மாவும் வாழவில்லையே! என்ர ஊரையும், உறவையும் பிரிச்சவங்களை எப்ப அழிக்கிறது என்பதும்தான் என்ர கவலை. மற்றும்படி நான் நல்ல சந்தோசமாக இருக்கிறன் செந்தில்''

''சாதனா நீ அநாதையா என்ன கஷ்டங்களை அனுபவிக்கிறியோ எண்டு நினைச்சுத்தான் உன்னைத் தேடினனான். ஆனா.... நீ நல்ல சந்தோசமா இருக்கிறதைப் பார்க்க எனக்கும் சந்தோசமா இருக்கு. உங்கட குடும்பத்தின்ர ஒரு அங்கத்தவராக மாற வேணும் போல இருக்கு. அதைப்பற்றி நான் பிறகு சித்தியோட வந்து கதைக்கிறன். நீ என்ன நினைக்கிறாய்''

''என்ன செந்தில் எங்கட குடும்பத்தை விட்டு என்னால வர முடியுமே''

''நீ ஒரு இடமும் வரத்தேவையில்லை. நான் உங்கட இடத்திற்கு வாறன்''

''அப்ப சுனடா வாழ்க்கை''

''கனவுகளோட கனடாவில வாழ்றதை விட நிஜங்களோட இங்க வாழ்வதே சுகம். சரி சாதனா நான் போய்ற்று வரட்டே.''

''ஓம்.... கேட்க மறந்திட்டன் எங்க தங்கியிருக்கிறீர்கள்? மாமா, மாமியெல்லாம் சுகமாய் இருக்கினமே''

''ஓம் சுகமாக இருக்கினம்'' யாழ்ப்பாணத்தில்தான் இருக்கினம்.திருநகரில என்ர நண்பன் பாலா இருக்கிறான். நான் அங்கதான் நிக்கிறன். போயிற்று வாறன்''

''ஓம்....ஓம்.... போயிற்று வாங்கோ...ம்...''

செந்தில் மாறவேயில்லை. பணம் வந்ததும் குணம் மாறவில்லை என்று எண்ணியபடி சாதனா அடுத்த நாளுக்குரிய பாடசாலை ஆயத்தங்களில் மூழ்கிப் போனாள். மறுநாள் பொழுதும் அவன் நினைவுகளை தாங்கியபடியே மலர்ந்தது. பாடசாலையிலும் அடிக்கடி கண்களுக்குள் வந்து வந்து போனான். பாடசாலையால் வந்து சேலையை மாற்றிக்கொண்டிருந்தவளை ''அக்கா சித்தி உங்களை வரட்டாம்'' என்றாள் ஆரணி.

''ம்...என்ன திடீரென்று சித்தி வரச்சொல்லுறா. என்ன பிழை விட்டனான்'' என்று குழம்பிய படியே சித்தியிடம் போனாள்.

''வாழ்த்துக்கள் சாதனா. நல்ல விசயமாக கதைக்க கூப்பிட்டனான். காலையிலும் செந்தில் வந்தவர். உன்னை திருமணம் செய்யவேணும் எண்டு உறுதியாக நிற்கிறார். நாங்களும்

**சுடர் ஒளி**

**சிறுகதை**

நல்லா யோசிச்சுப் பார்த்ததில திருமணம் செய்து வைக்கிறதுக்குரிய சரியான காலம் இது தான். எங்களுக்கு ஆட்சேபனையில்லை. உன்னை நாங்கள் வற்புறுத்தவில்லை. உனக்கு விருப்பமென்டால் எங்களுக்கு விருப்பம். என்ன நினைக்கிறாய்?''

''சித்தி இதில நான் சொல்ல என்ன இருக்கு. எனக்கு எல்லாம் நீங்கள் தானே! உங்களுக்கு சம்மதமென்றால் சரி''

''அப்படியெண்டா திகதியை தீர்மானித்த பின் தம்பிக்கும் அறிவிப்போம் என்ன''

''அறிவிக்கலாம் தான் சித்தி. ஆனால் அவன் வரக்கூடிய சூழநிலை இருக்காது. களத்திலே ஒரு தளபதி. மற்ற போராளி களை விட்டிட்டு அவன் வரமாட்டான்.''

''நீங்களெல்லாம் இருக்கிறீங்கள் தானே'' என்றவளின் கண்களில் ஊற்றொன்று உற்பத்தியாகியது. தாயின் கற்பைக் கயவர்கள் கணவன் முன்னாலேயே தம் காமப்பசிக்கு இரையாக்க, துடித்தெழுந்து எதிர்த்தவர். சாதனாவின் தந்தை. வெறியர்களின்

(27ஆம் பக்கம் பார்க்க)

# 2008 இன் பொதுப்பலன்கள்

சத்தியம் அது நிச்சயம் வெல்லும். உண்மையுடன் நடந்தவர்களுக்கும், நடக்கப் போகிறவர்களுக்கும் நல்லதை மட்டும் செய்திடும் ஆண்டு இது. பொருளாதாரத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்தவர்களுக்கும், கடினமான முயற்சி எடுத்தும் கனவில் மட்டுமே பொருள் வரவுகளைப் பார்த்தவர்களுக்கும் அருமையான வாய்ப்பினை தந்து தரமான உயர்வுகளுக்கு வழி கிடைக்கும். வீட்டில் பேசி நின்றுபோன மகனின் திருமண தடையை அகற்றி நல்வரன்கள் அமைந்திடும். நீண்ட நாள் குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு அந்த அருமையான வாய்ப்பினை தரும். உடலில் உஷ்ண நிலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால் தகுந்த உணவுக் கட்டுப்பாடு மிக அவசியம். தொழில் புரிவோர் தொழிலை அபிவிருத்தி செய்திட அரசாங்க உதவிகள் கிடைத்து அளப்பரிய வாய்ப்புக்கள் வரப்போகின்றன. வியாபார நுணுக்கங்கள் தெரிந்து தெளிவான செயல்பாடுகளால் விற்பனை பெருக்கம் ஏற்படவுள்ளது. பணியிலிருப்போர் நலமான நிகழ்வுகள் நிறையப் பெறுவதுடன் விரும்பிய இடம் மாறுதல், பதவி உயர்வு, வீட்டு,வாகன கடன் பெற்று உயர்ந்த நிலையை அடைவர். அலைந்து, திரிந்து இருக்கும் பதவிகளை பறி கொடுத்து, தலைமையின் சீற்றத்துக்கு ஆளான அரசியல்வாதிகளின் நிலை வெகுவான முன்னேற்றம் பெற உள்ளது. விளை பொருட்களை பாதி விலையில் விற்று, நிலங்களில் நீதி மன்ற விவகாரங்கள் ஏற்பட்டு நொந்துபோன விவசாயிகள் வீண் செலவுகள் இல்லாமல் கூடுதல் வருமானம் மட்டும் பெறவுள்ளார்கள். ஆண்களின் அடக்கு முறைக்கு ஆளான பெண்கள் நிலை உயரும். கணவரால் பெரிய சமூக அந்தஸ்து கிடைக்கும்.



இந்தியாவின் புகழ்பெற்ற எண் சோதிட நிபுணர் டாக்டர் JNS. செல்வன் Phd.Numerlogist அவர்கள் கணித்துள்ள 2008ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்.

மாணவர்கள் கல்வி வளர்ச்சியை அதிகமாகப் பெற்று பெற்றோர், ஆசிரியர்களின் பிரத்தியேக அன்பைப் பெறுவர். அரசியலில் தலைமை பொறுப்பில் உள்ளவர்கள் அடுத்து உள்ளவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் நிலை ஏற்படலாம். பொதுமக்கள் புதிய வகை கண் நோய்களால் அவதியுறலாம். அரசியல் வாதிகளை விட அரச அதிகாரிகளின் நிலை பன் மடங்கு உயர்த்தப் படலாம். இந்தியாவின் பெயர் சர்வ தேச மெங்கும் மிகப் பெரிய அளவில் உயர்ந்து நிற்கும். பெண் தலைமைகள் சற்று அடக்கமாக செல்வதுடன், நான்கு பேரை (ஆண் அறிஞர்கள்) கேட்டு செயற்பட்டால் வெற்றிதான். ஏற்றுமதி, இறக்குமதி, பங்குச்சந்தை, இரும்பு, வாகனம், நெருப்பு சம்பந்தமானவை, கண்ணாடி, மருந்துப் பொருட்கள், நிலம், தொழிற்சாலைகள், பேப்பர்மில், டிராவல்ஸ், மரம், அரசாங்க நிறுவனம் போன்றவற்றின் பங்குகள் அதிக உயர்வினை பெறும். சட்டத்துக்கு புறம்பானவர்கள் ஒடுக்கப்படுவர். பிரபலமான சிலர் நேர்மையற்ற செயலில் ஈடுபட்டது வெளிக் காட்டப்பட்டு மக்கள் செல்வாக்கை இழப்பர். வேலை வாய்ப்புக்கள் அதிகமாவதுடன் அயல் நாட்டிலிருந்து வேலைக்கு ஆட்களை இந்தியா வரவழைக்கும். தொழில் அபிவிருத்தியில் கோடிகளை குவித்திடும் நிலையும், தேடிப்போன அயல்தேச வேலைகளை உதறிவிட்டு நம் தேசத்தில் கூடுதலான வருவாய் பெறும் நிலையும் ஏற்படும். கலைத் துறையினருக்கு அரசாங்க உதவிகள் அதிகம் கிடைத்திடும். நீதி, நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாட்டுடன் செயற்பட்டவர்களின் நிலையை யாரும் எதிர்பார்த்திராத அளவுக்கு உயர்த்திவிடும் இவ்வாண்டு மொத்தத்தில் நன்மை செய்தால் நலன்கள் ஓடோடிவரும்.

## எண்கள் எதையும் செய்யும்!

## 2008ஜனவரி 2008 முதல் டிசம்பர் முடிய உள்ள எண்கணித ஆண்டு பலன்

### மகத்தான மாமனிதர் 1ஆம் எண்

அரும் பெரும் காரியங்களை அனாயாசமாக செய்திடுவதும், அளப்பெரிய ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதும், எதிலும் உங்களை முதன்மைப்படுத்திக் கொள்வதும், பிறர் காரியங்களை திறம்பட நடத்திக்காட்டுவதும், நீதி, நேர்மை, ஒழுக்கம் இவற்றிலிருந்து பிறழாமல் உங்கள் இமேஜை வளர்த்துக் கொள்வதும், நிர்வாக மேலாண்மையும், நியாயம் என்று பட்டால் தீர்க்கமாக எந்த இடமாக இருந்தாலும் உங்கள் நிலையை வெளிப்பாடு செய்வதும், குறைபாடில்லா முயற்சியும், எந்த செயலிலும் புரட்சியும், பெரிய மனிதர்களின் தொடர்புகளும் கொண்ட நீங்கள் 1, 10, 19, 28 திகதிகளில் பிறந்திருந்தாலும், A, I, J, Q வை உங்கள் பெயரின் முதல் எழுத்தாக கொண்டிருந்தாலும் ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008முடிய ஓராண்டுக்குரிய நிகழ்வுகளைப் பார்ப்போம்.

காரியத்தடைகள் நீங்கி காவிய நாயகனாக இவ்வாண்டு உதவிகரமாக இருப்பதுடன், மக்கள் மத்தியில் செல்வாக்கு, சிறப்பு, கொட்டவைகளில் எல்லாம் பொருளாதார ஏற்றம், புனித பயணங்கள், குடும்ப அமைதி, நீண்ட நாள் நினைத்து நடக்காமல் போன காரியங்கள் நடந்தேறுதல் போன்றவற்றால் மகிழ்ச்சியில் மிதப்பீர்கள். தடையாய் நின்றிருந்த மகன், மகள் திருமணங்கள் நல்ல இடத்தில் வரன் அமையப் பெறுவதுடன், மழலைகள் இல்லாதவர்களுக்கு அந்தப் பாக்கியம் ஈடேறும். ஓய்வில்லாத உழைப்பினால் சோர்ந்து போகலாம். உடல் சக்தியூட்டும் உணவு மிக அவசியம். நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கு பதவிகள் உயரும். மேல் அதிகாரிகளின் காருண்ய பார்வை விழும், விரும்பிய இடம் மாறுதலும், வண்டி, வாகன, வீட்டுக் கடன்களும் கிடைத்து வாழ்வின் தரத்தை உயர்த்தும். தொழில் அதிபர்கள் வளர்ச்சிக்காக எதிர்பார்த்து காத்துக் கிடந்த பெரிய அளவு கடன் தொகை வந்துசேரும். அயல் நாட்டு வர்த்தகம் விரிவாகும். வியாபாரிகள் நினைத்தபடி தம் வளர்ச்சியையும், கடையின் புதிய கிளைகள் திறப்பையும் எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகள் தமது தலைமையின் பேரன்பை பெறுமளவுக்கு ஏதேனும் ஒரு செயலாற்றி தமது உயர்வை பெற்றுவிடுவர். விவசாயிகள் மழைப்பொழிவு அதிகமாக பெற்று பயிர்செழிப்புடன் வளர்ந்து கால்நடைகளிலும் கூடுதல் லாபத்தை அள்ளிக் குவிக்கலாம். பெண்கள் தமது வாழ்வின் தரத்தை உயர்த்திக் கொள்ளும் அளவுக்கு திட்டங்களை வெற்றியாக்கி, தாமதமான வேலை, திருமணம் ஆகியவை வெற்றிமுகம் காட்டும். மாணவர்கள் புதிய கண்டு பிடிப்பு, கல்வி ஞானம் பெற்று மதிப்படைவர்.

### மாண்பு மிக்கவர் 2ஆம் எண்

அமைதியான வழியினாலும், அயராத உழைப்பினாலும், அளவற்ற அன்பினாலும் அடுத்தவர் மனதைக் கவர்வதும், மனித சக்தியை விட மனோசக்தியே மேலானது என முடிவெடுப்பதும், மற்றவர்கள் ஒத்துழைத்தாலும் இல்லாவிட்டாலும் தலையாய பணியாக தம் மென்மையான நடவடிக்கைகளை தொடர்வதும், கற்பனை வளத்தில் கயிலாயம் போன்ற உயர்வும், இல்லாத ஒன்றை மிக தத்ரூபமாக விளக்கி அடுத்தவர்களை அசர வைத்து, தன்பக்கம் இழுப்பதும், ஆண்களைவிட பெண்களிடம் அதிக வரவேற்பு பெறுவதும், கண்களில் காந்தம் போன்ற சக்தியும், கடல்கடந்த விசயங்களில் அதிக ஆர்வமும், கவிதை, கட்டுரை, கலை, இலக்கியம் போன்றவற்றில் உங்களை அடிமைப்படுத்திக் கொள்வதுமான இயல்புகளைக் கொண்ட நீங்கள் 2, 11, 20, 29 திகதிகளில் பிறந்திருந்தாலும், R, K, B யை உங்கள் பெயரின் முதல் எழுத்தாக கொண்டிருந்தாலும் ஜனவரி 2008முதல் டிசம்பர் 2008 வரை ஓராண்டுக்குரிய நிகழ்வுகளை பார்ப்போம்.

சகல வல்லமைகளையும், அனைத்து மரியாதைகளையும் எளிதில் பெற்று உயர்ந்த மதிப்புடையவர்களின் நட்பையும் பெறுவதால் மக்கள் செல்வாக்கு அதிகமாகிவிடும். எந்தத் தொழிலில் இருந்தாலும் அதன் தேவைகள் மக்களுக்கு அதிகமாவதால் பொருள் வரவுகளை அந்தத்துறை தந்து கொண்டே இருக்கும். மங்கள நிகழ்ச்சிகள் மளமளவென்று நடந்து மனதை மகிழ்விக்கும். உடலும், மனமும் மகத்துவமான நிலையை பெறுவதுடன் மிரட்டி வந்த பலநாள் நோய் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். தொழில் புரிவோர் தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். பகைவர்களிடம் மிகுந்த ஜாக்கிரதையாக இருப்பதும் நல்லது. விரிவாக்கங்களை தீர சிந்தித்து செயல்படவும். வியாபாரிகள் மிகவும் மந்தமாக செயல்பட்டால் பழைய வாடிக்கையாளர்கள் பறந்தோடிவிடுவர் உஷார். பணியில் இருப்பவர்கள் அதிகாரிகளின் சொல்லுக்கு கட்டுப்படுவதே மேல். கூடுதல் வேலைப்பழுவும் ஏற்படலாம். அரசியல்வாதிகள் நல்ல வாய்ப்புக்களை தங்கள் நடவடிக்கைகளால் தலைமையிடமிருந்து பெறுவர். விவசாயிகள் புதிய நிலம், கருவிகள், வீடு கட்டுதல், அதிக லாபம் பெறுதல் இவைகளால் மகிழ்வுடன் இருப்பர். பெண்கள் புகுந்த வீட்டில் உள்ள பெரிய வர்களின் மனதைத்தொடும் காரணங்களை நிகழ்த்த வேண்டும். கணவருடன் இணக்கமான போக்கை கொள்வது நல்லது. மாணவர்களுக்கு மறதி என்ற எதிரியால் நிலுவை ஏற்படலாம் கவனம்.

### நீதியை நிலைநாட்டுபவர் 3ஆம் எண்

எந்த இடத்திலும் முதல்வனாக திகழ்வதும், அறிந்தவற்றை பட்டிமன்றம் போட்டு விளக்குவதும், உயர்வான பல நற்குணங்களை கொண்டிருப்பதும், ஆக்கபூர்வ நடவடிக்கைகளில் முனைப்பாக செயல்படுவதும், பிரபலங்கள் எளிதில் உங்களிடம் நட்புக் கொள்வதும், நாவன்மையும் சபை அடக்கமும், சகல விசயங்களிலும் நாட்டமும், நாகரிகமும், நாட்டுப்பற்றும் தாமாக முன்வந்து நலிவுற்றவர்களின் வாழ்வின் தரத்தை உயர்த்துதலும், சிறிய வயதி லேயே சிறப்புக்கள் பலவற்றை பெற்றுவிடுதலும், அரசாங்கம், அரசியல், ஆன்மீகம், பெரியோர்கள் போன்றவைகளில் அதிக நாட்டமும், உங்களுக்கென்று ஒரு ஆத்ம நேயத்தை ஏற்படுத்திக் கொள்ளுதலும் ஆகிய பண்புகளை உடைய உங்களுக்கு வெகுவான புகழும், அடுத்தவர்கள் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதும், சுகமான வாழ்வும், இள வயதிலேயே சகல வசதிளும் கிடைக்கும். நீங்கள் 3,12,21,30 திகதிகளில் பிறந்திருந்தாலும், C, G, L,S ஐ உங்கள் பெயரின் முதல் எழுத்தாக பெற்றிருந்தாலும் ஜனவரி 2008 முதல் டிசம்பர் 2008 வரை ஓராண்டுக்குரிய நிகழ்வுகளைப் பார்ப்போம்.

அனைத்து வழிகளும் திறக்கப்பட்டு ஆனந்தமான சூழ்நிலைகள் ஏற்படும். பொருளாதார நிலைகள் பொன் எழுத்துக்களில் பொறிக்கப் படும். புதுவிதமான சிந்தனைகளால் சிறப்புக்கள் பல உண்டு. வீட்டில் மங்கள நிகழ்வுகள் கூடிவரும். மழலை இல்லாதவர்களுக்கு மழலை பிறக்கும். உடல்நிலை மாற்றங்கள் வந்தாலும், ஏற்கனவே இருந்த இனம்புரியாத வியாதி தீர்ந்துபோகும். தொழில் அதிபர்கள் அரசின் அதிரடி சட்டங்களை சமாளிக்க முடியாமல் திணறுவர். வியாபாரிகள் விரும்பிய கடன் தொகைகள் கிடைத்தாலும், அரசாங்க நெருக்கடிகளால் சிரமப்படலாம். பணியாளர்கள் பதவிகளைத் தக்க வைக்க பகீரத முயற்சி எடுக்கவேண்டி வரலாம். சிலர் தானாக முன்வந்து பணியிலிருந்து விலகிவிடுவர். அரசியல்வாதிகள் மனதில் பட்டதை சட்டென்று சொல்லி ஏடாகூடமாக மாட்டிக் கொள்ளும் வாய்ப்பு உள்ளதால் உஷார். விவசாயிகள் எப்போதும் இல்லாத அளவுக்கு வாய்ப்புக்களை அள்ளிக் குவிப்பர். பெண்கள் குறைந்த முதலீட்டில் லாபம் பெறுவர். பொது ஊழியத்தில் உங்களை இணைத்துக் கொண்டால் நல்வாய்ப்புக்களை பெறமுடியும். மாணவர்கள் விளையாட்டையும் கல்வியையும் மதித்து செயற்படுவர்.

### உழைப்பில் உறுதி கொண்டவர் 4ஆம் எண்

அதிதீவிர உழைப்பும், ஆபத்து என்று தெரிந்தாலும் அதையும் எதிர்கொள்வதும், எவருடைய உதவிகளையும் தேடிச்சென்று பெறுவதில் விருப்பமின்மையும், துணிவே துணை என்பதை தாரக மந்திரமாக கொண்ட தன்மையும், சகஜமாக அனைவரிடமும் பேசி, தமது கருத்துக்களை தெளிவாக்குவதும், புதுமையான கலைகளில் புகுந்து கலக்குவதும், எத்தகைய பிரபலமாக இருந்தாலும், அவர்களும் மனிதர்களே என்பதில் ஆணித்தரமாக இருந்து உங்களைவிட பிரபலங்களாக இருப்பர்களை உங்கள்பக்கம் இழுத்துக் கொள்ளும் திறமையும், நிலையற்ற தொழிலும், நிறைவான வாழ்வும் வாய் சாதுர்யத்தால் எந்த வேலையையும் கஷ்டப்படாமல் முடித்து புகழ் பெறுவதும், அறிவை அற்புதமாக பயன்படுத்தும் லாவகமும், நாட்டை திருத்துவதில் முதன்மை கருத்துக்களை அரசுக்கே சொல்லும் தைரியமும் கொண்ட நீங்கள் 4, 13, 22, 31 திகதிகளில் பிறந்திருந்தாலும், D, T, M இல் உங்கள் பெயரின் முதல் எழுத்தைப் பெற்றிருந்தாலும் ஜனவரி 2008முதல் டிசம்பர் 2008 வரை ஓராண்டுக்குரிய நிகழ்வுகளைப் பார்ப்போம்.

உண்மைகளுக்கு உயர்வு தந்து, உன்னதமான காரியங்களில் உங்களை ஈடுபடுத்தி தரமான நன்மைகளை மட்டும் அடையும் நேரம் இது. பொருளாதார உயர்வுகளுக்காக புதிய திட்டங்கள் வகுத்து, அதன் மூலம் அபரிமித லாபத்துக்கு வழிவகுப்பீர்கள். வீட்டில் மங்கள நிகழ்வுகள் மதிப்பான வகையில் உடன் பிறப்புக்களின் வழிகாட்டலுடன் நடந்தேறும். குழந்தை பிறப்பும் உண்டு. உடல்நிலையில் உஷ்ணம் அதிகமாகலாம். அலைச்சலும், அகால உணவுகளும் ஏற்ற இறக்கங்களைத் தரலாம், உஷார். தொழில் புரிவோர் யாரும் அறிந்திராத வகையில் புதுமைகளை புகுத்தி அதிக லாபத்துக்கு வழிவகுத்துக் கொள்வர். பெண்கள் நடத்தும் நிறுவனங்கள் சக்கைப் போடு போடும். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களை கவர கூடுதல் முயற்சி எடுத்து நல்ல வெற்றிகளை பெறுவீர். பணியில் இருப்பவர்கள் போராடிய பதவி உயர்வு, பணியிட மாற்றம் பெற்று உயர்வுகளை உள்ளத்தில் மகிழ்வுடன் அடைவார்கள். அரசியலில் கலக்கப் போவது நீங்கள்தான். உடன் உள்ளவர்களும் அஞ்சும் அளவுக்கு உங்கள் தடாலடி திட்டம் நடந்தேறும். விவசாயிகள் விளை பொருட்களை விற்பனை மூலம் அதிக லாபம், புதிய நிலம் வாங்குவது போன்ற மகிழ்வான நிலைகளை பெறுவார்கள். பெண்கள் பெருமை சேர்க்கும் காரியங்களை செய்வர். தடைப்பட்ட திருமணம் நடந்து மகிழ்வூட்டும். மாணவர்கள் மனதில் தெளிவு உண்டாகி படித்தவைகள் அனைத்தும் பயன்பாட்டுக்கு வந்து புகழ்சேர்க்கும்.

(மிகுதி அடுத்த வாரம்)

# சிறுவர் பக்கம்


## தெரிஞ்சுக்கலாமா?



- மனமே பதற்றமடையாதே; எல்லாம் மெல்ல மெல்லத்தான் நடக்கும்.
- நல்ல நம்பிக்கைக்கு உருவாகும் கருத்துக்கு என்றும் அழிவில்லை.
- வேளை அறிந்து பேசு; அதுபோல நாளை அறிந்து பிரயாணம் செய்.
- தனிமரம் தோப்பாகாது; ஆனால் தோப்பாவதற்கு துணைபுரியும்.
- சரியான சமயத்தில் உதவி செய்கின்றவன் இருமடங்கு உதவி செய்கிறான்.
- உழைக்கும் மனிதனின் உறக்கம் மிகவும் இனிமையானது.
- அடக்கமும் எளிமையும் கல்வியின் சிறப்பு.
- வாதாட பலருக்குத் தெரியும்; உரையாட ஒரு சிலருக்கே தெரியும்.
- நட்பு என்பது சமத்துவம்; அறிவில்லாத கோபம் அசட்டுத்தனம்.

தொகுப்பு:
கிளன் அல்பின் - என்.பி.விஜயன்,
பதுளை.

## வண்ணமீன்கள்




**தேவையான பொருட்கள்:**
வண்ண பிளாஸ்டிக் பேப்பர், எண்ணெய், ஷம்பூ, கற்பூரக்கட்டி, கத்தரிக்கோல், அகலமான பாத்திரத்தில் தண்ணீர்.

**செய்முறை:** படத்தில் உள்ளது போல் மீன் போன்ற மூன்று வடிவங்களில் பிளாஸ்டிக் பேப்பரை வெட்டி எடுத்துக் கொண்டு அதன் வால் பகுதியில் சிறிது கற்பூரத்தை வைத்து தண்ணீரில் விடவும். அல்லது இந்த வடிவங்களை தண்ணீரில் விட்டு விட்டு அதன் நடுவில் உள்ள துவாரத்தில் ஒரு சொட்டு எண்ணெய் அல்லது ஷம்பூவை விடவும். இப்போது, பிளாஸ்டிக் மீன்கள் தண்ணீரில் அழகாக ஓட்டமெடுத்து நீந்தும்! குட்டீஸ் இந்த மீன் விளையாட்டை நீங்களும் செய்து பழகுங்களேன்!



## என்னோட ஐடியா!

ஒரு குளத்தில் வசித்து வந்தது தற்பெருமை பிடித்த ஆமை. எப்போதும் தன்னைப் பற்றிப் பெருமை பேசும் அது, ஏதாவது காரியம் ஆக வேண்டுமானால் மற்றவர்களைப் புகழ்ந்து, சாதித்துக் கொள்ளும்.
ஒருநாள் இரண்டு வேடர்கள் குளக்கரையில் நின்று பேசுவதை அது கேட்டது.
'நாளைக்கு வலையோடு வந்து, இந்தக் குளத்தில் இருக்கும் ஆமைகளைப் பிடிக்க வேண்டும்' எனஅவர்கள் பேசிக் கொண்டார்கள். அதைக் கேட்டதும் அதற்கு பயம் வந்துவிட்டது.
சுற்றும்முற்றும் பார்த்த அதன் கண்களில் கரையில் நின்றிருந்த இரண்டு கொக்குகள் தென்பட்டன.
அவற்றை அருகே அழைத்த ஆமை, "அழகான வெள்ளை தேவதைகளே, நான் ஆபத்தில் இருக்கிறேன். கடவுள்மாதிரி நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். ஒரு குச்சியின் இரண்டு முனைகளை நீங்கள் வாயில் கவ்வியபடி இணையாகப் பறந்தால், அதன் மையத்தை நான் வாயால் இறுகப் பற்றியபடி உங்களோடு வருவேன். வேறொரு குளத்தில் என்னை விடுவீர்களா?" என பரிதாபமாகக் கேட்டது.
ஆமையின் புகழ் வார்த்தைகளில் மயங்கிய கொக்குகள் அதற்குச் சம்மதித்தன. "ஆனால் நீ வாயைத் திறந்தால் கீழே விழுந்து இறந்து போவாய்; ஜாக்கிரதை" என அவை எச்சரித்தன.
அந்த நிமிடமே அவை ஆமையைத் தூக்கிக் கொண்டு பறந்தன. பக்கத்து கிராமத்தின் மீது பறந்தபோது கீழேயிருந்து இந்தக் காட்சியைப் பார்த்த மக்கள் வியந்தார்கள்.
"இந்த கொக்குகளின் புத்திசாலித்தனத்தைப் பார்த்தீர்களா? எவ்வளவு சாதுர்யமாக அவை ஆமையை கொண்டு செல்கின்றன!" என்று பலரும் பேசினார்கள். ஆமைக்கு பொறுக்கவில்லை. என்னுடைய திட்டத்துக்க புகழ் பெறுவது இவர்களா என வெம்பிய அது, "கொக்குகளுக்கு இதில் சம்பந்தமில்லை; இது என்னோட ஐடியா" என்று கத்தியது. அந்த நொடியில் அதன் பிடி விலகி, தரையில் விழுந்து இறந்தது.

*தற்பெருமை பேசுகிறவர்கள் உயரத்...*



நிர்மேஸ்,
தரம் 6,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு- 15



ஜெப்ஸியா நெல்சன்,
தரம் 2 ஏ,
பரி. மரியாள் தேசிய பாடசாலை,
திருகோணமலை.

## சிறுவர் கைவண்ணம்

அமிர்தலிங்கம் வசந்தன்,
தரம் 12 (கலைப்பிரிவு),
முல்லைத்தீவு மகா வித்தியாலயம்,
முல்லைத்தீவு.



வை.சஜீவன்,
தரம் 7 சி,
ஸ்ரீசுப்பிர மணிய வி.சா.,
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.




## அழகாக நிறம் தீட்டுங்கள் 30



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவு செய்யப்படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விபரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

### அழகாக நிறம் தீட்டுங்கள் 27



முதலிடம் பெற்றவர் - ரைசா அஸ்மத், தரம் 1 பி
களு/ ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்ல, பாணந்துறை.

### பாராட்டுப் பெறுவோர்...

1. ஜீ.அல்கா பானுன்,
   தரம் 4 சி,
   கைரியா எம்.பி.எம்.வி.,
   கொழும்பு- 09.
2. ஆர்.அக்ஷரா,
   தரம் 2 சி,
   கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை,
   கல்முனை.
3. சே.கலைவாணி,
   தரம் 7 ஏ,
   உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
4. கஜானி ஜெகநாதன்,
   தரம் 2,
   வ/வ/ முஸ்லிம் மகா வித்தியாலயம்.
5. மொஹமட் நுஸைர் இம்ரா,
   தரம் 4 பி,
   க/ஜப்பார் மத்திய கல்லூரி, கலகெதர.

# ஜோக்கராகும் ஜெயராஜ்


## கோமாளியான மேர்வின்!

அண்மைக்காலமாக அரசியல் அவதானிகள் மத்தியிலும் விமர்சகர்கள் மற்றும் செய்திப்பிரியர்கள், வாசகர்கள் மத்தியிலும் சர்வசாதாரணமாக உச்சரிக்கப்படும் இரண்டு பிரபலங்கள் தான் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும், கலாநிதி மேர்வின் சில்வாவும்.

ஆம் ஆளும் கட்சியின் பக்கம் இவர்கள் இருவரும் இல்லாவிட்டால் அரசு, களை இழந்து போகும். ஏன் என்றால் சம்பந்தா சம்பந்தம் இல்லாத விடயங்களில் எல்லாம் மூக்கை நுழைத்து முட்டாள் பட்டம் கட்டிக் கொள்பவர் தான் கலாநிதி மேர்வின் சில்வா.

எதிரணியில் இருப்பவர்கள் எவராக இருந்தாலும், எதைப் பேசினாலும், அவர்கள் என்ன பேசுகின்றார்கள்; எதை சொல்லுகிறார்கள் என்பதை கூட அறிந்து கொள்ளாமல் அவர்களைப் பேசவிடாமல் கூச்சல் போட்டு சண்டித்தனம் காட்டுவதில் கெட்டிக்காரர் என்பது போலவே தினசரி மொக்குப் பட்டம் பெற்றுக் கொள்வதிலும் வல்லவர்.

நா..ளுமன் றத்தில் அங்கம் ...க்கும் 225 உறு... னகளு...கும் சபாந...கர் நீங்க...க தனித்தனியாக ஆசனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவரவர் ஆசனத்தில் இருந்து தான் எதையும் பேச வேண்டும். எந்தக் கருத்தையும் கூற முடியும். அப்போது தான் அவர்களுக்கு (மைக்) ஒலிவாங்கி கொடுக்கப்படும், உத்தியோகப் பதிவேடான ஹன்சாட்டிலும் பதியப்படும்.



ஆனால், நமது கலாநிதி ஒரு நடமாடும் உறுப்பினராக சபையின் நாலாபக்கம் நடமாடிக்கொண்டே இருந்து பேசுவார். சில வேளை முஸ்டியை முறுக்கிக் கொண்டு மோதிக் கொள்ளவும் தயாராகிவிடுவார். இதனால் பலமுறை சபா நாயகரின் கண்டனத்துக்கும் உள்ளாகி இருக்கிறார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது மேல்கொத்மலை நீர் மின் நிலையம் தொடர்பாக ரவி கருணா நாயக்க எம்.பி. கேள்வி எழுப்பிய போது, சூடான வாதப் பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருந்த சமயம் கலாநிதி மேர்வின் அர்த்தம் இல்லாமல் சத்தம் போட்டு குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தார். அவர் எவருடைய கூற்றுக்கும் அடிபணிபவராக இல்லை.

இந்த சந்தர்ப்பத்தில் தான் சபா நாயகர், மேர்வின் ஒரு தலைவலி என்று கடிந்து கொண்டதுடன் கலாநிதிப்பட்டம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது அந்தப்பட்டத்துக் கேற்ப கௌரவத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என கண்டிப்பாகவும் காட்டமாகவும் கூறிவிட்டார். இதனைப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் அப்படியே புட்டுக்காட்டி விட்டன.

கலாநிதியின் இப்படியான செயல்களினால் அவர் நாடாளுமன்றத்தில் இப்பொழுது ஒரு கோமாளியாகிவிட்டார்.

அடுத்ததாக பலராலும் விமர்சிக்கப் படுபவர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே. இது ஒரு அருமையான தமிழ் பெயர். பெயர் மட்டும்தான் தமிழ் ஆனால், அவர் ஒரு தமிழர்தானா என வியக்க வைக்கும் அவரது செயற்பாடுகள்.

தொழில் ரீதியாக இவர் ஒரு பிரபல சட்டத்தரணி. நீதிமன்றங்களில் எந்த ஒரு சட்டத்தரணியும் ஒரே முறையில் வழக்குகளை முடித்துக் கொடுத்து விடுவதில்லை. அடிக்கடி தவணை எடுத்து வழக்காளர்களின் வெறுப்பைக் கட்டிக் கொள்வார்கள்.

பழக்க தோஷமோ என்னமோ நாடாளுமன்றத்திலும் தவணை எடுக்கும் பழக்கம் இவரைத் தொற்றிக் கொண்டது போலும்.

நாடாளுமன்றத்தில் பிரதமர், சபை முதல்வர் என்ற இரு பிரமுகர்களுக்கு அடுத்ததாக ஆளும் கட்சிக் கொரடா என்ற மூன்றாவது உயர் பதவியை வகிப்பவர். குறிப்பாக நாடாளுமன்றத்தை இட்டுச் செல்பவரும் இவர்தான் என்று கூடசொல்லலாம்.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு அமைச்சர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அமைச்சர்களின் சார்பில் பதில் அளிக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. ஆரம்ப காலத்ததில் அமைச்சர் ஜெயராஜ் தனது பொறுப்பை மிகவும் திறமையாகச் செய்து வந்தார். ஆனால், அண் மைக் காலங்களில் மிகவும் கடுமையான வகையில் விமர்சனங்களுக்கு உள்ளாகிவருகின்றார்.

உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கான பதில் கையில் இருக்கும் போது கூட அந்தக் கேள்விகளுக் குப் பதில் அளிக்க கால அவகாசம் கேட்டு விடுவார். ஒரே கேள்விக்கு இரண்டு மூன்று தடவைகள் கூட கால அவகாசம் கேட்டதும் உண்டு. இதனால் நாடாளுமன்ற உறப்பினர்களின் வெறுப்பையும் வலியப் பெற்றுக் கொள்வார்.

இப்படியான சந்தர்ப்பங்களில் உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதைவிட கேள்வி எழுப்பிய உறுப்பினர்களின் சொந்த விடயங்களைக்கூட வம்புக்கு இழுத்து கிண்டல் அடிப்பதும் நக்கல் அடிப்பதும் அதிகரித்து விட்டன.

குறிப்பாக ஐ.தே.க. உறுப்பினரான ரவி கருணா நாயக்கவுக்கும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும் அடிக்கடி சுவாரஷ்யமான மோதல்கள் இடம்பெறும். 'டை, கோட்போட்ட ஏழைகளின் தலைவன்' என ரவியை நையாண்டி செய்ய, 'ரவி ஏன் உமக்கு டை, கோட் போட முடியவில்லை என்ற எரிச்சலா!' என்பதும் அடிக்கடி இடம்பெறும் சம்பாஷணைகள்.

கேள்வி கேட்பவர்களையே மடக்கி அடித்து மட்டம் தட்டுவதில் கெட்டிக்காரர், சாமர்த்தியசாலி.

ஆனால், அண்மையில் சாதாரண பெண் எம்.பி ஒருவரால் இவர் மட்டம் தட்டப்பட்டார். வழமை போல் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொண்டார்.

ஜே.வி.பி. உறுப்பினரான சுஜாதா அழகக்கோன் என்பவர் தமது பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நீர்பாசனத் திட்டம் தொடர்பான ஒரு கேள்வியை எழுப்பினார். அதற்கு ஜெயராஜ் வழமைபோல், இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க பல தகவல்கள் திரட்ட வேண்டும் எனவே ஒரு மாத கால அவகாசம் வேண்டும் என்றார்.

பாவம் இவருடைய போதாத காலம். எதிர்பாராத சம்பவம் இடம் பெற்றது. அதாவது 'கேள்விக்கான பதிலின் நகல் எனக்கு கிடைத்துள்ளது. அமைச்சர் வேண்டுமென்றே கால அவகாசம் கேட்கின்றார். இதோ நான் கேட்ட கேள்விக்கான பதிலை நானே தருகிறேன்' என்று தன்வசம் இருந்த பதிலின் நகலை கடகட வென்று வாசிக்க ஆரம்பித்து விட்டார். அத்தோடு நின்று விடவில்லை. இந்தப் பதிலில் ஏதாவது சந்தேகம் இருந்தால் இடைக் கேள்விகளை கேட்க லாம் என ஜெயராஜின் பாணியிலேயே கேட்டும் விட்டார்.

இந்த நிகழ்வு புள்ளேக்குப் பெரும் தலைகுனிவை ஏற்படுத்தி விட்டது. வழமையாக மற்றவர்களை மட்டம் தட்டும் இவர் ஒரு பெண் எம்.பியினால் மட்டம் தட்டப்பட்டார். 'புலிக்கு ஒரு காலம் என்றால் எலிக்கும் ஒரு காலம் வரும்' என்ற கதையாகிவிட்டது.



அதே போன்று 'வட்டுக்கோட்டைக் குப் போக வழி எது என்றால் துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு' என்ற எடக்கு முடக்காக பதில் சொல்வதும் இவரது வழமை.

அண்மையில் தலைநகரிலும் புறநகர் புறங்களிலும் தமிழர்கள் வகை தொகை இன்றி கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களிலும் பூஸா தடை முகாமிலும் அடைக்கப்பட்ட விடயம் பெரும் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. எப்போதும் இல்லாத வகையில் சிங்களக் கட்சிகளான ஜே.வி.பி.யும், ஐக்கிய தேசிய கட்சியும் தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டதை கடுமையாகக் கண்டித்தன. இது நாடாளுமன்றத்தில் ஒரு திருப்பம்.

சபையே இப்படி அல்லோல கல்லோலப்பட்டபோது ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சிறிதும் அலட்டிக் கொள்ளாமல் தமிழர்கள் கைது செய்யப்பட்டதை நியாயப்படுத்திப் பேசினார்.

அரசினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் மீதே சந்தேகம் எழுப்பி விட்டார். அதாவது, இவர்களிடம் இருக்கும் அடையாள அட்டைகளைப் புலிகள் கூடதயாரித்து வழங்கி இருக்கலாம், அவை பரிசீலிக்கப்படவேண்டும் என்றும் கூறிவிட்டார்.

இரா. புத்திரசிகாமணி

இச்சம்பவம் தொடர்பாக மகேஸ்வரன் எம்.பிக்கும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும் இடையில் கடுமையான சொற்போர் ஒன்றே இடம்பெற்றது.

தமிழ் மக்கள் இப்படி துன்புறுத்தப் படும்போது சிறிதும் சமூக உணர்வு இல்லாவிட்டாலும் மனிதாபிமான உணர்வு கூட இல்லாமல் தடித்தனமாக இப்படிப் பேசுகின்றார். இவர் ஒரு பௌத்தரா, இந்துவா, கிறிஸ்தவரா? எதற்குமே ஒவ்வாத இரண்டும் கெட்டானாகவே காணப்படுகின்றார் என மகேஸ்வரன் கொட்டித் தீர்த்துவிட்டார்.

ஆனால் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, சம்பந்தா சம்பந்தம் இல்லாத வகையில் ஜனாதிபதிக்கும் மகேஸ்வரனுக்கும் இடையில் இரகசிய தொடர்புண்டு தனக்கு வேண்டியதை எல்லாம் நேரடியாகப் பேசிப்பேசிப் பெற்றுக் கொள்கிறார். இங்கே வந்து பொய்யாக தமிழர்களுக்காகப் பேசுகின் றார். இது ஒரு நடிப்பு என்று கூறி விட்டார்.

பாவம் என்ன செய்வது இந்த மனிதனுக்கு உண்மை யான நட்பின் அர்த்தம் தெரியாது. நான் அமைச் சராக இருந்த காலத்துக்கு முன் இருந்தே ஜனாதிபதியை அறிவேன். ஒரு சாதாரண எம்.பியாக, எதிர்க் கட்சித் தலைவராக அவர் இருந்த காலத்தில் இருந்தே நட்புடன் பழகுகின்றேன். நான் அமைச்சராக இருந்தபோது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஜனாதிபதியை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்று கௌரவப்படுத்தி உள்ளேன். அப்போது நண்பர் ஜெயராஜ் கூட மாலை போட்டுக் கொண்டவர்தான். இப்போது இதை எல்லாம் மறந்து விட்டு உண்மையான நட்பை கொச்சைப்படுத்துகின்றார் என்று விளாசிவிட்டார் மகேஸ்வரன்.

அண்மையில் நேரடி தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் இவ்விடயம் எழுப்பப்பட்டபோது மகேஸ்வரன் எம்.பி இப்படிக் கூறியிருந்தார்.

''ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஒரு ஜோக்கர். அவர் என்ன பேசுகின்றார் என்பது அவருக்கே தெரியாது. மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுபவர் அவர். முன்பு தமிழர்கள் பலவந்தமாக கொழும்பில் இருந்து வெளியேற்றப்பட்டபோது அதற்காக கவலை தெரிவித்து பிரதமர் மன்னிப்புக் கோரியதை கடுமையாக விமர்சித்தவர் இவர்.

அதோடு நின்றுவிடவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் சிரேஷ்ட அதிகாரிகளான லூயிஸ் ஹார்பர், ஜோன் ஹோம்ஸ் ஆகியோரை பயங்கரவாதிகள் என்றும், புலிகளிடம் கப்பம் வாங்கிக் கொண்டு அறிக்கை விடுகின்றனர் என்று கூறினார். இவரின் பொறுப்பற்ற செயலுக்காக வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம சர்வதேச சமூகத்திடம் மன்னிப்பு கேட்கும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டார். இப்பொழுது இவருடைய பேச்சுக்களையும் கருத்துக்களையும் எவரும் பொருட்படுத்துவது இல்லை. இவரை ஒரு ஜோக்கராகவே கருதுகிறோம். இவருடைய பேச்சுக்களை தூக்கிப் பிடித்துக் கொண்டு பேசிக் காலத்தையும் நேரத்தையும் வீணடித்து விடக் கூடாது'' என்று மகேஸ்வரன் நீண்ட விளக்கம் அளித்துவிட்டார்.

இதேபோன்று திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் கொலை தொடர்பாக சாட்சியமளிக்க எவரும் வர மறுக்கின்றனர் என்று கூறி தமிழ் தேசிய கூட்டணி உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் மாட்டிக் கொண்டார். சாட்சிகளை சாட்சியமளிக்க வரவிடாமல் விசேட அதிரடிப் படையினரே அச்சுறுத்தி வைத்துள்ளனர். இதை ஜனாதிபதிக்கே அறிவித்துள்ளோம். இதை எல்லாம் தெரிந்து கொண்டு சபையில் பொய் சொல்ல வேண்டாம் என சுரேஷ் நேருக்கு நேர் கண்டித்தார்.

தமக்கு ஏதாவது செய்வார்கள் என எதிர்பார்த்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்கள், இப்படி நம்மவர்கள் கோமாளிகளாகவும் ஜோக்கர்களாகவும் மாறிவிட்டனரே என்று கவலைப்படுகின்றனர்.

# அடையாளம் காணப்படாத நிலையில் அடக்கம் செய்யப்பட்டுவரும் சடலங்கள்!

யாழ். குடாநாட்டில் கடந்த 16 மாத காலத்தில் பெரும் தொகை யான அடை யாளம் காணப்படாத சடலங்கள், எந்த வகையான ஆதாரங்களும் பெறப்படாத நிலையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த நிலைமை தொடர்ந்து அதிகரித்த வண்ணமுள்ளது.

இதேபோன்றநிலை 1996, 1997 காலப்பகுதியிலும் காணப்பட்டது. ஒருபுறம் பல நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போனவர்கள் பட்டியலில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் அடையாளம் காணப்படாத நிலையில் பெருமளவு சடலங்கள் எந்த விதமான ஆதாரங்களும், குறிப்புகளும் பெறப்படாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்படுகின்றன.

கடந்த காலத்திலும் பார்க்க இன்னும் ஒரு படி மேலாக தற்போதைய நிலைமை காணப்படுகின்றது. குடாநாட்டில் சுட்டுக் கொல்லப்பட்டும், வெட்டிக் கொல்லப்பட்டும் அடையாளம் காணப்படாத நிலையில் பெருமளவான சடலங்கள் அண்மைக் காலமாக அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

முன்னர் இனம் காணப்படாத சடலங்கள் தொடர்பாக ஊடகங்களில் குறிப்பாக பத்திரிகைகளில் புகைப்படங்கள் பிரசுரித்து அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்து வந்தார்கள். அந்த நடவடிக்கை ஒரு குறிப்பிட்ட காலம் முன்னெடுக்கப்பட்டு வந்தது. பின்னர் குடாநாட்டில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியான நிலையில் இவற்றைப் படமெடுக்கச் செல்வதை ஊடகவியலாளர்களும் தவிர்த்து வந்தனர்.

கொலையாளிகளும் கடத்தல்காரர்களும் மிகவும் துணிச்சலாகக் கொலைகளைப் புரிந்து வருகின்றார்கள். சனநடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளில் இந்தக் கொலைகள் சர்வசாதாரணமாக இடம்பெற்று வருகின்றன.

இதேபோன்று வீடுகளிலும் வீதிகளிலும் இனம்தெரியாதவர்களினால் கடத்தப்படுபவர்கள் கொலை செய்யப்பட்டு வீதிகளிலும் பற்றைகளிலும் வீசப்படுகிறார்கள். இவர்கள் எந்த இடத்தில் பிடிக்கப்பட்டு எங்கு கொண்டு சென்று கொலை செய்யப்

**— வில்லவன் —**

பட்டு எங்கு வீசப்படுகின்றார்கள் என்பது யாருக்கும் தெரியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொல்லப்படும் படைத்தரப்பினரின் உடல்களை படைத்தரப்பினரும் , இதே போன்று படைத்தரப்பினரால் கொல்லப்படும் விடுதலைப் புலிகளின் உடல்களை புலிகளும் செஞ்சிலுவைக் குழுவின் உதவியுடன் பெற்றுக் கொள்கின்றார்கள்.

ஆனால் இந்த இனம் காணப்படாத சடலங்கள் விடயத்தில் மட்டும் ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இடம்பெறுவதாக இல்லை.

இத்தகைய சடலங்களை உடன் அடையாளம் காட்ட முடியாவிட்டாலும் இருவார காலத்தில் அடையாளம் காட்ட யாரும் முன்வராத நிலையிலும் அவர்கள் சம்பந்தமான விவரங்களை, புகைப்படங்களையேனும் பேண நடவடிக்கையெடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மனித உரிமைகள் ஆர்வலர்களுக்கும், வைத்தியசாலை வட்டாரத்தினருக்கும் உண்டென்றே கூற வேண்டியுள்ளது.



கடந்த காலங்களில் இனம் தெரியாத சடலங்கள் புதைக்கப்படுவதற்கு முன்னர் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன. அவ்வாறும் அடையாளம் காணப்படாத சடலங்கள் பின்னர் புதைக்கப்படுகின்றன.

இன்று இத்தகைய நிலைமை இல்லையென்பதை உணரக் கூடியதாக இருக்கின்றது. குடாநாட்டு நிலைமை இன்று மிகவும் மோசமான கட்டத்தில் இருக்கின்றது. பலர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள். மேலும் பலர் காணாமற் போகின்றார்கள். வேறுசிலர் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதையடுத்து மனித உரிமை ஆணைக்குழுவில் குடும்பமாகவும், தனிநபராகவும் சரணடைகின்றார்கள். இப்படி ஒரு பயங்கர சூழ்நிலைக்குள் மக்களின் நாளாந்த வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கின்றது.

களவுகள், கொள்ளைகள், கொலைகள் நடந்து வீட்டில் உள்ளோர் கூச்சலிட்டாலும் அயலில் உள்ளோர் ஓடி வர மாட்டார்கள். வீதிகளில் சூடுபட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாலும் யாரும் தூக்கி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லமாட்டார்கள். இவ்வாறு உதவி செய்தால் துப்பாக்கிகள் தம் பக்கம் திரும்பிவிடும் என்ற பயம்தான் இதற்குக் காரணம். இதனால் குடாநாட்டு மக்கள் தமது மனிதாபிமான உணர்வுகளை அடக்கிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தம்மைச் சுற்றி இடம்பெறும் அவலங்கள், துன்பங்கள் காரணமாக பயத்தில் உறைந்து போயுள்ள தமக்கு என்ன நடக்கின்றது? குடும்பத்திற்கு என்ன நடக்கின்றது? என்பதை கண்டறிந்து உணர்வதற்குள் பல சம்பவங்கள் நடந்து முடிந்து வருகின்றன.

இதேபோன்று நிலைதான் இனம் காணப்படாத சடலங்களின் விடயத்திலும் உள்ளது. காலையில் வீட்டில் இருந்து புறப்படுபவர்கள் மீண்டும் வீடு திரும்பினால்தான் வீட்டில் உள்ளவர்களுக்கு நிம்மதி. வீட்டில் இருந்து புறப்படுபவர்களுக்கு என்ன நடக்குமோ என்ற அச்சம் வீட்டாரை வாட்டுகின்றது. அத்துடன் தான் பாதுகாப்பாக வீடு திரும்ப வேண்டும் என்ற அங்கலாய்ப்பும் ஏக்கமும் புறப்பட்டவரை ஆட்கொள்கின்றன.

ஒருவரைக் காணவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவரைத் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் உறவினர்கள் ஈடுபட்டிருக்கும் வேளையில் ஒப்படைக்கப்படும் சடலங்கள் உரியவர்கள் அடையாளம் காண்பதற்கு முன்னர் பழுதடைந்து சிதைந்த நிலையில் அடக்கம் செய்யப்படுகின்றன.

## எதிர்காலத்தில் அடையாளம் காண ஏதுவாக புகைப்படங்கள், ஆதாரங்கள் பேணப்படுகின்றனவா?

இத்தகைய இனம் தெரியாத சடலங்கள் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் அவை தெளிவாகப் புகைப்படம் எடுக்கப்படவேண்டியதுடன் அவற்றில் உள்ள ஆதாரங்களும் சரியான முறையில் பதிவு செய்யப்பட வேண்டும். இதன் மூலம் காலம் தாழ்த்தியாவது அடையாளம் காணக்கூடியதாக இருக்கும். அண்மையில் அள வெட்டிப் பகுதியில் தமது மகனுடைய சடலம் எனப் பெற்றோரால் உரிமை கோரப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் பிரேத பரிசோதனையும் செய்யப்பட்ட பின்னர் அது வேறு ஒருவருடையது என அடையாளம் காணப்பட்ட சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

இந்த தடுமாற்றம் கூட அவலத்தின் அடிப்படையில் ஏற்பட்ட குழப்பமே ஆகும். இதே போன்று இன்று பல இளைஞர்களும், குடும்பஸ்தர்களும் இனம் தெரியாதவர்களினால் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது.

இவர்களில் ஒரு பகுதியினர் கொலை செய்யப்பட்டு சடலங்கள் தீயிட்டும், முகங்கள் சிதைக்கப்பட்டும் அடையாளம் காண முடியாதாறு பல்வேறு இடங்களிலும் வீசப்பட்டன. இவற்றில் சில அடையாளம் காணப்பட்டும் மேலும் சில அடையாளம் காணப்படாமலும் போயுள்ளன.

இந்தச் சடலங்கள் பற்றி அவர்களின் குடும்பங்களுக்கு சில தகவல்கள் காலம் பிந்தியும் ஏனையவர்களினால் வழங்கப்பட்டுள்ளன. இதனை இன்று உறுதிப்படுத்த முடியாத நிலையில் குடும்பங்கள் காணப்படுகின்றன. காரணம் அடையாளம் காணப்படாமல் அடக்கம் செய்யப்பட்ட சடலங்கள் தொடர்[illegible] புகைப்படங்களோ அல்லது ஆதா[illegible]களோ சரியான முறையில் பேண[illegible]படவில்லை.

அநுராதபுரத்தில் 14 வருடங்களுக்கு முன்னர் கொலை செய்யப்பட்ட ஒருவரின் சடலம் கிணறு ஒன்றில் இருந்து எடுக்கப்பட்டு விசாரணைகள் இடம் பெறுவதாக அண்மையில் செய்திகள் வெளி வந்தன.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் இன்று அடையாளம் காணப்படாத சடலங்கள் எதிர் காலத்தில் சில வேளைகளில் அடையாளம் காட்டப்படும் நிலை ஏற்படலாம். அந்த நேரத்தில் அடையாளம் காட்ட எந்த வகையான ஆதாரமும் இருக்கப் போவதில்லை. ஆகையினால் அதற்கான தடயங்களைப் பேணவேண்டும்.

இவ்வாறான சடலங்களைப் புகைப்படம் எடுத்து அவற்றை ஊடகங்களில் வெளிப்படுத்துவதன் மூலம் அடையாளம் காண்பதற்கான வசதிகளை ஏற்படுத்த முடியும். இதனை மனித உரிமை களில் அக்கறை உள்ளவர்களும் வைத்தியசாலை நிர்வாகங்களும் ஒரு மனிதாபிமான அடிப்படையில் செய்யவேண்டும்.

இதன் மூலம் காணமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை இப்போது அறியாவிட்டாலும் எதிர்காலத்தில் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். *






எல்.எம்.ஜமீல்,
காத்தான்குடி.

*கேள்வி:* சூடாக ரீயைக் குடிப்பதனால் ஏதாவது பக்க விளைவுகள் உண்டா பித்தா?
*பதில்:* ஆம். நாக்கு மரத்துப் போகும்.

எம்.பி.எம்.அன்ஸார்,
போத்தலப்பிட்டிய.

*கேள்வி:* பித்தா! உலகில் சமாதானம் எப்போது தோன்றும்?
*பதில்:* மனிதன் வாழ்வதற்கு காற்று மட்டும் போதுமானதாக இருக்கும் போது சாத்தியமாகும்.

எம்.ஜீவா,
கொழும்புத்துறை.

*கேள்வி:* பித்தரே! நீர் எமது கேள்விகளுக்கு பதில் எழுதும் வேலைக்கு வராவிட்டால் என்ன வேலை செய்து



பிழைப்பீர்? சமையல் வேலையா? துணி துவைத்தலா?
*பதில்:* 'தண்ணி' யடித்துப் பிழைத்திருப்பேன்.

எம்.லட்சுமி,
திருமுறிகண்டி.

*கேள்வி:* அன்பின் பித்தா! நான் எனது காதலனுடன் கதைப்பதற்கு கணவர் தடையாக இருக்கின்றாரே என்ன செய்ய?
*பதில்:* 'டிவோஸ்' தான் ஒரேவழி.



ஆனால், 'கல் ஆனாலும் கணவன் புல் ஆனாலும் புருசன்' என்று வாழ்பவர்கள் தமிழ்ப் பெண்கள். (வாழ்க தமிழ்ப் பண்பாடு) நீங்கள் எப்படி? கண்ணகியா? மாதவியா?

இரா.ரஜனிகலா,
உடப்பு.

*கேள்வி:* பித்தா! பொதுநலம், சுயநலம் என்கிறார்களே! அப்படியென்றால் என்ன?
*பதில்:* மழை பெய்வது பொதுநலம். குடை பிடிப்பது சுயநலம்.

பூ.சங்கீதா,
வவுனியா.

*கேள்வி:* பித்தா! பெண்களை மலர், நிலவுக்கு வர்ணிப்பது போல் ஆண்களை எதற்கு வர்ணிக்கிறார்கள்?
*பதில்:* சிங்கம், புலி, யானை. பாவம் ஆண்கள். அவர்களை எவரும் மனிதர்களாக ஏற்றுக்கொள்வதே இல்லை!

மயூரன்,
நல்லூர்.

*கேள்வி:* பித்து! நீங்கள் அறிவுக்கடலாமே உண்மையா?
*பதில்:* ஒரு புத்தகத்தை 100 நிமிடம் படிப்பது ஒரு அறிவாளியுடன் 10 நிமிடம் பேசுவதற்குச் சமம்.
( ஸோ, நீங்கள் எனக்கு எப்போது வேண்டுமென்றாலும் கோல் பண்ணலாம்... நான் பேசத் தயாராக இருக்கிறேன்)

பி.சாருமதி,
கொழும்பு- 05.

*கேள்வி:* எங்கள் கேள்விகள் உங்களுக்கு உதவுகிறதா பித்தா?
*பதில்:* இதென்ன கேள்வி? மூச்சிரைக்க ஓட்டப் பந்தயத்தில் ஓடிவிட்டு வந்தவன் குளுக்கோஸை எப்படி எதிர்பார்க்கிறானோ அப்படியல்லவா உங்கள் கேள்விகளை நானும் எதிர்பார்க்கிறேன்.

என்.திருமுருகன்,
நவாலி.

*கேள்வி:* பித்தா! நான் நெடுநாளாக ஒரு பெண்ணை துரத்துகின்றேன். மாட்ட மாட்டேன் என்கிறாளே?



*பதில்:* மீனவன் வலையில் தண்ணீர் சிக்குவதே இல்லை!

எம். லட்சுமி,
திருமுறிகண்டி.

*கேள்வி:* விழிகளால் பேச பெண்களால் மட்டுமே முடிகிறதே... இது ஏன் பித்தா?
*பதில்:* வள்ளுவரை கேட்டுப் பாருங்கள். அவரே பதில் தருகிறார்.



யான் நோக்குங்காலை நிலன் நோக்கும்,
-நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்.

கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்
-வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல.

பெ.க.ராஜா,
திருகோணமலை.

*கேள்வி:* பித்தன் அவர்களே! மனிதனுக்கு மரணம், தண்டனையா? விடுதலையா?
*பதில்:* வீரர்களுக்கு விடுதலை, அரசியல்வாதிகளுக்கு தண்டனை.

கே.சிவதரன்,
மாத்தளை.

*கேள்வி:* உலகில் மிகப் பெரிய பணக்காரன் யார் பித்தா?
*பதில்:* 'ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப் பெரிய பணக்காரன்' என்கிறார் சுவாமி சிவானந்தா.

பித்தன் மீது பித்தாய் உள்ள பித்தர்களே! பித்தனிடம் எத்தனை பித்தான கேள்விகளையும் நீங்கள் தொடுக்கலாம். அவைகளின் தரம் அறிந்து பித்தன் பதிலளிப்பான்.
அனுப்ப வேண்டிய முகவரி:

**'பித்தன் பதில்கள்'**
சுடர் ஒளி (வாரஇதழ்)
இல.85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு- 14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 293

சொற்சிலம்பம் 293போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித் தினம் டிசம்பர் 22ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 06 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.291 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
**'சுடர் ஒளி'**
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 293

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | 7 | | ■ | |
| 8 | 9 | | | | ■ | 10 | |
| 11 | | | | ■ | 12 | | ■ |
| ■ | 13 | | ■ | 14 | | ■ | 15 |
| 16 | | ■ | 17 | | | 18 | |
| 19 | | 20 | | ■ | 21 | | |
| | ■ | 22 | | | ■ | 23 | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 291

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 மு | 2 க | 3 ம | ன் | ■ | 4 வி | 5 ச | 6 மி |
| 7 க | ள | ரி | ■ | 8 உ | த | ய | ன் |
| 9 த | னி | த் | 10 து | வ | ம் | ■ | ன |
| லை | ■ | 11 த | ணி | கை | ■ | 12 வே | ல் |
| ■ | 13 வெ | ல் | க | ■ | 14 அ | லி | ■ |
| 15 ந | ல் | ■ | 16 ர | ச | ம் | ■ | 17 கு |
| 18 க | லி | 19 ச | ம் | ■ | 20 ம | கு | டி |
| 21 ர | ம் | பை | ■ | 22 அ | ன் | றி | ல் |

## சொற்சிலம்பம் போட்டி இல.293

### இடமிருந்து வலம்

1. சதத்தில் அரைவாசி.
4. ஜனநாயக நாட்டில் மக்கள் தீர்ப்பு இதன் மூலம்.
6. ஆண் மகன்/ சிறந்தோன்.
8. விரோதம் கொள்ளல்.
10. குளம்/ தண்ணீர் தேங்கும் பள்ளம்.
11. மனம் / உள்ளம்/புத்தி/ எண்ணம்.
12. கடற்கரையில் எப்போதும் காணலாம்.
13. பழைமையானது என்பதைக் குறிப்பது.
14. விண்மீன்/ (உடையை) அணி.
16. விழி(த்துக் கொள்)
17. தோற்றம்/ உருவவடிவம்.
19. திருவிழாவின் தொடக்கம்.
21. செய்த.
22. தளிர்.
23. கோபம்( பொத்துக் கொண்டு) ஏறுவது இப்படி.

### மேலிருந்து கீழ்

1. ஒரு தமிழ் மாதம்.
2. வகுத்தல்/ பிரித்தல்/ வகை செய்தல்.
3. வேகமாக / விரைவு.
4. விலங்குகளுக்கு விசேட உறுப்பு.
5. வெடித்துச் சேதம் ஏற்படுத்துவது.
7. குளிர் காற்று வீசும் போது வரும் உணர்வு.
9. விவசாயப் புரட்சியை அடுத்து வந்த புரட்சி இது.
10. மேரு.
12. நெருப்பு எரிவது இங்கே.
14. வடிவம்/ தோற்றம்.
15. நாடகம், சினிமாவில் முக்கிய பாத்திரம்.
16. நிர்வகிக்கும் முறைமை.
17. வெள்ளைப் பூடு.
18. வெகுமதி/ பாராட்டி வழங்கும் பெறுமதி.
20. வெளி ஓடு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 291

1. அ.பத்மலோசனா,
51ஏ, மேபீல்ட் லேன்,
கொழும்பு - 13.
2. இரா.இறையாளன்,
'அந்திரேயா ஆலயம்'
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
3. டோ.இராசரத்தினம்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.


### பாராட்டுப் பெறுவோர்

1. ஏ.பாத்திமா றிபாலா,
பொத்துவில்- 02.
2. திருமதி எம்.ஜோதிநாதன்,
யாழ்ப்பாணம்.
3. ஏ.சி.எம்..அதீப்,
பொலன்னறுவை.
4. ஆ.யாமினி,
கொழும்பு- 06.
5. எம்.எச்.ஏ.ருஸ்னி மிப்ளாக்,
கின்னியா - 06.
6. திரு .ஏ.ஏ.டினேஸ் குமார,
அம்பாறை.
7. செல்வி ஜஷா சஸ்னா அப்துல் ரஹ்மான்,
பேருவளை.
8. பா.சிவதரன்,
தம்பிலுவில்- 01.
9. ஏ.நௌஷாத்,
ஏறாவூர்- 03.
10. ஆர்.குழந்தைவேலு,
திருகோணமலை.
11. எம்.ஏ.எம்.சரீக்,
தர்கா நகர்.
12. திருமதி தவம் கமலநாதன்,
மட்டக்களப்பு.
13. செல்வி எம்.எப்.அஸ்மா,
வெலிகம.
14. எம்.எஸ்.அஹமட் சஹ்மி,
மாத்தறை.
15. தர்மிக்கா தர்மதாஸ்,
மன்னார்.

# இஸ்லாமிய விழுமியங்களை விதந்துரைக்கும் சிறுகதைகளின் தொகுப்பு

## 'மூன்றாம் தலாக்'





'மூன்றாம் தலாக்' ஒரு சிறுகதை தொகுப்பு. ஏ.பி.எம். நிஸ்வான் தமது மூன்று தசாப்த கால படைப்புக்கள் சிலவற்றை மிகவும் சிரமத்துடன் தேடிக் கண்டு பிடித்து அதனை ஒரு தொகுப்பாக வழங்கியிருக்கிறார். தமிழ் இலக்கிய உலகுக்கு இந்த நூல் இன்னொரு நல்வரவாகும். தனது கதைகளை ஒரு தொகுப்பாக நூலுருப் பெற்று சமூகத்தில் உலாவருவதைக் காணுகின்ற மகிழ்ச்சிக்கு ஈடான மகிழ்ச்சி எழுத்தாளனுக்கு வேறொன்றுமில்லை. நிஸ்வானின் முன்னுரையில் அதனை தெளிவாகக் காண முடிகிறது.

தனது முதல் நூலிலே தான் எழுதிய முதல் கதை பிரசுரமான நிகழ்வை நினைவு கூருகையில் ஒரு தாய்மையின் பாசமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

ராதா என்றவொரு ஜனரஞ்சக சஞ்சிகை 1965 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்தது. அவ்விதழில் தான் நிஸ்வானின் முதல் சிறுகதை பிரசுரமானது. அதனை அவர் நினைவு கூருவதை அவர் மொழியில் சொல்வது சுவையானது. 'என்னுரை' என்ற முன்னுரையில் நிஸ்வான் கூறுவதாவது:

''என்கதை வெளிவந்த அன்று எனக்குத் தெரியாது. நான் காலைவேளை வீட்டுத் தேவை ஒன்றுக்காக கடை வீதிக்கு செல்லும் நேரம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்தி தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்திய நற்றமிழ் மொழி அறிஞர் அல்லாமா ம.மு. உவைஸ் அவர்கள், தமது வீட்டு வாசலில் இருந்து கைகளைத் தட்டி முகம் மலர 'அடே நிஸ்வான்!.... இங்கே வா ஒண்ட கத பேப்பரில வந்திருச்சிய'' என்றார். நான் அவர் அருகிலே சென்று எதுலே என்று கேட்டேன். ''இந்த கெழம ராதா பேப்பரிலே வந்திருச்சிய' என்றார். அதன் பிறகு தான் ஓடிப்போய் 'ராதா'வை வாங்கினேன் ''என்கிறார் நிஸ்வான்.

இந்த நிகழ்வு ஓர் உண்மையை வெளிப்படுத்துகிறது. நிஸ்வானின் இளமைக்காலம் இலக்கிய வித்தகராகத் திகழ்ந்த ஓர் இஸ்லாமியத் தமிழறிஞரின் வாழ்வுச் சூழலின் பின்புலமாக அமைந்திருந்தது என்பதாகும்.

நிஸ்வானின் எழுத்து வாழ்க்கை தினகரன் மாணவர் பகுதியில் ஆரம்பமானது. 'ராதா' இதழில் வெளிவந்த கதையின் பின்னர் அநேகமாக இஸ்லாமிய சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலுமே எழுதினார். இன்ஸான், ஜும்ஆ, ரமழான் மலர் என அவருடைய படைப்புக்கள் சிறகு விரிக்கலாயின.

'மூன்றாம் தலாக்' எனும் இந்த நூலில் மறுமணம் - நிதி - சூனியம் - மூன்றாம் தலாக் - சலனம் - அநுபவம் புதுமை - மௌனராகம் - புதுயுகம் - புனித ரமழானிலே - தியாகத் திருநாள் - சோதனை, வேதனை, சாதனை - துன்ப ராகங்கள் - இதுதான் நாகரிகம் - பேரம் - கொடை - முறையீடு - இரத்தக் கண்ணீர் - பணம் பந்தியிலே எனும் தலைப்புக்களிலான பதினெட்டுக் கதைகள் உள்ளடக்கமாகியுள்ளன.

சிறுகதைகள், புதினங்கள் என்பன குறித்த தமது கருத்துக்களை நிஸ்வான் 'என்னுரை'யில் பதித்துள்ளார்.

''சிறுகதை, நாவல் என்பவை தமிழ் மொழியில் புதியவை என்றாலும் தொன்று தொட்டு தமிழ் மொழியில் கதைகள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. தமிழில் சிறுகதைக்கும் நாவலெனும் நெடுங்கதைக்கும் இலக்கணம் வகுத்தோர் பல விதமாகக் கூறினாலும் நான் அறிந்த மட்டில் சமூகம் என்ற வீட்டினுள் இருந்து சாளரம் மூலம் காண்பது சிறுகதை என்றும்; கதவைத் திறந்து பார்ப்பது நாவல் என்றும் குறிப்பிடலாம். இதன் அடிப்படையில் சிறுகதைகள் வாசகர்களின் சிந்தனையிலே முடிவு காண வேண்டும், இந்த வழியில் என்னால் படைக்கப்பட்ட சிறுகதைகளும் அடங்கும் என நம்புகிறேன்'' என்றும் நிஸ்வான் கருத்துக்களை முன்வைக்கிறார்.

இக்கருத்து எந்த அளவுக்கு இன்றைய இலக்கியக் கருத்துக்களுடன் பொருந்துவதாக அமைகின்றது என்பது தர்க்கத்துக்குரியது என்ற போதும் தனது ஆக்க இலக்கியங்கள் - கதைகள் மூலம் தமது கருத்தை எவ்வாறு நிலைநாட்டுவதற்கு முனைகின்றார் என்பது சுவையான சமாச்சாரமாகும்.

இஸ்லாமியத்தின் மாண்புமிகு விழுமியங்களை உள்வாங்கி அவற்றை வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் இணைத்துக் கொள்ளவும், பொருதிக் கொள்ளவும் முனைகின்றார். அவைகளை தேடி அலையும் எழுத்து மனம் இடைவெளிகளைக் காண்கிறது. கதைகளை பிரசவிப்பதன் மூலம் தென்படும் இடைவெளிகளை நிரப்பிவிட முயல்கிறது.

இஸ்லாமிய விழுமியங்களை பேணமல் கணவனின் பெறுமதி யையும் உணராமல் வாழ்கின்ற பெண்களையும், மார்க்கத்துக்கு புறம்பான நடவடிக்கைகளின் மூலமும், யதார்த்த நிலைமை என்ன என்பதை உணராமல் வாழ்க்கையை நடத்திச் செல்பவர்களையும் கதாமாந்தர்களாக்கி மனித வாழ்வில் சாதாரணமாகவே காணக்கூடியவை களாகத் திகழும் இயல்பான நடவடிக்கையே கதையின் நகரும் சதையுமாக வெளிக்கொணரக் கூடிய ஆக்க இலக்கிய ஆற்றல்பல கதைகளை வெற்றிகரமாக வளர்த்தெடுக்க துணையாகின்றன.

'சூனியம்' என்ற கதையை ஓர் உதாரணமாக எடுத்துக் கொண்டால், ஆசிரியரே முன்வந்து வலிந்து சொல்லாமற் சொல்லும் கதையின் பின்புலம் தெளிவாகத் தெரிகிறது. வயிற்றுவலியால் அவதிப்படும் பெண்பிள்ளை, அதற்கு சரியான வைத்திய முறையினை தெளிவுபடுத்திக்கொள்ளத் தெரியாமல் சிங்களவர்களிடையே நம்பிக்கையாக ஊறிக்கிடக்கும் 'தொயில்' போன்ற முறைகளை நாடிச் செல்லும் தந்தை. சரியான வைத்திய முறையை நன்குணர்ந்த சகோதரன் என சிறுகதைக்குள் விரவிக் கிடக்கும் பாத்திரங்கள் எழுத்தாளுமையின் இலட்சணங்களாகவே திகழ்கின்றன. தரமான கதைகளை மேலும் மேலும் வாசிப்பதன் மூலமும், எழுதுவதன் மூலமும் எழுத்து நேர்த்தி அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. ஆரம்பகால கதைகளில் காணப்படும் நாடகத்தன்மைகள் பிற்காலத்தில் எழுதப்பட்ட கதைகளில் குறைந்து வருவதையும், அவற்றுள் சிறுகதைகளின் தன்மை செறிவடைந்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.

'மறுமணம்' என்ற இக்கதையில் பெண்கள் பற்றியதான விடயங்கள் வருகின்றன. பெண்கள் ஒரு சமூகமாக இணைந்து தமது பிரச்சினைகள் குறித்து விவாதிப்பது இன்று சாதாரணவொரு விடயமாகிவிட்டது. இதனால் பல நன்மைகளை பெண் சமூகம் அடைந்துவருகின்றது என்பதும் மறுப்பதற்கில்லை. எனினும் தமது வாழ்வின் ஆதாரமான கணவர்களின் பெறுமதியை உணராமல் பெண்கள் வாழ்க்கை நடத்திச் செல்வார்களேயானால் அதுவே அவர்கள் வாழ்வுக்கு உலைவைப்பதாக அமைந்துவிடும் என்பது உறுதியாகும். இதனை நாடக முறையிலான உத்தியுடனே அமைத்துள்ளார். இத்தகைய உத்திகள் சாதாரண வாசகர்களின் இதயத்தில் ஆழமாக வேரோடத்தக்கவை. ஒரு கருவை மனத்தில் வேரோடச் செய்வதற்கு எழுத்தாளன் இலகுவான உத்திகளை பயன்படுத் துவது தவறாகாது. ஆனால், அதில் முதிர்ச்சி காணப்பட வேண்டும்.

அவர் எழுத்து நடை எளிமையா னது என்றபோதும் சில இடங்களில் சரளமான வாசிப்புக்கு இடையூறாக அமைந்து செல்கின்றது. சில சிக்க லான தகவல்களை கூற முனை கின்றபோது இத்தகைய சோதனை கள் ஏற்படுவது இயல்பானது. எனினும் முழுப்பிரயத்தனத்தில் இவற்றை தவிர்க்கலாம்.

பாணந்துறை சமூதாய மறுமலர்ச்சி இயக்கம் இதனை வெளியிட்டுள்ளது.

எம்.பி.எம்.நிஸ்வான் ரஹ்மத் ஏ, யோனக மாவத்தை, வத்தல்பொளை, கெசல்வத்தை, பாணந்துறை என்ற முகவரிக்கு எழுதி நூலை பெற்றுக் கொள்ளலாம்.

**கே.வி.**







## ஏய் மம்மி ! சோறு போடு!

''அம்மா என்ற அருஞ் சொல்லிருக்க 'மம்மி'என்றே அழைக்கின்றாய்''

''அடடா! கவிதை நல்லா இருக்கே. ஆமா! ஏது இப்புடி திடுதிப்புன்னு கவிதை எழுதவாரம்பிச்சுட்டியே!''

''இது நம்ம கவிதை இல்லே. தனித் தமிழ் அபிமானம் கொண்ட ஒருவருடைய கவிதை.''

''அடிசக்கை!''

''என்னங்க உலகமே சுருங்கிக்கிட்டு போவுது. உலகத்து மொழி எல்லாம் ஒன்று கலந்து சாம்பார் மாதுரி ஒரு புதிய மொழி வரப்போவுது. நீர் என் ஐயா இன்னும் தனித்தமிழ் அப்புடின்னு கொரவளையை புடுங்குறீர்ன்னேன். கவிஞர் கொதிச்சுப் பொயிட்டார். தமிழின் அருமை அறியாது பேசுகின்றீர். பேசுகின்ற சொல்லுக்கும் அர்த்தம் தெரியாமல் உளறுகின்றீர் என்று சாடி விழுந்தார்''

''அடேயங்கப்பா!''

''மம்மி என்ற வேற்று மொழி சொல்லுக்கு அர்த்தம் தெரியுமா? என்று கேட்டார்''

''என்னவாம்?''

''பிணம் அழுத்தமாகச் சொன்னார்.''

''அடக் கடவுளே!''

''பாடசாலை போகும் குழந்தை அம்மாவைப் பார்த்து மம்மி போய் வருகிறேன் என்கிறது. இந்த வசனத்தை முழுமையாக தமிழ்ப்படுத்தி சொல்லிப்பாரும். என்ன முழிக்கிறீர்? சொல்லிப் பாரும் என்ன முடிய வில்லையா? இதோ நான் சொல்கிறேன் கேளும். பொணமே! போய் வருகிறேன். எப்படி சரியா? நன்றாக இருக்கிறதா? அது மட்டும் இல்லை ஐயா இன்னும் கேளுங்கள். பாடசாலைக்கு போய் வரும் குழந்தைக்கு பசியோ பசி. குடலை பிடுங்குகிற அளவுக்குப் பசி. பாவம் குழந்தை! ஏய் மம்மி! சுருக்கா சோறு போடு என்று எரிச்சலோடு கத்துகிறாள். இந்த வசனத்தையும் முழுமையாகத் தமிழ்ப்படுத்தி குழந்தை கத்துவதுபோல கத்திப்பாரும். ஏய்! பொணமே சோறு போடு. அடடா எவ்வளவு ரம்மியமாகவிருக்கிறது அல்லவா... நாற்றமகடிக்கிறது ஐயா!''

''கவிஞன் குதித்து கத்தித் தொலைக்க அடப்பாவி ஆளைவிடுன்னு ஒரே ஓட்டமாக தலை தப்பினால் போதும் என்று தாவி ஓடிவிட்டேன்.''

''அடப்பாவி மனுஷா!''

## "என் ஆத்துக்காரிய 'ஓ' போட்டேன் கூப்டுதேன் நீங்க எப்டி?"

''கவிஞர் பெருமான் ஒருவர் கோபமாக இடை மறிச்சார். 'கலாநிதி எப்புடி அப்புடிச் சொல்லலாம்'ன்னு சீறினார்.''

''எந்த கலாநிதி? என்ன சொன்னார்? திருதிருன்னு முழிச்சுக்கிட்டு நிக்கேன்''

''நம்ம கவிஞர்களின் கவிதைகளை படிச்சிட்டு கண்ணீர் வடிச்சாரமில்லே. அந்த கலாநிதியை கேக்கேன்.''

''அடடா! அதைக் கேட்குரியலா? ஆமா! நம்ம இன்னொரு பேராசிரியரு ஈழத்து படைப்பிலக்கியத்துலே கவிதைதான் ஒசத்தியா வளர்ந்திருக்கின்னு சொல்லியிருக்காரே. அதைப் படிச்சியலா?''

''அப்புடியங்கிரிய! படிக்கல்லியே''

''அதைத்தான் தோஷம் எங்கிறது. கொஞ்சம் விமர்சன ரீதியா முரண் பாடுகளை வெளிப்படுத்திட்டா 'ஆளையே முடிக்கிறேன், விட்டேனா கழுதையே' அப்புடிச் சொல்லி வரிஞ்சு கட்டிக்கிட்டு குதியோ குதின்னு குதிக்கிறது. இதுதான் உங்க பொழப்பாகிப் பொய்டிச்சி''

''கிழிஞ்சுது போ. நான் எதையோ சொல்லுதேன். நீங்க எங்கேயோ இடிக்கிரிய''

''வாஸ்தவம்! வாஸ்தவம்! உம்ம வேதனை புரியரது. ஐயோ! நம்ம கவிதைகளை சரியில்லைன்னு சொல்லிட்டாங்க என்ட கவலை உமக்கு. ஐயா! அது விமர்சனம் கொஞ்சம் எசகு பெசகாத்தான் இருக்கும். அதோட ஓர் இலக்கியச் சண்டை போடனும் அதைவிட்டுப்புட்டு கன்னா பின்னான்னு மஞ்சள் பத்திரிகைக்காரங்க மாதுரி தூஷணத்துலே இறங்கக் கூடாது. இப்புடித்தான் ஒரு புரொபஸரு ஆரு எந்த முரண்பாடாக எழுதினாலும் மனுஷன் தொலைஞ்சான். இவன் முதலாளித்துவவாதி. ஏகாதிபத்தியவாதி, திரிபுவாதி அதையும் மீறி சிலவேளை கழுதை கிழுதை என்றெல்லாம் வேட்டு வைப்பாரு. என்னா அப்பதான் சமூகம் அவரை மாக்ஷிசவாதின்னு சொல்லுமாம்''

''அடப்பாவமே!''

''என்ன பண்ரது. ஆனைக்கும் அடி சறுக்கும்னு சொல்வாங்களே. அதுபோல இவருக்கும் நாக்கு சறுக்கிடிச்சி''

''அது என்ன சமாச்சாரம்?''

''பேராசிரியர் கைலாசபதி நினைவுச் சொற்பொழிவு. இவர்தான் தலைமை. ஒரு தம்பி பென்னம்பெரிய கட்டுரையை எழுதிக்கிட்டு வந்து அதை வாசிச்சு சபையோருக்கு அறுவை சிகிச்சை பண்ணுனாரு. ஏதோ நாடகம் நடக்குதுன்னு பெண்டு பிள்ளைகள்தான் சபையிலே நெறைஞ்சி இருந்தாங்க. இனிப்புக கொடுத்தாங்க. அதுகளை நச்சு நச்சுன்னு மென்னுகிட்டு சபயிலே முக்கால் வாசிப்பேர் தம்பி என்ன வாசிவாசிக்கிறாருன்னு புரியாமல் திருதிருன்னு முழிச்சிக்கிட்டிருந்தாங்க. சங்கடமாத்தான் இருந்துது.''

''ஐய்யய்யோ!''

''ஆனால் நம்ம புரொபஸர் அதை புகழோ புகழ்ன்னு புகழ்ந்து தள்ளு னாரு. சொற்பொழிவு என்ற பேருல எழுதி வாசிச்ச கட்டுரையை பாராட்டினாரு. ஞாபக சக்திங்கிறது ஒரு பெரிய சமாச்சாரம்னு சொன்ன அவரு. அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடி நல்ல ஞாபக சக்தி படைச்சவர் என்று பாராட்டினாரு. அவரும் இப்படித்தான் எழுதி வாசிப் பாராம். ஒருமுறை எழுதி வச்சதை மறந்துவிட்டு வந்துட்டாராம். ஆனால் எழுதினதை நல்ல மனப்பாடம் செஞ்சிருந்த காரணத்தினால் மள மளன்னு வெளுத்துக் கட்டி எல்லார் கிட்டயும் அப்ளாஸ் வாங்கினாராம்''


''அடடா!''

''இதுல உள்ள வில்லங்கத்தை பாத்தியலா! ஞாபக சக்தியின் வல்லமை யைச் சொல்ல, இந்த மாக்ஸிச சிந்தனையாளருக்கு அமெரிக்க ஏகாதி பத்தியத்தின் தலைவர்தான் கெடைச்சிருக்கார். இது எப்படி இருக்குன்னா ஒருத்தன் கர்வமாகச் சொல்றான், 'என் பொஞ்சாதியை 'டி' போட்டுத்தான் எழுப்புவேன்' அதுக்கு மனைவிக்கு பயந்த மத்தவன் சொல்றான், 'ஐயா சாமி என் பொஞ்சாதியை நான் 'டி' போட்ட பொறவுதான் எழுப்புவேன்.''


''கிழிங்சதுபோ!''

கேள்வி: எனக்கு டெங்கு காய்ச்சல் வந்தது. எனது இரத்தப் பரிசோதனையில் வெண் இரத்த கலங்களின் எண்ணிக்கையும், Platelets எனப்படும் குருதி துணிக்கைகளின் எண்ணிக்கையும் மிகவும் வேகமாக குறைந்தன. ஆஸ்பத்திரியில் அனுமதித்து - இறுதியாக Platelet Transfusion செய்தார்கள். உயிர் தப்பி நான் வந்ததே அதிசயம் என்றார் டாக்டர். எனது உறவினர் ஒருவர் எனது நோயைப் பற்றி அறிந்து பாங்கொக்கிலிருந்து ஒரு ஈ-மெயில் அனுப்பியிருந்தார். இந்த டெங்கு நோய் நமது நாட்டில் சகஜம் என்றும் - டெங்கு என்று அறிந்ததும் தினமும் பப்பாசி இலைச்சாறு கொடுத்தால் இரத்த அணுக்கள் தொகை அதிகரிப்பதாகவும் எழுதியிருந்தார். இதுபற்றி விஞ்ஞான கருத்தை அறிவிப்பீர்களா?

# 'சைனஸ்' அழற்சி நோய்க்கு சத்திர சிகிச்சைதான் வழியா?





பதில்: முதலில் இந்த டெங்கு நோய் பற்றிய அடிப்படைக் கருத்துக்களை கவனிப்போம். Arbor Virus எனப்படும் வைரஸ் வகைகளால் ஏற்படுவது இந்த காய்ச்சல். இந்த வைரஸ்களை நோய்க்காவிகளாக - Aedes, Aegypti என்ற வகை நுளம்புகள் காவிச் சென்று பரப்புகின்றன. டெங்கு காய்ச்சல் சாதாரணமாக 'மொழிமுறி' காய்ச்சல் அதாவது, மூட்டுக்களையும் தசைகளையும் பாதித்து மூன்று நாட்களுக்குள் குணமாகிவிடும். சிலவேளைகளில் மூன்று நாட்களின் பின்னர் இந்த வைரஸ்களுக்கு உடலில் எதிர்ப்புச் சக்தி உருவாகி - Antigen - Antibody எனப்படும் பாதுகாப்பு தொழிற்பாட்டினால் இரத்த அணுக்களின் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. இரத்தக் குழாய்களின் சுவர்களில் ஊடுருவும் சக்தி அதிகரித்து (Permeability) இரத்தம் வெளியேறி உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது. இதனை Dengue Haemorrhagic Fever என்பார்கள். இன்னும் சிலருக்கு இரத்த அழுத்தம் குறைந்து மரணம் கூட நேரலாம். இதனை Dengue Shock Syndrome என்பார்கள். ஆனால், டெங்கு காய்ச்சல் வந்த எல்லோருக்கும் இது நேருவதில்லை. எதிர்ப்புசக்தித் தூண்டல் ஏற்படும்போதே இது ஏற்படும். இந்த எதிர்ப்புச்சக்தி தூண்டலுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. டெங்கு வைரஸ்களில் நான்கு பிரிவுகள் உண்டு. ஒரு பிரிவினால் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் மறுதடவை இன்னொரு பிரிவினால் காய்ச்சல் ஏற்படும்போது இப்படியான அதிர்ச்சி ஏற்படுகின்றது என்ற கருத்தைத்தான் இப்பொழுது ஏற்றுக்கொள்கின்றார்கள். எனவே, உங்களுக்கு இம்மாதிரியான செயற்பாடு நடைபெற்றிருக்கலாம். அடுத்ததாக டெங்கு காய்ச்சல் குணமடைய மருந்துகளோ, மாத்திரைகளோ இல்லை. பொதுவாகவே எல்லாவற்றுக்கும் மருந்துகள் இல்லை. வைரஸ் நோய்கள் வராமல் தடுக்க - தடுப்பு மருந்துகள் உள்ளன. ஆனால், டெங்கு காய்ச்சல் தடுப்பு மருந்து பற்றி தீவிர ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, டெங்குக் காய்ச்சலால் ஏற்படும் விளைவுகளை பராமரிப்பதே தற்பொழுது டெங்கு காய்ச்சலுக்குரிய சிகிச்சை முறையாகும். காய்ச்சலால் ஏற்படும் உடலின் நீர் வற்றுத்தன்மை (Dehydration)க்கு நாளம் மூலம் Saline, Dextrose ஏற்றுவதும், இரத்த அணுக்கள் மிகவும் குறைந்தால் இரத்தம் சம்பந்தப்பட்ட பொருட்கள் ஏற்றுவதும் இதில் உள்ளடங்கும். உங்களுக்கு ஏற்பட்ட சிகிச்சை விவரம் இதுதான். இரத்த அணுக்கள் பழைய நிலைமை அடையும் வரை இந்த சிகிச்சையைத் தொடர்ந்து செய்வார்கள்.



இனி 'பப்பாசி' மருத்துவம் பற்றி பார்ப்போம். தென்கிழக்கு நாடுகளான பர்மா, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளில் டெங்கு காய்ச்சல் Endemic எனப்படும். அந்த நாடுகளில் வாழ்க்கையோடு வளர்ந்துகொண்டிருக்கும் காய்ச்சல். டெங்குக் காய்ச்சல் வந்தால் இங்கு போல் அங்கு பெரிய அளவில் கணக்கெடுப்பதில்லை. அங்கும் டெங்கு காய்ச்சல் வந்து சிகிச்சை பெற்றும் மரணிப்பவர்கள் உள்ளனர். அங்கே மக்களோடு மக்களாக டெங்கும் பரவியிருப்பதால்- கை வைத்திய முறைகள் பின்பற்றப்படுகின்றன. அதில் ஒன்றுதான் டெங்கு காய்ச்சலுக்கு பப்பாசி இலையை அரைத்து சாறு எடுத்து தினமும் ஒரு மேசைக்கரண்டி ஒருவேளை அருந்துவது. இதனால் இரத்த அணுக்கள் குறைவது தடை- செய்யப்பட்டு ஓரிரு நாட்களில் இரத்த அணுக்கள் பழைய நிலையை அடைவதாக அறியப்பட்டுள்ளது. ஆனால், இவற்றிற்கு சரியான மருத்துவ ஆதாரங்களோ- மருத்துவ சோதனைகளோ இல்லை. இணைய தளத்தில் இந்த வைத்திய முறைக்கு ஆதரவாகவும், பாதகமாகவும் பல செய்திகள் உள்ளன. என்னைப் பொறுத்தவரையில் - இந்த சிகிச்சை முறையில் பின்விளைவுகள் இல்லை என்பதால், எளிதாக கிடைக்கக்கூடிய இந்த முறையை பின்பற்றுவதில் தப்பு ஏதும் இல்லை. Herbal Medicine எனப்படும் மூலிகை வைத்தியம், எதுவித விஞ்ஞான பரிசோதனைகளையும் சாட்சியாக வைக்காமல் உலகில் பலதரப்பு மக்களிடையே நம்பகத் தன்மையுடன் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஏற்புவலிக்கு மரமஞ்சள் அவித்துக் குடிப்பது போன்றது இம் மூலிகை வைத்தியம்தான். எனவே, மருத்துவ ஆதாரங்களை எதிர்பார்க்காமல், மருத்துவமுறை ஒன்று தீமை செய்யாமல் நன்மை செய்யும் என்றால், நாம் அதை கைக்கொள்வது சரியென்றே எண்ணுகின்றேன்.

கேள்வி: ஆண், வயது 28- எனக்கு 'சைனஸ்' பிரச்சினை ஏற்பட்டது. மருந்துகள் உபயோகித்தும் சுகம் காணாதபடியால் - ENT நிபுணரின் ஆலோசனையில் சத்திரசிகிச்சை செய்தேன். இதன் பின்னர் 6 மாதகாலம் சுகமாக இருந்தேன். இப்பொழுது திரும்பவும் எனக்கு 'சைனஸ்' வந்து கஷ்டப்படுகின்றேன். அதே வைத்திய நிபுணரிடம் காட்டியபோது திரும்பவும் சத்திரசிகிச்சை செய்யச் சொன்னார். இப்படியே வாழ்நாள் பூராகவும் நான் சைனஸ் பிரச்சினையும், சத்திரசிகிச்சையுமாக கழிப்பதா? ஆயுர்வேத மருத்துவ எண்ணெய் வைத்தால் 'சைனஸ்' பிரச்சினையை முற்றாகக் குணப்படுத்தலாம் என்கிறார்கள். இது உண்மையா, பரிகாரம் கூறவும்?



பதில்: நமது பக்கம் சைனஸ் பிரச்சினை என்று கூறும்போது - Sinusitis எனப்படும் தலை எலும்புகளின் காற்றறைக்குள் ஏற்படும் தொற்று, காலையில் எழுந்ததும் தும்மல் மூக்கடைப்பு என்று ஏற்படும் Rhinitis என்கின்ற ஒவ்வாமையால் அழற்சியுறும் இந்த காற்றறைகளின் கோளாறு மற்றும் மூக்கினுள் வளரும் சதையினால் (Polyps) ஏற்படும் பிரச்சினை - என்பவற்றையெல்லாம் சைனஸ் பிரச்சினை என்ற தொகுதிக்குள் உள்ளடக்கி குறிப்பிடுவார்கள். ஆனால், இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு பிரச்சினைகள். இவற்றின் சிகிச்சை முறையும் வெவ்வேறானதே. உங்கள் கேள்வியில் 'சைனஸ்' பிரச்சினை பற்றி விரிவான விளக்கம் ஒன்றுமில்லை. என்றாலும் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு சத்திரசிகிச்சை செய்தது, அதன் பின்னர் கொஞ்ச நாட்கள் சுகமாக இருந்தது, திரும்பவும் அதே பிரச்சினை தொடர்வது என்ற விவரங்களை வைத்து நோக்குமிடத்து உங்களுக்கு ஏற்பட்டிருப்பது பெரும்பாலும் அலர்ஜி அல்லது ஒவ்வாமை காரணமாக மூக்கினுள் Polyp எனப்படும் கட்டிகள் வளர்ந்து அவற்றால் ஏற்பட்ட 'சைனஸ்' பிரச்சினை என்று கருத முடிகின்றது. 5முதல் 10 சதவீதமானோருக்கு சத்திரசிகிச்சை செய்தபின்னரும் இந்த சதை வளர்ச்சிக்கு காரணமாக இருக்கும் ஒவ்வாமைக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படாவிடில் திரும்பவும் சதை வளர்ச்சி பெறும். எனவே, சதை வளர்ச்சிக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவேண்டும். இன்னும் சிலர் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் உபயோகிக்க தந்த மூக்கினுள் இடும் மருந்தை குறிப்பிட்ட காலத்திற்கும் மேலாக தொடர்ந்தும் உபயோகித்து வருவர். இதனாலும் சதை வளர வாய்ப்புண்டு. சாதாரணமாக சத்திரசிகிச்சைக்குப் பின்னர் 3 மாதத்திற்கு ஒருமுறை காது, மூக்கு, தொண்டை நிபுணரிடம் பரிசோதித்துக் கொள்வது நல்லது.

உங்களுக்கு திரும்பவும் சதைவளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிந்தால் அது ஒரு புதிய முன்னையதோடு சம்பந்தப்படாத சதை வளர்ச்சியாகவும் இருக்கலாம். அது தீர்க்கப்படாத உங்கள் ஒவ்வாமை நிலையால் ஏற்பட்டிருக்கலாம். எனவே, அந்த நோக்கிலும் சிகிச்சை பெறுவது நல்லது. சைனஸ் பிரச்சினை தீர ஆயுர்வேத எண்ணெய் மருந்துகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால், அந்த சத்திரசிகிச்சை முறையில் மருத்துவ ஆதாரங்கள் இல்லாவிடிலும் குணமடைந்தவர்கள் பலர் உண்டு. பக்க விளைவுகள் இல்லாத இந்த சிகிச்சையை நீங்கள் செய்து பார்க்கலாம்.

இலவச மருத்துவ
ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு-14.


டயலொக் கட்டணங்கள்
பாரியளவு குறைக்கப்பட்டுள்ளன
Dialog kit
Keep In Touch
PEAK
D2D
ரூபா. 7 4
Dialog kit லிருந்து மற்றைய வலையமைப்புக்களுக்கு ரூபா. 7 6
PEAK
குறிப்பிட்ட வரிகள் உள்ளடக்கப்பட்ட வேண்டும்

# ஒரு பூச்சியின் ...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குளவி தன் இறக்கைகளைப் படபட வென்று அடித்துக்கொள்ள சிலந்தி அதை மற்றொரு மூலைக்குச் சென்று கவனித்தது.

"வரம் கொடுத்தால் மக்கள் அதிக ஆசைப்பட்டு அதிபுத்திசாலித்தனமாகக் கேட்கிறார்கள். அதனால்தான் ஒரு வரம் மட்டும் தரலாம் என்று விதி மாற்றப்பட்டிருக்கிறது."

"உயிர் பிழைக்க மூன்று வரங்கள் தரமாட்டாயா?"

"ம்ஹூம் சொரி, ஒரே ஒரு வரம் தான்"

"என்னத்தைக் கேட்பேன்?" என்று பெருமூச்சுவிட்டான் ஹென்றி.

"காப்பாற்று முதலில். அப்புறம் வரத்தை யோசனை செய்யலாம்."

"மாட்டேன் ஜீனிக்கள் ஏமாற்றும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அய்யோ... சரி சரி. சிந்தி, யோசி. ஏதாவது கேட்டுத்தொலை."

ஹென்றி கடுமையாக யோசித்தான். சுவரின் மேல் மூலையில் அந்த நாடகத்தைக் கவலையோடு பார்த்துக்கொண்டே யோசித்தான். வரம் தருவோன் இறந்துவிடப்போகிறான் அதற்குள் நல்ல வரமாக யோசித்துவிட வேண்டும்.

"சொத்து! நிறையச் சொத்து கொடு. பணம் இருந்தால் எல்லாம் வரும்!"

"சரி, பணம்! இந்தா வாங்கிக் கொள் வரம்!"

சட்டென்று சூடான ஊதல் காற்று கேட்டது. மஞ்சள் மின்னல் அடித்தது. ஹென்றியின் அறை முழுவதும் டொலர் நோட்டுக்களாக நிரம்பின. ஆங்காங்கே பவளம், முத்து, வைரம், வைடூரியம் என்று தெரிந்தன. பற்பல கற்கள் பதித்த மோதிரங்கள் தெரிந்தன.

"இப்போது திருப்திதானே? காப்பாற்று என்னை"

ஹென்றி தலையைத் தடவிக்கொண்டான். தன் ஒல்லியான தேகத்தைப் பார்த்துக்கொண்டான். அதிலேயும் ஒரு சின்னத் தொந்தி. கண்ணுக்குக் கண்ணாடி.

"பணமும் அதன் பலமும் இருந்தும், அதனால் கிடைக்கும் சுயநல நண்பர்கள் கிடைத்தும் ஏன் இந்த அழகற்ற வடிவத்துடன் நான் வாழ வேண்டும்?"

"ஓகே, ஓகே. இந்தா" என்றது ஜீனி, விசும்பலுடன்.

மறுபடி ஊஷ் என்ற காற்று, எலும்பிச்சை நிற மின்னல். ஹென்றியைச் சுற்றிலும் இருந்த கரன்சி நோட்டுகள் மறைந்துபோய் அவன் உடல் அமைப்பில் மாறுதல்கள் ஏற்பட ஆரம்பித்தன. அவன் உயரம் ஆறு அடி நாலு அங்குலம். அகலமான தோள்கள், அழுந்தின வயிறு, தலையைத் தொட்டுப் பார்த்தால் கரிய ரோமக் கூரை. ஹென்றி ஆரோக்கியமாகவும் உணர்ந்தான். வாய்க்குள் இருந்த பொக்கைப் பற்கள் மறைந்து அழகான பற்கள் அமைந்து, முகப்பருக்கள் கரைந்து, தசை நார்கள் இறுகி..

"எப்படி இருக்கிறேன்?" என்றான் நடுங்கிக்கொண்டே.

"ஹொலிவுட் நடிகன் போல. சீக்கிரம்பா, காப்பாத்துப்பா. கிட்ட வருதுப்பா?"

"பணம் அழகு இரண்டையும் ஒரு வரமா சேர்த்துக் கேட்க முடியுமா?"

"ம்ஹூம் இம்பாஸிபிள். பணம் அல்லது அழகு ஏதாவது ஒண்ணுதான்."

"அழகா இருந்து என்ன பயன்? ஏழை அல்லவா நான்?"

"புகழ் இருந்தா எப்படி இருந்தாலும் கவலையில்லை.. மக்கள் உன்னை விரும்புவாங்க. என்ன..... சரியா? புகழ் கொடுக்கட்டுமா?"

ஹென்றி யோசித்து, "அப்படித்தான் தோணுது" என்றான்.

"அப்ப இந்தா, வாங்கிக்க."

மறுபடி காற்று, மின்னல். ஹென்றி காற்று நீக்கப்பட்ட பலூன் போலச் சுருங்கிப்போனான். பழைய வடிவத்தை அடைந்துவிட்டான். அந்தக் கணமே போன் அடித்தது. அறைக்கதவு திறந்தது. அழகான பெண்கள் சிவந்த கதகதப்பான உதடுகளுடன், ஜொலிக்கும் கண்களுடன் 'ஹென்றி ஹென்றி' என்று அழைத்துக் கொண்டே உள்ளே வர, அவர்களில் ஒருத்தியை அணைத்துக்கொள்ள அவன் முயன்ற போது அவள் புறப்பட, அவன் அவள் பின் செல்ல....

"ஏய் எங்கே போறே? வா" என்று கீச்சுக் குரலில் ஜீனி கத்தியது. மறுபடி விர்ர் கேட்டது?.

ஹென்றி கீழே விழுந்தான். சட்டென்று அறையில் இருந்த பெண்கள் மறைந்துபோக, "ஸொரி நான் ஓடிப் போக நினைக்கவில்லை, நான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுட்டேன்."

"போதும், போதும், மூணு வரத்தில ஏதாவது ஒரு வரம் தேர்ந்தேடு. டிரையல் பார்த்தது போதும்" ஹென்றி சிலந்தி வலையைப் பார்த்தான். நிலைமை மோசமாகத்தான் இருந்தது. சிலந்தியின் நீண்ட கால்களுக்கு அருகே அந்தப் பூச்சி இருந்தது. பறக்க முயன்று துடித்து விர்ரியது.

"காப்பாற்றினா இதில் ஒரு வரம் தருவாய்தானே?"

"சரி சரி, சரி! சீக்கிரம் சீக்கிரம்."

ஹென்றி தீர்மானித்து விட்டான்.

சமையல் அறையிலிருந்து ஒரு சுத்தியல் எடுத்துக் கொண்டு திரும்ப வந்தான். "கொஞ்ச நேரம் அசங்காம இரு. குறி தவறிவிடும்."

"சரிப்பா. சீக்கிரம் அவனைக் கொல்லுப்பா" என்று ஏறக்குறைய அழுதது ஜீனி.

ஹென்றி சுத்தியலைப் பலமாக அடித்தான். சிலந்தி சுவரிலேயே பச்சக் என்று கூழாகியது. ஹென்றி சுத்தியலைக் கீழே போட்டான். "இனிமே உனக்கு விடுதலை" என்றான் குளவியைப் பார்த்து.

மௌனம்!

"உனக்கு விடுதலைப்பா, சுதந்திரம்! உன்னைக் கொல்ல வந்த சிலந்தியைக் கொன்னாச்சு!" என்ற குளவியைத் தன் விரலால் நெருடினான். குளவி சுள் என்று கொட்டியது. ஹென்றி ஆச்சரியத்துடன் தன் விரல் வீக்கத்தைப் பார்த்து,

"உன் உயிரைக் காப்பாத்தினதுக்கு இதுதான் கைம்மாறா?"

மௌனம். ஹென்றி சிந்தித்தான். அவனுக்குச் சட்டென்று ஒரு சந்தேகம் தோன்றியது. டெலிபோனை நோக்கி ஓடினான். அருங்காட்சியத்தின் 'நேச்சுரல் ஹிஸ்டரி' பகுதியைக் கூப்பிட்டான்.

"சார், சிலந்திக்கு எதிரிகள் ஏதாவது உண்டா?"

"ஏன் இல்லை? பறவைகள், தேரை, 'இங்நியுமா'ன்னுட்டு ஒரு ஈ வகை.. அப்புறம் வேட்டையாடும் குளவி."

"குளவியா? போச்சுரா!"

என்ன ஒரு முட்டாள்தனம்! இது வரை அவனுடன் சின்னக்குரலில் பேசிக் கொண்டிருந்தது குளவியில்லை. அந்தச் சிலந்திதான்.

இரண்டு சின்னப்பூச்சிகள் அத்தனை அருகாமையில் இருக்கும் போது, எப்படி அவற்றின் வாயசைப்பைக் கவனிக்க முடியும்? பேசியது சிலந்தி! வரம் தருவோனைக் கொன்று விட்டேன்! ஜீனியைக் கொன்று விட்டேன்!

ஹென்றி அந்த வீட்டைக் காலி செய்துவிட்டான். காரணம் அதன் விட்ட மூலையில் இருந்த கறை அவனைப் பைத்தியமாக அடித்துவிடும் போல இருந்தது.

(நன்றிசுஜாதா)

# சாதனா அனாதை ....

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுத சக்திக்கு முன்னால் நிராயுதபாணியாக நின்று போராடி வேட்டுக்களை நெஞ்சில் தாங்கி உயிரிழந்தவர் தன் உடல் மண்ணில் வீழும் வரை தான் கரம் பற்றி சாதனா, சாகித்தியனாக மண்ணில் ஈன்ற தன் துணையாளின் கற்புக்காக போராடி உயிர் விட்டவர்.

கற்பிழந்து வாழக்கூடாதென்று தன் குழந்தைகளையும் இழுத்துக்கொண்டு வேட்டுக்கள் உடலை சல்லடையாக்க இரு செல்வங்களையும் அயலவர்களிடம் ஒப்படைத்து விட்டு மாண்டுபோனாள் மங்கை நாகேஸ்வரி. தந்தையும், தாயும் கொலை செய்யப்பட்ட கோரத்தை கண்டவர்கள் சாதனாவும் சாகித்தியனும். சிறு காயங்களுடன் உயிர் தப்பி, அந்தரித்து நின்றவர்களை ஆதரவாய் கரம் பற்றியது இந்த இல்லம். நன்றாய் கற்று உயர்தரம் முடித்து யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் இசைத்துறையைக் கற்று இசையாசிரியையாக சாதனா. மிளிர உயர்தரம் முடித்து பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி கிடைத்த போதும் தன் பெற்றோரை அழித்த சிங்கள இன வெறியர்களை அழிக்க வேண்டுமென்று கள முனையில் தளபதியாக சாகித்தியன் மிளிர்கிறான். பெற்றோரையும் தம்பியையும் மனத்துக்குள் நினைத்து மானசீகமாய் ஆசீர்வாதத்தையும் பெற்று திருமணபந்தத்தில் இணைந்த சாதனா சான்றோரை வளர்த்தெடுக்கும் கல்வித்துறையிலும், செந்தில் சிறுவர் இல்லத்தின் வளர்ச்சிக்காகவும் பணியாற்ற திட சங்கற்பம் பூண்டு வாழ்க்கைப் பயணத்தின் புதிய அத்தியாயத்தில் காலடி எடுத்து வைத்தனர்.

# ராசி பலன்

**17-12-2007 முதல் 23-12-2007 வரை**

பொ. சந்திரலிங்கம்

## மேஷம்

அஸ்வினி, பரணி, கார்த்திகை 1.



காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் வரும் செலவாகிவிடும். உறவினர் அயலவர் அன்பு பாராட்டுவர். பெற்றோர் நலம். நல்ல இருப்பிடம் வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறைகாட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேற்றம் குறைய லாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்

## துலாம்

சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3



காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

## இடபம்

கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2



காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை உண்டு பண்ணலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உண்டு.

## விருச்சிகம்

விசாகம் 4, அனுசம், கேட்டை



காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர்களுடன் நல்லுறவுக் கானவாய்ப்புகள் குறைவு. தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு வாகனங்களால் செலவு ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

## மிதுனம்

மிருகசீரிடம்3,4 திருவாதிரை, புனர்பூசம்1,2,3



காரியத் தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனங்களால் செலவு உண்டாகலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்கள் பகைகொள்ளக் கூடும்.

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1



காரியத் தடை இருக்கும். பணம் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவார். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறைவேறும்.

## கடகம்

புனர் பூசம் 4 , பூசம், ஆயிலியம்



காரிய தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார், உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம் முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக ஈடுபாடு குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மகரம்

உத்தராடம்2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2



காரிய தடை இருக்கும். பணப் பற் றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புஉண்டு. முதலீடுகளில் அவதானம் வேண்டும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக ஈடுபாடு குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தொழில் முன்னேற்றம் குறையலாம்.

## சிம்மம்

மகம், பூரம், உத்தராடம் 1



காரியத் தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகள் அமைய வாய்ப்பு உண்டு. அதிஷ்டம் உண்டு. தெய்வீக ஈடுபாடு இருக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## கும்பம்

அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3



காரியத்தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில் துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

## கன்னி

உத்தரம் 2,3,4 அத்தம், சித்தரை 1,2



காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் பகைகொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு வாகனங்கள் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளில் அவதானம் வேண்டும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

## மீனம்

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி



காரிய தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பரஸ்பரம் உதவி இருக்கும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் இருக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.



# சிங்க நடனம்



இந்தோனேசிய நடனக் கலைஞர் ஒருவர் அந்நாட்டு பாரம்பரிய ரியோக் போனோரோகோ என்ற சிங்க நடனமாடி பார்வையாளர்களை கவர்ந்தார்.


නීගිණතෙන් හොඳම තැනක්.

The Kingdom

KANDY - HEERASSAGALA

A city of rich heritage

An opportunity to

be a part of it

Kandy Heerassagala

Rs. 45,000/- per perch upwards




Call: 0714 756048

PRIME LANDS (PVT) LTD.

No. 237, D. S. Senanayake Veediya, Kandy.

081 220 38 20

e-mail: info@primelands.lk Web: www.primelands.lk

Head Office: 75, D. S. Senanayake Mawatha, Borella. Tel: 011 2699822 Or 011 2692...

Approved by Central Environment Authority



நீங்கள் உங்கள் குழந்தைக்கு ஓர் ஆரோக்கியமான, மதிநுட்பத்துடன் கூடிய எதிர்காலமொன்றை பெற்றுக்கொடுக்கின்றீர்களா ?

Cow & Gate

Step-Up 3





யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையும் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையும் இணைந்து முதல் தடவையாக கடந்த ஞாயிறன்று கரோல் ஆராதனை நடத்தின.

வெள்ளவத்தை மூர் வீதி மெதடிஸ்த திருச்சபையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பழைய மாணவர்களான மூர்வீதி மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக்குரு அருட்திரு எஸ்.எஸ். கருணைராஜ், மெதடிஸ்த திருச்சபையின் மத்திய மாவட்டத் தலைவர் அருட்திரு சத்தி தம்பிராஜா, பிலிமத்தலாவை வேதாகமக் கல்லூரி அதிபர் அருட் திரு. கலாநிதி ஏ.டபிள்யூ. ஜெயநேசன், அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த அருட் திரு.ஜே. ஜெயச்சந்திரன் மற்றும் வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரியின் தற்போதைய அதிபர் திருமதி பி.பொன்னம்பலம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


Windsor Waves Residencies

Three Bed Roomed Luxury Apartments

தெஹிவளை.... Windsor Avanue இல்


ஆடம்பரமான வாழ்க்கைக்கு

அளவான விலையில்

அழகான மனைகள்

Special Discounts for full Payments

HOTLINE
0714172644,
0714273400.



BASRAN BUILDERS

Basran Builders Developers (Pvt) Ltd,

No.30, Windsor Avenue, Dehiwela.

Email - basranbuilders@gmail.com, Web - www.basranonline.com






HOTEL WESTEERN PVT LTD

உங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம். ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். வித்தியாசத்தை உணர்வீர்கள்.

No.35, Frankfurt Place, Bambalapitiya, Colombo -

T.P:+94 11 2507161, +94 11 2507163, +94 4518485

Fax:+94 11 4518481 E-mail:info@hotelwesteern.co...

Website:www.hotelwesteern.com